வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



தெளிவான வானிலை. சிறு மழைக்கான சாத்தியம் உண்டு.

30°C 28°C

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 241 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஆடி 09, வியாழன் 25.07.2013

# இலங்கையில் இறுதிப்போரின் போது சர்வதேச நாடுகள் பொறுப்பற்ற போக்கு

## கடுமையாகச் சாடுகிறது அல்பிரிட் குழு

நியூயோர்க், ஜூலை 25
இலங்கையின் இறுதிக் கட்டப் போரின் போது தமிழ் மக்கள் கொல்லப்பட்டும், பாதிப்பை எதிர்கொண்டும் அல்லற்பட்ட வேளையில் சர்வதேசசமூகம் வெறுமனே அறிக்கைகளை வெளியிட்டதைத் தவிர வேறு எந்தக் காத்திரமான முனைப்புக்களையும் மேற்கொள்ளவில்லை என அமெரிக்கா குற்றச்சாட்டு முன்வைத்துள்ளது.

அமெரிக்காவின் முன்னாள் ராஜாங்கச் செயலர் மெடலின் அல்பிரிட் தலைமையிலான குழுவே இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளது.

இலங்கையின் இறுதிக்கட்டப் போரின் போது 'பாதுகாப்பதற்கான உரிமை' என்ற முக்கிய பொறுப்பை சர்வதேச நாடுகள் உதாசீனம் செய்துள்ளதாக அல்பிரிட் குற்றம் சுமத்தியுள்ளார்.

இனச் சுத்திகரிப்பு, போர்க் குற்றங்கள் மனிதாபிமானத்துக்கு எதிரான வன்முறைகள் போன்ற விடயங்கள் குறித்துப் பாதுகாப்பதற்கான உரிமை (Right to protect) அறிக்கை கவனம் செலுத்துவது வழமையானதாகும்.

ஐக்கியநாடுகள் சபை மற்றும் உலக நாடுகள் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கத் தவறியதனால் ஆயிரக்கணக்கான தமிழர்கள் இறுதிக்கட்டப் போரின்

தொடர்ச்சி: பக்கம் 21

## பண்டாரவன்னியன் நினைவிடத்தில் மக்களைக் குடியேற்ற முயற்சிகள்

முல்லைத்தீவு, ஜூலை 25
அரசால், பண்டாரவன்னியனின் நினைவிடமாக ஒதுக்கப்பட்டிருந்த, முல்லைத்தீவு கற்பூரப் புல்வெளியில் 10 ஏக்கர் காணியில் முஸ்லிம் மக்களை குடியேற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன.

கடந்த சில நாள்களாகக் குறித்த பகுதியில் 'பைக்கோ' இயந்திரங்களைக் கொண்டு பெரும் மரங்கள் வேரோடு சரிக்கப்பட்டுத் துப்புரவுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

குமுழமுனை - தண்ணீரூற்று வீதியில் 4 ஆம் கட்டைப் பகுதியில் கற்பூரப் புல்வெளி என்ற இடத்திலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வன்னியை ஆண்ட கடைசி மன்னனான பண்டார வன்னியன், வெள்ளையர்களுடன் போரிட்டு வெற்றி கொண்ட

தொடர்ச்சி: பக்கம் 21

### இந்தியா



பக். 06

தன்மானத்தைக் கைவிடோம்

### உலகம்



பக். 07

ஊடுருவல்கள் குறித்து கண்டுகொள்ளக் கூடாது

### விளையாட்டு



பக். 23

கோஹ்லி அபார சதம் வீழ்ந்தது சிம்பாப்வே

# ஆஸி. படகு விபத்தில் 28 குழந்தைகள் மாயம்

## மேலும் 23 பேரை காணவில்லை நால்வர் நேற்று சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 180 பேர் உட்பட 208 புகலிடக் கோரிக்கையாளர்களுடன் இந்தோனேஷியாவில் இருந்து ஆஸ்திரேலியா நோக்கிச் சென்ற படகு கடலில் மூழ்கியதில் 28 குழந்தைகள் உட்பட 51 பேர் காணாமற்போயுள்ளனர்.

நேற்று மாலை 4 பேரின் சடலங்கள் கரையொதுங்கியதாகவும் அதில் இருவர் குழந்தைகள் எனவும் ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பில் ஆஸ்திரேலியா எடுத்துள்ள புதிய கொள்கையின் பின்னர் இடம்பெற்ற படகு விபத்து இதுவாகும்.

இந்தோனேஷியாவிலிருந்து 208 புகலிடக்கோரிக்கையாளர்களுடன்படகு ஒன்று நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு புறப்பட்டுள்ளது. இதில் 180 தமிழர்களும் மத்திய கிழக்கு நாடொன்றைச் சேர்ந்த 28 பேரும் பயணித்துள்ளனர்.

படகு புறப்பட்டு நான்கு மணி நேரத்தின் பின்பு ஜாவா தீவுக்கு அருகில் கடல் அலையால் எத்துண்டு, பாறையில் மோதி நடுக்கடலில் கவிழ்ந்தது.

படகில் 125 உயிர்காக்கும் அங்கிகள் இருந்தன. படகு மூழ்கிய இடத்துக்கு அருகில் இந்தோனேஷிய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்துள்ளனர். இதனால் உடனடியாகவே மூழ்கியவர்கள் மீன்பிடிப் படகுகள் மூலம் காப்பாற்றப்பட்டுள்ளனர்.



நேற்று புதன்கிழமை மாலை வரை 157 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். படகில் சென்ற 28 குழந்தைகளில் இரு குழந்தைகளின் சடலங்கள் மாத்திரமே நேற்று மாலை வரை மீட்கப்பட்டுள்

தொடர்ச்சி: பக்கம் 21

## பிரிட்டன் எம்.பிக்களை சந்திக்க மறுத்த ஜனாதிபதி

கொழும்பு, ஜூலை 25
பிரிட்டன்பிரஜையின் கொலை தொடர்பில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நியாயம் கேட்கப்போவதாக பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஊடகங்களுக்கு தெரிவித்ததையடுத்து பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவுடனான சந்திப்பை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ரத்துச் செய்துள்ளார் என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் எழுப்பப்படவுள்ள பிரச்சினைகள் குறித்து, சந்திப்பில் முன்னதாகவே ஊடகங்களிடம் கருத்து வெளியிடுவது முற்றிலும் பொருத்தமற்றது எனக் குறிப்பிட்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சு, குறித்த கொலை தொடர்பான வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

பிரிட்டன் சுற்றுலாப் பயணியின் கொலையுடன் தொடர்புடைய இலங்கையின் ஆளும் கட்சிப் பிரமுகர்களை இலங்கை அரசு பாதுகாத்து வருவதாக பிரிட்டன் விசனம் வெளியிட்டுள்ளது. (த-5)

## வன்னியில் சுவரொட்டிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
"மாவை அண்ணன் ஆணையிட்டால் புரட்சி வெடிக்கும்" என்ற வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களில் பரவலாக ஒட்டப்பட்டுள்ளன.

வடமாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக மாவை. சேனாதிராசா தெரிவுசெய்யப்படாமை தொடர்பில் தமிழரசுக் கட்சியின் தலைவர் இரா.சம்பந்தனைக் கடுமையாகச் சாடியே இலங்கைத் தமிழரசுக் கட்சி என்ற பெயரில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

''உண்ணாவிரதம் மறியலுக்கு மாவை அண்ணன், மகுடம் சூடுவது விக்னேஸ்வரனா?'',

''சந்தி சிரிக்க வைக்க பெற்ற தொகை எவ்வளவு?'', ''சம்பந்தன் ஐயா உங்கள் முதலமைச்சருக்கு கோணாவிலும், கேப்பாபிலவும் தெரியுமா?'' போன்ற வாசகங்கள் இந்தச் சுவரொட்டிகளில் அச்சிடப்பட்டிருந்தன. (த-5)

## பிரி. பிரதமர் இல்லத்தின் முன் கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வு

லண்டன், ஜூலை 25
1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்கள் நினைவாக பிரிட்டிஷ் பிரதமரின் வீட்டின் முன்பாக மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செய்யப்பட்டதுடன், பொதுநலவாய மாநாட்டைப் பிரிட்டிஷ் பிரதமரும், இளவரசர் சார்ள்ஸும் புறக்கணிக்க வேண்டும் என்று கவனயீர்ப்புப் போராட்டமும் பிரிட்டன் தமிழர் பேரவையால் நடத்தப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் செவ்

தொடர்ச்சி: பக்கம் 21




## 2 மனித மண்டையோடுகள் மாதகலில் நேற்றும் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
இராணுவத்தின் உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து விடுவிக்கப்பட்ட மாதகல் மேற்குப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக மனித மண்டையோடுகள், எலும்புக் கூடுகள் என்பன மீட்கப்பட்டு வருகின்றன.

நேற்றுப் புதன்கிழமை இரண்டு மனித மண்டையோடுகள் மற்றும் பல் தாடைகள், எலும்புகள் என்பன இந்தப் பகுதியில் உள்ள மலசல கூட குழி ஒன்றை மீள்நிர்மாணம் செய்ய முற்பட்டபோது மீட்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரால் யாழ். குடாநாடு கைப்பற்றப்பட்ட பின்னர் மாதகல் மேற்குப் பகுதி உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு கடந்த வருடமே விடுவிக்கப்பட்டது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு அண்மையிலும் இதேபோன்று மலசலகூடம் ஒன்றை அமைப்பதற்காக அத்திபாரம் வெட்டப்பட்ட போது அந்தக் குழியிலிருந்து மண்டையோடுகள் மற்றும் எலும்புக் கூடுகள் என்பன மீட்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேனன் விரித்த வலையில் சிக்கியுள்ளது இலங்கை அரசு

## குணதாச அமரசேகர சாடல்

கொழும்பு,ஜூலை 25
இந்தியாவின் தேசிய பாதுகாப்புச் செயலர் சிவ்சங்கர் மேனன் விரித்த வலையில், இலங்கை அரசு வீழ்ந்துவிட்டதாக குற்றம்சாட்டியுள்ளது சிங்களத் தேசிய வாத அமைப்பான தேசப்பற்று தேசிய இயக்கம்.

இது தொடர்பாக தேசப்பற்று தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்னர், காணி, பொலிஸ் அதிகாரங்களைஇல்லாமல்செய்ய வேண்டும் என்றே இலங்கை அரசைக் கோருகிறோம்.

ஆனால், அரசு அதற்குச் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை. மாறாக, இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் விரித்த வலையில் அரசு சிக்கிக் கொண்டுள்ளது.

அடுத்த ஆண்டு இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் நடக்கவுள்ளது. அதுவரை 13ஆவது திருத்தச் சட்டத்தில் இலங்கை அரசு கை வைக்கக் கூடாது என்பதே சிவ்சங்கர் மேனன் விரித்த வலை.இலங்கை அரசு இதில் மீள முடியாமல் சிக்கிக் கொண்டுள்ளது.அரசு நாட்டைக் குறித்துச் சிந்திப்பதில்லை .பொதுநலவாய மாநாட்டின் தலைமைப் பதவியை பெற்றுக் கொள்வதே அதற்கு முக்கியமாகவுள்ளது.

எனவே தான், 13ஆவது திருத்தச் சட்டத்தில் பொலிஸ், காணி அதிகாரங்களின் பயங்கரத்தை உதறித்தள்ளி விட்டு, வடக்கில் தேர்தலை நடத்தப் போகிறது.

இந்தத் தேர்தலின் பின்னர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் தனித் தமிழீழத்துக்கான விஸ்வரூபத்தை எடுக்கும்.

பிரிட்டன் நாடாளுமன்றக் குழுவுக்கு புதுமாத்தளனுக்கும் கிளிநொச்சிக்கும் செல்வதற்கு அரசு அனுமதி வழங்கக்கூடாது. அனுமதி வழங்கினால் மேலும் மேலும் அனைத்துலக அழுத்தங்கள் அதிகரிக்கும்–என்றார். (த)



# இலங்கையின் பொதுத்துறை மிகப் பலவீனமான நிலையில்

## 'கோப்' அறிக்கை சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 25
நாட்டின் பொதுத்துறை பலவீனமான நிலையில் காணப்படுவதாகக் 'கோப்' இறுதி அறிக்கைப் பரிந்துரைகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிரேஸ்ட அமைச்சர்டியூ.குணசேகர தலைமையில் இந்தக் குழுநேற்று முன் தினம் நாடாளுமன்றில் அறிக்கையைச் சமர்ப்பித்திருந்து.

பொதுத்துறை நிறுவனங்கள் நட்டமடைவதற்கான காரணங்கள் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. பொதுத்துறைச் சேவைகள் வீழ்ச்சியடைவதனைத் தடுப்பதற்கு பொதுத்துறை ஊழியர்களின் சம்பளங்கள் உயர்த்தப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 16 அரச நிறுவனங்கள் பாரிய நட்டத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், மிஹின் எயார், இலங்கை மின்சார சபை உள்ளிட்ட முக்கிய நிறுவனங்களும் நட்டத்தில் இயங்கி வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுத்துறைச் சேவையின் தொழில்சார் நிலைமையை மேம்படுத்த வேண்டும் எனவும் அதற்கு தற்போதைய சம்பள முறைமைகள் வழியமைக்காது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

காத்திரமான சேவைகளைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த தொழில்சார் தகைமையுடையவர்கள் பணியில் அமர்த்தப்பட்டு அவர்களுக்கு நியாயமான சம்பளம் வழங்கப்பட வேண்டுமெனவும் அந்த அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. (த)

# வடக்கின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு யு.எஸ்.எயிட் உதவி வழங்க வேண்டும்

## அமெ.அதிகாரியிடம் சித்தார்த்தன் கோரிக்கை

வடமராட்சி, ஜூலை 25
வடக்கு மாகாண சபையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிய பின்னர், போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக முன்னெடுக்கப்படும் திட்டங்களுக்கு யு.எஸ்.எயிட் நிதியுதவி வழங்க வேண்டும் என்று புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் கோரியுள்ளார்.

யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்த யு.எஸ்.எயிட் ஆலோசகர் சிகர் டண்பர் மற்றும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரக அரசியல் விவகார அதிகாரி மைக்கல் ஒலின் ஆகியோர் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனைக் கிறீன் கிறாஸ் விடுதியில் சந்தித்து ஒன்றரை மணி நேரம் கலந்துரையாடினர்.

இந்தச் சந்திப்பு தொடர்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன் மேலும் தெரிவித்ததாவது;

இங்குள்ள சமகால அரசியல் நிலைமைகள் மற்றும் மக்களுடைய பொருளாதார நிலைமைகள் தொடர்பிதல் அறிவதில் யு.எஸ்.எயிட் பிரதிநிதிகள் கூடுதல் கவனம் செலுத்தினர்.



வட பகுதியைப் பொறுத்தவரையில் இங்குள்ள தமிழ் மக்களைத் தொடர்ந்தும் பயப் பீதியில் வைத்திருக்கவே விரும்புகின்றனர். இதனால் இங்கு புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் தொடர்கின்றன.

இராணுவ முகாம்கள் அமைப்பதற்காக தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுகின்றன. வலி.வடக்கில் மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டுள்ளமையால் அவர்களின் பொருளாதாரம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. விவசாயம், மீன்பிடி இரண்டுமே முடக்கப்பட்டுள்ளன.

போரின் தாக்கத்தினால் விதவைகள் அங்கவீனர்கள் உருவாகியுள்ளனர். இவர்கள் தமது வாழ்வாதாரங்களைத் தொலைத்த நிலையில் உள்ளனர்.

எதிர்வரும் வடமாகாணசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பற்றும். ஆனால் எங்களுக்காக நிதி வழங்கல்கள் என்பது குறைவாகவே இருக்கும்.

இதனால் வாழ்வாதாரங்களை இழந்து மக்கள் நலத் திட்டங்களை முன்னெடுப்பதற்கு யு.எஸ்.எயிட் தொடர்ந்து உதவி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்தேன். நாங்கள் இப்போது மேற்கொள்ளும் உதவித் திட்டங்களை தொடர்ந்து வழங்குவோம் என்று அவர்கள் பதிலளித்தனர் என்றார். (த-5)

# தனுனவின் பாட்டி விடுதலை

கொழும்பு,ஜூலை 24
முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவின் மருமகனான தனுன திலகரத்னவின் பாட்டி நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

தனுனவின் பாட்டியான 85 வயதான விமலா திலகரத்னவே கோட்டை நீதிவான் திலின கமகேவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வழக்கை தொடர்வதற்குச் சட்ட ரீதியாக இடமின்மையால் வழக்கைத் தொடர்ந்து விசாரிக்க முடியாது என்றும் நீதிவான் தெரிவித்துள்ளார்.

தனுனவுக்கு 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி 15 ஆம் திகதி தங்குவதற்கு இடமளித்தமை தொடர்பில் சாட்சி இல்லை என்பதனால் சந்தேகநபரான விமலா திலகரத்ன குற்றவாளியில்லை என்றும் நீதிவான் தெரிவித்துள்ளார்.

பிடியாணை பிறப்பிக்கப்பட்ட தனுன திலகரத்னவுக்குப் பாதுகாப்பு வழங்கினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவரது பாட்டி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தனுனவின் பாட்டியான 85 வயதான விமலா திலகரத்னவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு கோட்டை நீதிவான் திலின கமகே முன்னிலையில் கடந்த 10 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது தனுன திலகரத்னவின் பாட்டியை விடுவிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதியன்று தீர்மானிக்கப்படும் என்று நீதிமன்றம் அறிவித்திருந்தது.

இந்த வழக்கின் பிரதிவாதியான விமலா திலகரத்னவின் வாக்குமூலத்தைப் பெறுக்கொள்ளாமல் அவரை விடுவிக்குமாறு அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி நீதிமன்றத்தில் கோரி நின்றார்.

இதனையடுத்தே, இது தொடர்பில் எதிர்வரும் 24 ஆம் திகதி தீர்மானிக்கப்படும் என்று அறிவித்த நீதிவான் நேற்றைய தினத்துக்கு வழக்கை ஒத்திவைத்தார்.வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அவரை நீதிவான் விடுதலை செய்தார். (த)

# நாட்டின் ராஜதந்திர சேவை இப்போது இராணுவ மயம்

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 25
நாட்டின் இராஜதந்திர சேவை இப்போது இராணுவ மயப்படுத்தப்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். ஓய்வு பெற்ற படையதிகாரிகளை அவர்களின் அனுபவங்களுக்கு ஏற்ற வகையில் பயன்படுத்திக் கொள்ளாமல், அவர்கள் இராஜதந்திர சேவையில் இணைக்கப்பட்டுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.



இராஜதந்திர சேவையில் சிறந்த தகைமையும் அனுபவமும் உடைய அதிகாரிகள் ஓரம் கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை இராஜதந்திர சேவையில் கடயைமாற்றி வரும் அதிகாரிகளில் 70 வீதமானவர்கள் தொழில்சார் தகுதிகளைக் கொண்டிராதவர்கள் எனவும் [illegible] படையதிகாரிகள் என அத்தநாயக்க கூறினார்.

படை அதிகாரிகளை தாம் இழிவுபடுத்தவில்லை எனவும், அவர்களின் அனுபவம் திறமைகளை வெளிநாட்டு இராஜதந்திர சேவையில் முழுமையாக வெளிப்படுத்த முடியாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விளையாட்டுத்துறையிலும் இராணுவத்தின் தலையீடு உயர்வடைந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டுக்காகப் போட்டிகளில் பங்கேற்ற வீர,வீராங்கனைகள் ஒதுக்கப்பட்டு, விளையாட்டுத்துறையின் [illegible]விகள் படையதிகாரி[illegible] வழங்கப்படுவதாகவும் திஸ்ஸ குற்றம் சுமத்தியுள்ளார்.(த)

# மன்னார் ஆயருடன் அமைச்சர்கள் பேச்சு

மன்னார்,ஜூலை 25
மன்னார் ஆயர் மேதகு இராயப்பு ஜோசப் ஆண்டகையைச் சிரேஷ்ட அமைச்சர்கள் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

மன்னார் ஆயர் இல்லத்தில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான சுசில் பிரேம ஜயந்த மற்றும் திஸ்ஸ கரலியத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மன்னார் மாவட்டக் கத்தோலிக்க குருமார்களுக்கும் இடையில் சந்திப்பொன்று கடந்த 18 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பைத் தொடர்ந்து மன்னார் மாவட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை நேரில் கண்டறிவதற்காக ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக இரண்டு அமைச்சர்களும் மன்னாருக்கு நேற்று முன்தினம் சென்றுள்ளனர்.

இதன்போதே மன்னார் ஆயரை அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.


மன்னாரில் காணப்படுகின்ற சட்டவிரோத மீள்குடியேற்றம், பாகுபாடாக வேலைவாய்ப்பு வழங்குகின்றமை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் மன்னார் மாவட்ட கத்தோலிக்க குருமார்கள் ஜனாதிபதியிடம் முறையிட்டமை குறிப்பிடத்தக்கது. (த-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு உணவகங்களுக்கு தற்காலிகமாக 'சீல்'

வலி.வடக்கு, ஜூலை 25
பண்டத்தரிப்பு பகுதியில் உள்ள 2 உணவகங்கள் இரண்டு வார காலத்துக்கு தற்காலிகமாக மூடி வைக்கப்பட்டதுடன் மற்றும் ஒருவருக்கு மூவாயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.
குறித்த சம்பவங்கள் பற்றி மேலும் தெரிய வருவதாவது:
பண்டத்தரிப்பு பகுதியில் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகரால் உணவகங்கள் மற்றும் தேநீர் கடைகள் மீது சுகாதாரப் பரிசோதனை கடந்த வெள்ளி, சனி ஆகிய தினங்களில் மேற்கொள்ளப்பட்டது.
இந்த நிலையில் இரண்டு கடைகளில் சுகாதார சீர்கேடு நிலவுவதை இனம் கண்டதுடன் மற்றும் ஒரு கடையில் ஊழியர் ஒருவர் முகச்சவரம் செய்யாது, வெற்றிலை போட்ட நிலையில் உணவு பரிமாறியதையும் கண்டு பிடித்தனர்.
இது தொடர்பாக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து வெற்றிலை போட்ட நிலையில் கடையில் கடமையாற்றியவருக்கு மூவாயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் ஏனைய இரண்டு கடைகளையும் மூடி உரிய திருத்தங்களைச் செய்து நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்த பின்னர் அனுமதி பெற்று கடையைத் திறக்கும் படியும் பணிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## ஆடிவேல் பவனி .........



நல்லூர் ஸ்ரீ பாலகதிர்காம ஆலய ஆடி வேல் தேர் பவனி நேற்று ஆரம்பமாகியது. ஆடிவேல் பவனி தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறும். (வ-7-17-20)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல் இன்று

தென்மராட்சி, ஜூலை 25
சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றும் நடவடிக்கைகள் இன்று தொடக்கம் நடைபெறவுள்ளன.
கடந்த வருடம் விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றப்பட்ட பகுதிகளான சரசாலையில் இன்று ஆரம்பமாகி நான்கு தினங்கள் நடைபெற்று, அதன் பின்னர் நாவற்குழி, கைதடி ஆகிய பகுதிகளில் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
குறித்த பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தத்தமது பிரிவு பொது சுகாதாரப் பரிசோதகர்களுடன் தொடர்பு கொண்டு திகதி மற்றும் நிலையத்தை அறிந்து அன்றைய தினம் தமது வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி மருந்து ஏற்றுவித்துக் கொள்ளுமாறும் அறிவிக் கப்பட்டுள்ளது.
இன்று சரசாலை வடக்கு, நாளை சரசாலை தெற்கு, நாளைமறுதினம் மட்டுவில் வடக்கு, 29 ஆம் திகதி மட்டுவில் கிழக்கு ஆகிய பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# விரைவில் ஆழமாக்கப்படவுள்ள நெடுந்தீவு துறைமுகம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
நெடுந்தீவு துறைமுகப் பகுதியில் கடலை ஆழப்படுத்தும் பணிகள் விரைவில் ஆரம்பிக்கப்படும். தற்போது வடதாரகை துறைமுகப் பாலத்துள் வரமுடியாத நிலை உள்ளதால் வடதாரகையில் இருந்து பயணிகளை இறக்கி ஏற்றக் கூடியதான சிறிய படகு ஒன்றை விரைவில் தருவிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.
தற்போது நெடுந்தீவுக்கான போக்குவரத்தில் ஈடுபடும் வடதாரகை தனியார் படகுக்கு நாளொன்றுக்கு நான்காயிரம் ரூபா வழங்கப்படும் என்றும் நெடுந்தீவு ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.
வடதாரகை II படகை அமைப்பதற்கு முன்பாக துறைமுகப் பகுதி கடல் ஆழம் குறித்த தகவல்களை கடற்படையினரின் உதவியுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆராய்ந்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது தவறு எனவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (வ-7)

# 'நெற்கபே' நிலையங்களில் மறைப்புகளை நீக்குக

## பிரதேச செயலர்களுக்கு அரச அதிபர் சுற்றறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25
'நெற்கபே' இணையத்தள நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள இணையத்தள கணினி உபகரணங்கள் அனைத்தும் ஏனையோரது பார்வைக்குத் தெரியும் படியாக எதிர்வரும் முதலாம் திகதிக்குள் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட அரச அதிபர் அறிவித்துள்ளார்.
இந்த விடயம் தொடர்பான சுற்றறிக்கை அரச அதிபரால், சகல பிரதேச செயலாளர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
'நெற்கபே' இணையத்தள நிலையங்களில் பிரத்தியேக மறைப்புக்களால் அமைக்கப்படும் இணையத்தள கணினிகளைப் பயன்படுத்தும் சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினர் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.
இவ்வாறான நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் 'நெற்கபே' களிலுள்ள பிரத்தியேக மறைப்புக்களை அகற்றி, ஏனையோரது பார்வைக்குத் தெரியும் படியாக மாற்றியமைக்கப்பட வேண்டும்.
அடுத்த மாதம் முதலாம் திகதிக்கு முன்னதாக இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் இதனைப் பின்பற்றாத நெற்கபேக்கள் சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5)




**“ 'நெற்கபே' இணையத்தள நிலையங்களில் பிரத்தியேக மறைப்புக்களால் அமைக்கப்படும் இணையத்தள கணினி களைப் பயன்படுத்தும் சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினர் அவற்றைத் தவறாகப் பயன்படுத்துவது அதிகரித்துள்ளது.**

## மாற்றுப் பாதை

வடமராட்சி, ஜூலை 25
பருத்தித்துறை பிரதான வீதியிலிருந்து வல்லி புரப் பரியாரியார் ஒழுங்கைக்குச் செல்வோர் மாற்றுப் பாதை ஊடாக பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.
நகரப் பகுதியில் பிரதான வீதியின் அகலிப்புப் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகிறது. இதனால் பிரதான வீதி வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கைக்கான நுழைவாயில் மதகு உடைக்கப்பட்டுள்ளது. வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கையிலிருந்து பிரதான வீதிக்கோ, பிரதான வீதியில் இருந்து வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கைக்கோ பயணிக்க முடியாத நிலை நிலவுகிறது.
இதற்குப் பதிலாக தும்பளை வீதி ஊடாகவே வல்லிபுரப் பரியாரியார் ஒழுங்கைக்குப் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. (ஐ-8)

# பரிசோதனைக்காக நாயின் தலை

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாருக்காவது நாய் கடித்து பின்னர் அந்த நாய் உயிரிழந்தால் பரிசோதனைக்காக அதன் தலை கொழும்புக்கு அனுப்பப்படுகிறது. சில தினங்களுக்கு முன்னரும் நாயின் தலை ஒன்று கொழும்புக்கு அனுப் பப்பட்டதாக சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்தனர்.
பண்டத்தரிப்பில் கட்டாக்காலியாக அலைந்து திரிந்த நாய் ஒருவருக்குக் கடித்துள்ளது. தவிர ஆடு ஒன்றையும் கடித்துள்ளது. மறுநாள் அந்த நாய் இறந்த நிலையில் காணப்பட்டது. அந்த நாய் விசர் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதா என்பதைப் பரிசோதிப்பதற்காகவே அந்த நாயின் தலை வெட்டி எடுக்கப்பட்டு கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளது. தவிர இந்தச் சம்பவத்தை அடுத்து அங்கு நாய்கள் கண்காணிக்கப்படுகின்றன என்று மேலும் தெரிவித்தனர். (வ-4-5-86)

# கிராம சேவையாளர் பிரிவுகளிலுள்ள வாக்காளர் பட்டியலை பார்வையிடவும்

## தபால் மூலம் வாக்களிப்போருக்கு தேர்தல் திணைக்களம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 25
தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிக்கும் அரச ஊழியர்கள், தமது விவரங்களைப் பெறுவதற்கு தத்தமது பகுதிக்குரிய கிராம சேவையாளர் பிரிவுக்குச் சென்று வாக்காளர் பெயர்ப் பட்டியலை பார்வையிட முடியும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.
தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பிப்பதற்கு அரச ஊழியர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருவது தொடர்பில் தேர்தல்கள் திணைக்களத்திடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.
செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்கு அரச உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.
இதற்குரிய விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்துவதற்கு, வாக்காளர் பெயர்ப் பட்டியலிலுள்ள சில விவரங்கள் தேவையாக உள்ளன.
இதனால் அரச உத்தியோகத்தர்கள் அந்த விவரங்களைப் பெறுவதற்கு அலைக்கழிய வேண்டியிருப்பதாகவும், குறிப்பாக தாம் வசிக்கும் இடம் தவிர்ந்த வேறு பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் விடுமுறை எடுத்து தமது பிரதேச செயலகங்களுக்குச் சென்று விவரங்களைப் பார்வையிட வேண்டிய நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.
இந்த விடயங்கள் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் தெரிவிக்கையில்; ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் வாக்காளர் பெயர்ப் பட்டியல் வைக்கப்பட்டுள்ளது. இதனைவிட தபால் நிலையங்களிலும் உள்ளன.
இவற்றுக்கு மேலதிகமாக 2013 வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிப்புக்கான 'பி.சி' படிவத்துடன், கிராம சேவையாளர்களால் வீட்டு உரிமையாளர்களிடம் ஒப்படைக்கும் பகுதியின் பின் பகுதியிலும் வாக்காளர் தொடர் இலக்கங்கள் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-5-9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிமன்றத்தின் உத்தரவுகளை புலனாய்வுப் பிரிவு உதாசீனம்



கொழும்பு,ஜூலை 25
புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றின் உத்தரவுகளை உதாசீனம் செய்துள்ளனர் என்று ஜே.வி.பி. கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.
மாத்தளை மனித புதை குழி தொடர்பான விசாரணைகளின் போது மாத்தளை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுகளை புலனாய்வுப் பிரிவினர் உரிய முறையில் நடைமுறைப்படுத்தத் தவறியுள்ளனர் என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.
மனித புதை குழியிருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் மற்றும் மண்டையோடுகள் தொடர்பில் 'ரேடியோ கார்பன்' பரிசோதனை நடத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.
எனினும், இதுவரை இந்த உத்தரவு நடைமுறைப் படுத்தவில்லை கட்சி சுட்டிக் காட்டியுள்ளது. (ச)

# போதைப்பொருளை நாட்டில் ஒழிப்போம்

### பொது பல சேனா அதிரடி அறிப்பு

கொழும்பு,ஜூலை 25
போரின்போது உயிரிழந்தவர்ளை விடவும் போதைப் பொருள் பயன்பாட்டினால் அதிகளவானவர்கள் உயிரிழக்கின்றனர்
எனவே போதைப் பொருள் இல்லாதொழிப்பு நடவடிக்கைகளை பொது பல சேனா அமைப்பு ஆரம்பிக்கவுள்ளது என்று அதன் பொதுச் செயலர் கலபொடத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
குருநாகல் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.



அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
போதைப்பொருள் பூமியாக மாற்றமடைந்துள்ள கொலன்னாவ பிரதேசத்திலிருந்து போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.
போதைப் பொருள் வர்த்தகத்தின் பின்னணியில் முஸ்லிம் கடும்போக்காளர்கள் செயற்பட்டு வருகின்றனர். இதனால், 13 ஆம் திருத்தச் சட்டத்தை விடவும் ஆபத்தான பிரச்சினைகளை எதிர்நோக்க நேரிடும்.
நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்பட்டுள்ளது.- என்றார். (ச)

## தொடர் மழை; வான் கதவுகள் திறக்கப்பட்டன



நுவரெலியா,ஜூலை 25
மலையகத்திலுள்ள பிரதான நீர்த் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டுள்ளன என்று நுவரெலியா மாவட்ட செயலர் டி.பி.ஜி.குமாரசிறி தெரிவித்தார்.
தொடர்ந்து பெய்து வரும் மழையால் மலையகத்தின் பிரதான நீர் தேக்கங்களின் வான் கதவுகள் திறக்கப்பட்டன என்று அவர் குறிப்பிட்டார்.
லக்சபான, கெனியோன், காஸ்லரி, மேல்கொத்மலை ஆகிய நீர் தேக்கங்களின் வான் கதவுகளே தற்பொழுது திறக்கப்பட்டுள்ளன.
இதனால் குறித்த பகுதியின் தாழ் நிலப் பிரதேசங்களில் வசிப்பவர்களை அவதானமாக இருக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (ச)

## தேர்தலுக்கு பாதுகாப்பு

### 143 பொலிஸ் நிலையங்கள் ஊடாக

கொழும்பு,ஜூலை 25
எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள மாகாணசபை தேர்தல்களுக்கு ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவுள்ளன.
மாகாணசபை தேர்தல் இடம்பெறவுள்ள சகல மாவட்டங்களுக்கும் பிரதான பொலிஸ் பரிசோதகர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் காமினி நவரத்ன தெரிவித்தார்.
மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவுள்ள வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள 143 பொலிஸ் நிலையங்களினூடாக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.
இந்த மாவட்டங்களிலுள்ள சகல பொலிஸ் நிலையங்களிலும் தேர்தல் அலுவலகம் ஒன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
தேர்தல் காலங்களில் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் மற்றும் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் விதத்தில் நடந்து கொள்பவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

தேர்தல் இடம் பெறவுள்ள வடக்கு, வட மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலுள்ள 143 பொலிஸ் நிலையங்களினூடாக விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.





பருத்தித்துறை சென்.தோமஸ் சனசமூக நிலைய அன்னை வேளாங்கண்ணி முன்பள்ளி வருடாந்த விளையாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு. ஜே.ஜோன் மவுலிஸ் அடிகளார், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பருத்தித்துறைப் பிரதேச கலாசாரப் பேரவைச் செயலாளர் எஸ். இருதயராஜா ஆகியோர் மாணவி ஒருவரால் வரவேற்கப்படுவதைக் காணலாம். (ஒ-8)

## பெரஹரவை பார்வையிட்டார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை 25
நாடு முழுவதிலும் உள்ள பாடசாலைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 15 ஆயிரம் மாணவர்கள் கலந்து கொண்ட பெரஹரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அலரி மாளிகையில் இருந்து பார்வையிட்டார்.
கல்வியமைச்சினால் மூன்றாவது முறையாகவும் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தப் பெரஹரவில் சிங்கள- தமிழ் மற்றும் முஸ்லிம் மாணவர்கள் கலந்து கொண்டனர்.
கொழும்பு மகாநாம வித்தியாலயத்தில் இருந்து ஆரம் பமாகிய இந்தப் பெரஹர,



கொள்ளுப்பிட்டி- காலி முகத்திடல்- அலரி மாளிகை வீதியூடாக கொழும்பு ஹுணுப்பிட்டி கங்காராம விகாரையை சென்றடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆயுதம் இறக்கியவருக்கு எதிராக சர்வதேச பிடிவிறாந்து

### கனடாவாசியை கைது செய்ய வவுனியா மேல் நீதிமன்றம் உத்தரவு

வவுனியா,ஜூலை 25
பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் வவுனியா மேல் நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கு ஒன்றில் எதிரிக்கு சர்வதேச பொலிஸ் (இன்டர் போல்) மூலம் அழைப்பாணை விடுப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம், அரச சட்டத்தரணியின் விண்ணப்பத்தின் பேரில் இதற்கான உத்தரவைப் பிறப்பித்தார்.
பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட கோபால் யோகேஸ்வரராஜா என்பவரால் வழங்கப்பட்ட ஒப்புதல் வாக்கு மூலத்தின் அடிப்படையில், கனகராஜா ரவிசங்கர் என்பவர் மீது சட்ட மா அதிபரினால் வவுனியா மேல் நீதிமன்றத்தில் மேற்படி வழக்குத் தொடரப்பட்டுள்ளது.
எதிரியான கனகராஜா ரவிசங்கர் 01.01.1996 ஆம் திகதிக்கும் 31.12.1996 ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில், முல்லைத்தீவில் புலிகள் இயக்கத்தில் உறுப்பினராக இருந்து ஆயுதங்களையும், ஏவுகணைகளையும், வடகொரியாவிலிருந்து வந்த கப்பலில் இருந்து தரைக்குக் கொண்டுவந்து சேர்த்தாரெனவும் இதன் மூலம் தண்டனை விதிக்கத்தக்க குற்றம் புரிந்தார் எனவும் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.
குறித்த வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் மேல் நீதிமன்ற நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, எதிரிக்கு அழைப்பாணை விடுத்து வழக்கில் முன்னிலைப்படுத்துவது தொடர்பாக மூன்று விண்ணப்பங்களை அரச தரப்பு சட்டத்தரணி மன்றில் முன்வைத்தார். பயங்கரவாத புலனாய்வுப் பிரிவின் தகவலின் படி எதிரி கனடாவிலிருக்கலாமென்ற தகவலும் அங்கு எடுத்துக் கூறப்பட்டது. எனவே, சர்வதேச பொலிஸ் மூலம் (இன்டர் போல்) எதிரிக்கான அழைப்பாணையைச் சேர்ப்பிக்கவும் எதிரியைக் கண்டு பிடித்து வழக்கில் முன்னிலைப் படுத்தவும் வேண்டுமென அரச சட்டத்தரணி விண்ணப்பித்தார்.
நீதிபதி சந்திரமணி விஸ்வலிங்கம் அரச தரப்புச் சட்டத்தரணியின் விண்ணப்பங்களை அனுமதித்து அதற்கான உத்தரவைப் பிறப்பித்துள்ளார். (ச-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளம் வறண்டதால் நீரின்றி வாடும் பயிர்

தென்மராட்சி, ஜூலை 25
சாவகச்சேரி கல்வயல் கமக்கார அமைப்பின் அங்கத்தவர்களால் நீண்ட காலமாக பயன்படுத்தப்பட்டு வரும் விளைவேலி புல்லாந்திக் குளம் தூர்வாரி நீரின்றி வறண்டு போயுள்ளது.

இதனால் குளத்தை அண்டிய பகுதியில் உப உணவுப் பயிர்களை பயிரிட்ட 50 இற்கு மேற்பட்ட விவசாயிகளின் பயிர்கள் நீரின்றி வாடுவது குறித்து கவலை தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் உள்ள கால்நடைகளும் இந்தக் குளத்திலேயே நீர் அருந்தி வந்ததாகவும் தற்போது குளத்தில் நீரின்றி வறண்டு காணப்படுவதால் தண்ணீர் அருந்த வேறு இடங்களை நாடிச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குளத்தைப் புனரமைத்துத் தருமாறு கமநல சேவைகள் நிலையத்துக்கும், சாவகச்சேரி நகர சபைக்கும் பல தடவைகள் அறிவித்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லையெனவும் ஆதங்கம் தெரிவித்தனர்.

பயிர்கள் வாடும் நிலை காணப்படுவதால் தமது காணிகளில் குழாய்க்கிணறு அமைக்க விவசாயிகள் முயற்சிகள் மேற்கொண்டபோதிலும் அனைத்து வயல்களிலும் பயிர்கள் விளைவிக்கப்பட்டுள்ளதால் குழாய்க் கிணறு அமைக்கும் வாகனத்தை உரிய இடங்களுக்குக் கொண்டு செல்ல முடியவில்லையெனவும் தெரிவித்தனர். (வ-9)

# நெடுந்தீவில் சிறப்புற்ற கலாசாரப் பெருவிழா



யாழ்ப்பாணம், ஜூலை 25
நெடுந்தீவு பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் கலாசார விழா கடந்த திங்கட்கிழமை நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் தேவா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, பிரதேச செயலர் ஆ.சிறி.தீவக வலய கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோண்குயின்ரஸ், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் உட்பட விருந்தினர்கள், பிரதேச செயலகத்தில் இருந்து குதிரைகள் அணிவகுப்பு, பாண்ட் வாத்தியம் சகிதம் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

விழாவில் கலை, இலக்கியம் கலாசார துறைகளுக்காகப் பெரும்பணியாற்றிய மூத்த இளைய கலைஞர்கள், எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் 'நெடுங்கீற்று' சிறப்பு மலர் வெளியீடும் சிறப்புரைகள், வில்லிசை நடனம், நாட்டுக்கூத்து போன்ற கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன.

அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவிடம் இருந்து நெடுங்கீற்று நூலின் பிரதியை எஸ்.தியாகலிங்கம் பெற்றுக் கொண்டார். நூல் வெளியீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி எஸ்.திருநாவுக்கரசு நிகழ்த்தினார். பூர்த்தி செய்யப்பட்ட கலாசார மண்டபத்துக்கான ஆவணத்தை நெடுந்தீவு ப.நோ.கூ. சங்கத் தலைவர் அ.வெ.அரியநாயகம், நெடுந்தீவு பிரதேச சபைத் தவிசாளர் தானியல் றெக்ஷியன், செயலாளர் வே.தம்பிராசா ஆகியோரிடம் கையளித்தார். விழாவில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். (வ-7)


## ஜூலை 23 நிகழ்வுகள் குறித்த சுவரொட்டிகள்




சகோதரத்துவ தினம் ஜூலை 23 ஐ முன்னிட்டு நடத்தப்படவுள்ள நிகழ்வுகள் தொடர்பான சுவரொட்டிகள் யாழ்.நகரின் பிரதான வீதிகளில் ஒட்டப்பட்டுள்ளன. இந்த சுவரொட்டியில் எதிர்வரும் 26, 27, 28, 29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி மன்னார் மாவட்டங்களில் நடத்தப்படவுள்ள நிகழ்ச்சி நிரல் தொடர்பான விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சகோதரத்துவ தினம் ஜூலை 23 ஐ முன்னிட்டு 'ஒன்றாய் நாம் பறந்திடுவோம்' எனும் தொனிப் பொருளில் இரண்டு மாவட்டங்களிலும் கணினி மற்றும் புத்தகங்களை வழங்குதல், சகோதரத்துவக் கிரிக்கெட் போட்டி, சகோதரத்துவ நாடக மேடையும், சினிமாக் காட்சியும், சகோதரத்துவ மக்கள் கூட்டம் போன்ற நிகழ்வுகள் சோஷலிச இளைஞர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. (வ-14)

# வீட்டுக் கிணறுகளில் எண்ணெய்ப் படலம்

### கல்வியங்காட்டு எரிபொருள் நிலையத்துக்கு அருகில் பரபரப்பு



யாழ்ப்பாணம், ஜூலை 25
கல்வியங்காடு சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றை அண்மித்துள்ள வீட்டுக் கிணறுகளில் எண்ணெய்த் தன்மை பரவியுள்ளது. இது தொடர்பாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் முறையிடப்பட்டதையடுத்து அவர்கள் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தில் அமைந்துள்ள நான்காவது கிணற்றில் இவ்வாறு எண்ணெய்ப் படலம் காணப்பட்டமை நேற்று முன்தினம் இனங்காணப்பட்டுள்ளது.

இதேபோன்று முன்னரும் மூன்று கிணறுகளில் இவ்வாறு எண்ணெய்த் தன்மை பரவியதால் அந்தக் கிணறுகளிலிருந்து பரிசோதனைக்காக தண்ணீர் எடுக்கப்பட்டது. அதில் 2 சென்ரிமீற்றர் அளவுக்கு எண்ணெய்ப் படலம் காணப்பட்டது. அதனையடுத்து அந்தக் கிணறுகள் இறைத்து துப்புரவு செய்யப்பட்டன.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நான்காவது கிணற்றில் அவ்வாறு எண்ணெய்ப் படலம் மிதந்துள்ளது. இது தொடர்பாக மாவட்ட சுற்றுச்சூழல் அதிகார சபையினருக்கும் அறிவிக்கப்பட்டது. அவர்களும் இது தொடர்பில் விசாரணை மற்றும் பரிசோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

எரிபொருள் நிலையத்தில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டுள்ள எரிபொருள் தாங்கியில் கசிவு ஏற்பட்டு மண் ஊடாக கிணற்றினுள் கலக்கின்றனவா என்பது தொடர்பில் அவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-4)

# குப்பைகளின் மத்தியில் பிரதேச சபை அலுவலகங்கள்

வடமராட்சி, ஜூலை 25
கரவெட்டிப் பிரதேச சபையின் பிரதான அலுவலகம், உப அலுவலகங்கள், பொதுச் சந்தை, நூல் நிலையம் என்பனவற்றில் குப்பைகூளங்கள் நிரம்பி அசுத்தமாக இருப்பதாக சபை உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டம் உப தலைவர் இ.சாந்தசொரூபன் தலைமையில் நடைபெற்ற போது ஆளும்கட்சி உறுப்பினர்களான கே.பரஞ்சோதி, பொ.தம்பிமுத்து ஆகியோர் இந்தக் குற்றச்சாட்டை முன் வைத்தனர்.

குறித்த இடங்களில் குப்பை கூளங்கள் காணப்படுகின்றன. பிரதான அலுவலகத்தின் பின்புறமாக குப்பை கூளங்கள் நிறைந்துள்ளன. பொதுச் சந்தை, நூல் நிலையம், உப அலுவலகங்களிலும் இதேநிலையில் குப்பைகள் காணப்படுகின்றன. குப்பை கூளங்களை அப்புறப்படுத்தி குறித்த இடங்களை பிரதேச சபை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

மற்றொரு ஆளும்கட்சி உறுப்பினரான பொ.குகதாஸ் கருத்துத் தெரிவிக்கையில்: சபையில் வேலைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் கூட்டங்கள் நடைபெறும் போது சமுகமளிக்க வேண்டும். சபை வேலைகள் தொடர்பாக இங்கு கேள்வி எழுப்பப்படும் போது அந்த வேலைகளுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் விளக்கம் அளிக்க வேண்டும்.

இதே போல குப்பை கூளங்களை அகற்றுவதற்குப் பொறுப்பான உத்தியோகத்தரும் சமுகமளிக்க வேண்டும். அப்போதுதான் சபையின் வேலைகள் சரியாக நடைபெறுகிறதா என அறிந்து கொள்ள முடியும். இதனை ஒரு தீர்மானமாக சபை ஏற்றுக் கொள்ள வேண்டும் என கேட்டுக் கொண்டார். (ஐ-8)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபராதத் தொகை பகிர்ந்தளிப்பு

தென்மராட்சி, ஜூலை 25
சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றால் விதிக்கப்பட்ட அபராதத் தொகையில் ஒரு பகுதி சாவகச்சேரி நகரசபை, சாவகச்சேரி பிரதேச சபை ஆகியவற்றுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளுக்கு விதிக்கப்பட்ட அபராதத் தொகைகளில் அறவிடப்பட்ட தொகைகளே பகிர்ந்தளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## வீதியில் சென்ற பெண்ணிடம் சங்கிலி அறுப்பு



தென்மராட்சி, ஜூலை 25
வீதியில் நடந்து சென்ற பெண் அணிந்திருந்த ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மோட்டார் சைக்கிளில் வந்த நபர் அறுத்துக் கொண்டு தப்பியோடினார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை சாவகச்சேரி பெரிய அரசடியில் இடம்பெற்றது.

தனங்களப்பைச் சேர்ந்த பெண் இந்தப் பகுதியில் உள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று விட்டு திரும்புகையில் இந்த வழிப்பறிச் சம்பவம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (வ-9)

## உரிமை கோரப்படாத பொருள்கள் ஏலத்துக்கு

வடமராட்சி, ஜூலை 25
பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் உரிமை கோரப்படாததும், பறிமுதல் செய்யப்பட்டதுமான பொருள்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், இலத்திரனியல் பொருள்கள் புடைவை வகைகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந்தப் பொருள்களை யாராவது உரிமைகோரும் பட்சத்தில் ஏலவிற்பனைக்கு அரை மணி நேரம் முன்னதாக பதிவாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ-8)

# தன்மானத்தைக் கைவிடோம்

## தேர்தல் கூட்டணி குறித்து வைகோ கருத்து

புதுடில்லி, ஜூலை 25

தேர்தல் கூட்டணிக்காக சுயமரியாதையை விட்டுக் கொடுக்க மாட்டோம் என்று ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.

நேற்றுச் செய்தியாளர்களைச் சந்தித்துக் கருத்துக் கூறும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறியதாவது:-



"தமிழகத்தில் நிலவும் மின்வெட்டுக்கு கூடங்குளம் அணுமின் உலை தீர்வாகும் என்ற தவறான கருத்தை மத்திய அரசு கூறி வருகிறது. கானல் நீரை காட்டி தமிழர்களை ஏமாற்றுகிறார்கள். இடிந்தகரையில் 710 நாள்களுக்கு மேலாக போராடும் மக்களுக்கு தமிழக மக்கள் மட்டுமின்றி உலகம் முழுவதும் உள்ள மக்கள் நன்றி கடன் பட்டுள்ளனர்.

இடிந்தகரையில் மக்கள் சாதி, மதங்களை கடந்து, இதுவரை துளியும் வன்முறை இல்லாமல் தங்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். 2.20 லட்சம் பேர் மீது வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது. இந்த வழக்குகளைத் திரும்பப் பெற முடியாது என தமிழக அரசு உயர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது. இதனை வன்மையாக கண்டிக்கிறேன். வன்முறை நடந்தால் தான் போராட்டத்தை அரசு கவனிக்குமா, இடிந்தகரை போராட்டத்தை தனிமைப்படுத்த முயற்சி நடக்கிறது. அது நடக்காது.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் காங்கிரஸ் நிச்சயமாக ஆட்சிக்கு வர முடியாது. காங்கிரஸையும், அதனுடன் கூட்டணி வைக்கும் கட்சிகளையும் எதிர்ப்பது தான் எங்கள் இலக்கு.

மக்களவை தேர்தல் கூட்டணி குறித்து இப்போது எதுவும் கூற முடியாது. கடந்த சட்டப்பேரவை தேர்தலின் போது கடைசி நிமிடத்தில் எங்கள் சுயமரியாதை, தன்மானத்திற்கு பிரச்சினை வந்த போது தேர்தலில் போட்டியிடாமல் இருந்தோம். எனவே தேர்தல் கூட்டணிக்காக சுயமரியாதை, தன்மானத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க மாட்டோம். இந்த விடயத்தில் எந்த சமரசத்திற்கும் இடமில்லை" என்று தெரிவித்தார். (ற)



இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை குறைவடைந்து வருகின்றது என்று இந்திய திட்ட ஆணையக் குழு அறிக்கையிட்டுள்ள நிலையில், சென்னையில் பிச்சையெடுப்பவர்கள் மற்றும் மனநலம் பாதிக்கப்பட்டு வீதிகளில் திரிவோரின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்து வருகின்றது என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. சென்னையில் மனநலம் பாதிக்கப்பட்டு வீதிகளில் பிச்சையெடுக்கும் ஒருவரின் வித்தியாசமான 'போஸ்'(ற)

# ரூ.28க்கு உண்பவர்கள் ஏழைகள் இல்லை

## திட்ட ஆணையத்தின் அறிக்கை

சென்னை, ஜூலை 25

தினமும் ரூபா 28க்கு உண்பவர்கள் ஏழைகள் என்ற பதத்துக்குள் உள்வாங்கப் பட மாட்டார்கள் என்று இந்தியதிட்டஆணையம்அறிக்கை விடுத்துள்ளது.

இந்த எடுகோளை வைத்து ஆய்வுகளை மேற்கொண்டுள்ள திட்ட ஆணையம் இந்தியாவில் ஏழைகளின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

எனினும்திட்டஆணையத்தின் இந்த அறிக்கைக்குப் பெரும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

கடந்த வருடம் திட்ட ஆணையம் விடுத்துள்ள அறிக்கையில் தினமும் ரூபா 30க்கு உண்பவர்கள் ஏழைகள் அல்லர் என்று குறிப்பிட்டிருந்தது. அதற்கு எழுந்த எதிர்ப்பை அடுத்துஅந்த அறிக்கைதிரும்பப் பெறப்பட்டுள்ளது. அதே வகையில் இம்முறையும் திட்ட ஆணையம் பிதற்ற அறிக்கை வெளியிட்டுள்ளது என்று கண்டனங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (ற)

மதிய உணவில் விஷம்


## பாடசாலையின் அதிபர் பொலிஸில் சரண்

பாட்னா, ஜூலை 25

பீகாரின் தர்மசதி கண்டவான் கிராமத்தில் உள்ள அரச ஆரம்பப் பாடசாலையில் கடந்த 16ஆம் திகதி இலவச மதிய உணவை உட்கொண்ட 23 குழந்தைகள் உயிரிழந்தனர். மதிய உணவில் பூச்சிக்கொல்லி மருந்து கலந்தமையே அந்த அனர்த்தத்துக்குக் காரணம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் இதுவரையும் தலைமறைவாக இருந்த குறித்த பாடசாலையின் அதிபர் மீனாதேவி நேற்றுப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

அதையடுத்து அவரை நீதிமன்றில்முன்னிலைப்படுத்தும் நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ற)



# மும்பையில் தொடரும் கனமழை; இயல்பு வாழ்க்கை பாதிப்பு

ஐதராபாத், ஜூலை 25

மும்பையில் தொடர்ந்தும் கன மழை பெய்து வருவதால்அங்கு இயல்புவாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது. அதையடுத்து வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்றும், பயணங்களை ஒத்திவைக்குமாறும் பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிர மாநிலத்தில் கடந்த ஒரு வாரமாக கன மழை பெய்துவரும் நிலையில், மேலும் 72 மணி நேரத்துக்கு மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மும்பை உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்து வருவதால் அனைத்துப் போக்குவரத்து மார்க்கங்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

குடியிருப்புப் பகுதிகளில் வெள்ளம் போல மழை நீர் தேங்கியுள்ளது. இந்த நிலையில் மேலும் கன மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்தி ருப்பது மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.(ற)

# படிப்புக்கு தடையிட்ட கணவருக்கு பொலிஸார் போட்டனர் "காப்பு"

திருத்தணி, ஜூலை 25

புதுமனைவியின் மேற்படிப்புக்குத் தடைபோட்ட கணவனை கைது செய்துள்ளனர் திருத்தணிப் பொலிஸார்.

திருத்தணி முருகப்ப நகரைச் சேர்ந்தவர் 19 வயதுடைய நிவேதா. இவர் திருநின்றவூர் பகுதியில் உள்ள தனியார் கல்லூரியில் கல்வி கற்று வருகின்றார்.

இந்தநிலையில் நிவேதாவுக்கும் 27வயதுடையஞானமூர்த்திக்கும் கடந்தபெப்ரவரிமாதம் 1ஆம்திகதிதிருமணம்நடந்தது. நிவேதா தன் கணவரிடம் நான் தொடர்ந்து மேற்படிப்பு படிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார். அதற்கு ஒப்புக் கொள்ளாத ஞானமூர்த்தி நிவேதாவைக் கல்லூரிக்கு செல்ல விடாமல் நிவேதாவை வீட்டில் அடைத்து வைத்துள்ளார்.

அதனால் ஆத்திரமடைந்த நிவேதா திருத்தணி மகளிர் காவல் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். அதையடுத்து ஞானமூர்த்தி மேல் வழக்குப் பதிவு செய்த பொலிஸார், அவரைக் கைது செய்துள்ளனர். (ற)

## "போனது என் கௌரவம்" –அனில் அம்பானி

புதுடில்லி, ஜூலை 25

'2ஜி' வழக்கில் சேர்க்கப்பட்டால் தம்முடைய கௌரவத்துக்குப் பெரும் இழுக்கு ஏற்பட்டுள்ளது என்று பிரபல தொழிலதிபர் அனில் அம்பானி கருத்துத் தெரிவித்துள்ளார்.

சி.பி.ஐயின் முதற்கட்ட விசாரணைகளின் போதே அவர் இவ்வாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

"குறித்த வழக்கில் என்னுடைய பெயர் தவறாக இணைக்கப்பட்டுள்ளது. இதனால் எனது கௌரவத்துக்குப் பெரும் இழுக்கு ஏற்பட்டுள்ளது" என்று அவர் விசாரணைகளின் போது தெரிவித்துள்ளார். (ற)

## தேசிய பாதுகாப்புச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரிக்கை

### பா.ம.கவினர் நீதிமன்றத்தில் மனு

சென்னை, ஜூலை 25

பா.ம.க.வைச் சேர்ந்த 8 பேர் மீது போடப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு சட்டத்தை இரத்து செய்யக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு 6 வாரங்களுக்குத் தள்ளி வைக்கப் பட்டுள்ளது.

பா.ம.க.வை சேர்ந்த விஸ்வநாதன் உட்பட 8 பேரை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய உத்தரவிட்டிருந்தார்.

இந்த உத்தரவை ரத்து செய்யக் கோரியே சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் தனபால், செல்வம் ஆகியோர் இது தொடர்பாக மத்திய, மாநில அரசுகளுக்கு விளக்கம் கேட்டு அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டதோடு வழக்கை 6 வாரங்களுக்குத்தள்ளி வைத்தும் உத்தரவு பிறப்பித்தனர்.(ற)

## ஸ்டாலினின் காருக்கு காசு மழை வரவேற்பு

சென்னை, ஜூலை 25

தி.மு.க. பொருளாளர் மு.க. ஸ்டாலினுக்கும் அவர் பயணம் செய்த கார் மீதும் ரூபா தாள்களைத் தூவி வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. இந்த 'விநோத' வரவேற்பு தேனி மாவட்டத்திலேயே இடம் பெற்றுள்ளது.

இந்திய பாராளுமன்ற தேர்தலுக்கான தேனி மாவட்ட நிதியளிப்பு கூட்டம் நேற்று முன்தினம் தேனியில் நடைபெற்றது. அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள தி.மு.க. பொருளாளர் மு.க.ஸ்டாலின் மதுரையில் இருந்து கார் மூலம் தேனிக்கு வந்தார்.

அப்போது தேனி மாவட்ட எல்லையான தெக்கானூரணி அருகே அந்த மாவட்ட செயலாளர் தலைமையில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது.

அங்கிருந்து தேனி நகருக்குள் வரும்வரை ஆங்காங்கே கட்சியினர் வரவேற்பு கொடுத்தனர். அதில் தேனி புதூர்பிரிவு அருகே மு.க.ஸ்டாலின் வரும்போது தேவதானப்பட்டியைச் சேர்ந்த தி.மு.க. பிரமுகர் ஸ்டாலின் ரகு என்பவர் தான் வைத்திருந்த 100, 500, 1000 ரூபாய் நோட்டுகளை கார் மீது தூவி வரவேற்றார்.

அப்போது உடனிருந்த தி.மு.கவினர் உரத்த குரல் எழுப்பி உற்சாகமாக கை தட்டியதுடன், அந்த ரூபாய் நோட்டுக்களை சேகரித்தனர். அதையடுத்து தொண்டர்களைசைகையால் அமைதிப்படுத்திய ஸ்டாலின், பின்னர் பிரபல ஹோட்டல் ஒன்றில் நடந்த மாவட்ட இளைஞரணியின் ஆய்வுக் கூட்டத்தில் பங்கேற்றார்.(ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெக்ஸிக்கோ மோதல்களில் 22 பேர் சாவு

மெக்ஸிக்கோசிட்டி, ஜூலை 25

மெக்ஸிக்கோவில் பொலிஸாருக்கும் ஆயுததாரிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் 22 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஆயுததாரிகள் வீதிகளை மறித்து வாகனப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தனர். அதையடுத்து பொலிஸாருடன் மோதல்கள் ஏற்பட்டன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

ஆயுததாரிகளுடனான மோதல்களில் சுமார் 20 ஆயுததாரிகள் உயிரிழந்தனர் என்று மெக் ஸிக்கோ பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிடுகின்றன.

மெக்சிக்கோவில் போதைப் பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய பல்வேறு வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்தும் பதிவாகி வருகின்றன. (ற)

# ஊடுருவல்கள் குறித்து கண்டுகொள்ளக் கூடாது

## சீன அரச ஊடகம் இந்தியாவுக்கு அறிவுரை

பீஜிங், ஜூலை 25

எல்லையில் ஆங்காங்கு நடைபெறும் ஊடுருவல் சம்பவங்களைப் பெரிதுபடுத்தும் பட்சத்தில் அது சீன - இந்திய உறவுகளைப் பாதிக்கும். அதனால் அவற்றைப் பெரிதுபடுத்தாது விடுவதே சிறந்தது என்று இந்தியாவுக்கு அறிவுரை கூறியுள்ளது சீன அரச ஊடகமான ஸின்ஹுவா.

எல்லைப் பகுதியில் சீன இராணுவம் அடிக்கடி ஊடுருவுகின்றது என்று இந்திய அரசு குற்றஞ்சாட்டி வருகின்றது. இந்த விடயம் தொடர்பாக சீன - இந்திய அதிகாரிகளிடையே பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. இந்தநிலையிலேயே சீன




அரச ஊடகமாக ஸின்ஹுவா இவ்வாறானதொரு கருத்தை வெளியிட்டுள்ளது.

"ஊடுருவல் விடயங்களை இந்திய ஊடகங்கள் பெரிதுபடுத்துகின்றன. ஆங்காங்கு நடைபெறும் ஊடுருவல் சம்பவங்கள் வழமையானவையே. அவற்றைப் பெரிதுபடுத்துவதால் இந்திய - சீன உறவுகள் பாதிப்படையும். இரு நாட்டவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும். அவற்றைப் பெரிதுபடுத்தாது விடுவதே இருநாட்டு உறவுகளுக்கும் சிறந்தது." என்று அந்த ஊடகம் கருத்து வெளியிட்டுள்ளது. (ற)

# சீன நில நடுக்கத்தில் 94 பேர் உயிரிழப்பு



பிஜிங், ஜூலை 25

சீனாவில் கடந்த இரண்டு நாள்களுக்கு முன் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 94 ஆக அதிகரித்துள்ளது.

சீனாவின் வடமேற்கு பகுதியான கான்ஸ் மாகாணத்தில் ஏற்பட்ட மிக மோசமான நிலநடுக்கத்தால் ஏராளமான கட்டங்கள் இடிந்து சேதமாயின. ரிக்டர் அளவுகோலில் 6.6 என்ற அலகாகப் பதிவான இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து, 400 முறை அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்நிலநடுக்கத்தில் சிக்கி 94 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும், 900க்கும் மேற்பட்டோர் பலத்த காயமடைந்துள்ளனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் குறிப்பிடுகின்றன. (ற)

# 73 அரசியல் கைதிகளை விடுவித்தது மியான்மர்



யாங்கூன், ஜூலை 25

மியான்மரில் பல கட்சிகளைச் சேர்ந்த அரசியல் தலைவர்கள் 68 பேர் உட்பட 73 கைதிகள் சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கலவரத்தின் போது கைது செய்யப்பட்ட அரசியல் தலைவர்களை விடுதலை செய்யும்நடவடிக்கைகளில் மியான்மர் அரசு ஈடுபட்டு வருகிறது. அந்த வகையில், தற்போது 68 அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளது. கடந்த மே மாதமும் இது போன்று 23 கைதிகள் விடுதலை செய்ஷயப்பட்டனர்.

ஜூண்டாக்களின் இராணுவ ஆட்சி முடிவுக்கு வந்து 2011 ஆம் ஆண்டு அமைந்த மக்களாட்சியைத் தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்பட்டு வருகின்றனர். (ற)

# பிரிட்டனின் குட்டி இளவரசன்



நேற்று மருத்துவமனையிலிருந்து வெளியேறிய வில்லியம்- கேட் தம்பதி இங்கிலாந்தின் புதிய ராஜாவை பொது மக்களுக்குக் காண்பித்தனர். அதன் பின்னர் அவர்கள் அரண்மனைக்குச் சென்றனர். அங்கு அவர்களுக்கு பிரம்மாண்டமான வரவேற்பு உபசாரம் நடத்தப்பட்டது.

# 22ஆம் திகதியன்று பிறந்த குழந்தை[illegible]ளுக்கு வெள்ளி

## பக்கிங்ஹாம[illegible]ண்மனை அறிவிப்பு

லண்டன், ஜூலை 2[illegible]

பிரிட்டன் இளவரசர் [illegible]லியத்தின் மனைவி கேட் மிடில்டனுக்கு கடந்த 22 ஆம் திகதி ஆண் குழந்தை பிறந்தது. அரச வம்சத்தின் புதிய வாரிசை வரவேற்று பிரிட்டன் எங்கும் விழாக்கோலம் பூண்டுள்ளது.

இந்தநிலையில் பிரிட்டன் அரண்மனை மக்களுக்கு மகிழ்ச்சியளிக்கும் புதிய அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது. குட்டி இளவரசன் பிறந்த 22ஆம் திகதீ பிரிட்டனில் பிறந்த அனைத்து குழந்தை களுக்கும் அரச முத்திரை பொறிக்கப்பட்ட வெள்ளி நாணயங்கள் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளது என்று பக்கிங் ஹாம் அரண்மனை அறிவித்துள்ளது.

அதற்கென 2013 வெள்ளி நாணயங்கள் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் சுமார்6ஆயிரத்து 500 ரூபா பெறுமானமுள்ள இந்த நாணயங்களை பெற விரும்புவோர் தங்களது குழந்தை 22 ஆம் திகதி பிறந்ததற்கான ஆதாரங்களுடன் இணையத்தளத்தில் பதிவு செய்து கொள்ள முடியும் என்றும் பக்கிங்ஹோம் அரண்மனைதெரிவித்துள் ளது. அரச முத்திரை பொறிக் கப்பட்டு நீலம் அல்லது இளஞ்சிவப்பு நிறப் பைகளில் இந்த அதிர்ஷ்ட வெள்ளி நாணயம் வழங்கப்படவுள்ளது. (ற)

# ரயில் பெட்டிக்கு இடையே சிக்கிய பெண் பலத்த போராட்டத்தின் பின் மீட்பு

டோக்கியோ, ஜூலை 25

ரயிலுக்கும், ரயில் நிலைய நடைபாதைக்கும் இடையே உள்ள சிறிய இடைவெளியில் சிக்கிக் கொண்ட பெண் பல மணி நேரப் போராட்டத்தின் பின்னர் மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் ஜப்பானின் டோக்கியோவில் உள்ள சாய்த்தமா ரயில்நிலையத்தில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றுள்ளது.



"எல்லோரும் அவசரமாக ரயிலில் இருந்து இறங்கிக் கொண்டிருந்தோம். அனைவருக்கும் வேலைக்குச் செல்லும் அவசரம். அப்போது அருகில் இறங்கிக் கொண்டிருந்த சுமார் 30 வயது மதிக்கத்தக்க பெண் ரயிலுக்கும் நடைபாதைக்கும் இடையே உள்ள சிறிய இடைவெளிக்குள் விழுந்துவிட்டார். அவரின் உடலின் அரைவாசி உள்ளே சென்று விட்டது. நாங்கள் உடனடியாக ரயில் நிலைய அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து ரயிலை நிறுத்திவிட்டோம்" என்று தெரிவித்தார் சக பயணி ஒருவர்.

பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து அங்கு வந்த ரயில் நிலைய அதிகாரிகளும், பொதுமக்களும் இணைந்து அந்தப் பெண்ணை வெளியே எடுக்க முயற்சித்தனர். ஆனால் அவரை இம்மியும் அசைக்க முடியவில்லை. அதன்பின்னர் தான் அதிகாரிகளுக்கு விபரீதம் விளங்கியது. அதையடுத்து அவர்கள் மீட்புக் குழுவினரையும் உதவிக்கு அழைத்தனர்.

"இதுபற்றி எங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. அதைக் கேள்விப்பட்டதும் எமக்கு வியப்பாக இருந்தது. அந்தச் சிறிய இடைவெளிக்குள் ஒருவர் விழுந்து [illegible] கள் உடனடியாக அங்கு விரைந்தோம்" என்று கூறுகின்றார் மீட்புக் குழுவில் உள்ள அதிகாரி ஒருவர்.

மீட்புக் குழுவினர் வந்து பெண்ணை மீட்கும் முயற்சிகளில் இறங்கினர். பெண்ணை பிடித்து இழுப்பதைத் தவிர ஒன்றும் செய்ய முடியவில்லை. குறித்த பெண்ணோ இவர்கள் இழுக்கும் வேகத்தில் [illegible] கொண்டிருந்[illegible] வழி ஒன்றும் இல்லாது ஒரு முடிவை எடுத்தனர் ரயில் நிலைய அதிகாரிளும் மீட்புக் குழுவினரும். அது ரயில் பெட்டியைக் கொஞ்சம் சாய்த்து பெண்ணை எடுப்பது என்பதாகும்.

"எமக்கு அதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை. அவரை அங்கிருந்து ஓர் அங்குலம் கூட நகர்த்த முடியவில்லை. எனவே ரயில் பெட்டியைக் கொஞ்சம் சரிப்பது என்று முடிவெடுத்தோம். 32 தொன் எடையுடையது அந்த ரயில் பெட்டி. எனினும் வேறு வழியில்லை. பயணிகளையும் சேர்த்து ரயில் பெட்டியைக் கொஞ்சம் சரிப்பது ஒன்றே எமக்கிருந்த ஒரே வழி" என்று அந்த அனுபவத்தைக் கூறினார் சாய்த்தமா ரயில் நிலைய தலைமை அதிகாரி.

இறுதியில் 40 பயணிகள் மற்றும் மீட்புக் குழுவினர், ரயில் நிலைய அதிகாரிகள் இணைந்து ரயில் பெட்டியைக் சிறிது சரிக்க அந்தப் பெண்ணை ஏனையவர்கள் வெளியே இழுத்து எடுத்தனர். இந்தப் போராட்டத்தில் அந்தப் பெண்ணுக்கு தெய்வாதீனமாகக் காயம் ஏதுவும் ஏற்படவில்லை. (ற)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடனான காலநிலை நிலவும்.

# யாழ். மாவட்டம் வளர்ச்சி கண்டுள்ளது

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

வலி. வடக்கு, ஜூலை 25
போர் காரணமாக பொருளாதாரத்தில் பின்தங்கி இருந்த யாழ் மாவட்டத்தின் நிலைமை அண்மைக் காலத்தில் மிகவும் துரிதமாக வளர்ச்சி கண்டுள்ளது என்று யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கு அபிவிருத்திப் பணிகளை அறிக்கையிடல் சம்பந்தமான ஒரு நாள் கருத்தரங்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் ஊடகத் திணைக்களத்தினால் நடத்தப்பட்டது.
இந்தக் கருத்தரங்கில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-
வடக்குக்கும் தெற்குக்கும் இடையே போக்குவரத்துப் பாதை சீர் செய்யப்பட்டதன் மூலம் யாழ். மாவட்ட விவசாயிகள் கடற்றொழிலாளர்கள் அதிக நன்மை அடைந்துள்ளார்கள்.
குறிப்பாக கடந்த காலத்தில் பின்தங்கி இருந்த விவசாய உற்பத்திகள் தற்போது அதிகரித்துள்ளதுடன் மீன்பிடி உற்பத்திகளும் அதிகரித்துள்ளன.
யாழ். மாவட்டத்தில் தற்போது 84 வீதமான மக்கள் மின்சாரத்தை பெற்றுள்ளார்கள். ஏனையவர்களும் இந்த ஆண்டுக்குள் மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்றார். (எ-86)

## வேதாந்தத்தில் 'துங்கபத்திரா' என்றது எதனைக் குறிக்கிறது?

வேதாந்தத்தில் மனித உடம்பையே 'துங்கபத்திரா' எனக் கூறப்பட்டுள்ளது. துங்க என்றால் உயர்ந்த, பத்திரா என்றால் நல்ல, புனிதமான, சுபத்தன்மை பெற்றது எனலாம்.
மனித உடம்பை 'துங்கபத்திரா' என்று அழைப்பதற்குக் காரணம், உடம்பானது சமூகத்துக்கு நன்மையைப் பெற்றுக் கொடுக்கக் கூடியதான சுப காரியங்களில் ஈடுபடுவதற்கென்றே உருவாக்கப்பட்டது என உணர்த்துவதற்காகும்.




## வடமாகாண திட்டமிடல் குழு உறுப்பினர் தெரிவு

தென்மராட்சி, ஜூலை 25
நிர்மாணத்துறை பொறியியல் சேவைகள் வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சால் நகர மற்றும் நாட்டு திட்டமிடல் தொடர்பாக அமைக்கப்பட்ட வடமாகாண திட்டமிடல் குழுவின் உறுப்பினராக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம் பிள்ளை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.
வடமாகாண திட்டமிடல் குழுவின் கன்னி அமர்வு எதிர்வரும் 30 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு கொழும்பு பத்தரமுல்ல செத்சிறிபாய 7 ஆவது மாடியில் உள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் நிர்மாணத்துறை, பொறியியல் சேவைகள், வீடமைப்பு பொது வசதிகள் அமைச்சர் விமல் வீரவன்ச, வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அமைச்சின் பொறி யியல் சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஜே.எம். எல். ஜயசேகர அறிவித்துள்ளார். (வ-9)

## கட்டுரைப்போட்டி

யாழ். மாநகர சபையின் கலாசாரப் பகுதியால் நல்லூர் மஹோற்சவத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தப்படும் கட்டுரைப்போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும். விண்ணப் பித்த மாணவர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (வ)

## செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ்ப்பாண வலயத்தைச் சேர்ந்த தரம் 6 இற்கு மேற்பட்ட வகுப்புக்களைக் கொண்ட பாடசாலை அதிபர், பிரதி அதிபர், பொறுப்பாசிரியர்களுக்கான மேற்படி செயலமர்வு யாழ்ப்பாணக் கல்வி வலய முகாமைத்துவ மண்ட பத்தில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும். வகை தரம்-1ஏபி, தரம்-1சி பாடசாலைகளுக்கு காலை 8.30 மணிக்கும் வகை 2 பாடசாலைகளுக்கு பிற்பகல் 1.30மணிக்கும் இடம்பெறும். ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் அதிபர் உட்பட 3 பேர் தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (வ)

**தவறிவிட்டது**
7/4, மத்திய கிழக்கு வீதி, குருநகர், யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த யேசுநாயகம் யோசவ் அன்ரனி கிளைவ் என்பவரின் தேசிய அ.அ(801694594 V) மற்றும் மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரம், இன்சூரன்ஸ், ரக்ஸ் என்பன அடங்கிய பேர்ஸ் சாட்டிக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையே தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். 077 927 0021 (29922)(3.5.6)

**தவறிவிட்டது**
வட்டுக்கோட்டை மேற்கு, சிவன் கோயிலடி எனும் முகவரியுடைய பெர்னான்டோ செல்வரத்தினம் என்பவரின் தேசிய அ.அ(601833352 V), வாகன சாரதி அனுமதிப்பத்திரம் என்பன வட்டுக்கோட்டைக்கும், சாவகச்சேரிக்கும் இடையில் பேர்சுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 077 071 1147 எனும் தொ.பே.இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (29924)(3.5.6)

பழைய மாணவர் சங்கம் யா/ இளவாலை கன்னியர் மடம் ம.வி.
**வருடாந்த ஒன்றுகூடல் -2013**
காலம்: 2013.07.27 (சனிக்கிழமை) இடம்: பாடசாலை பிரதான மண்டபம்
நேரம்: முற்பகல் 10 மணி
பழைய மாணவிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தங்கள் வரவினை உறுதிப்படுத்த தொடர்புகொள்ளவேண்டிய
தொலைபேசி எண்கள்: 077 400 2290, 077 796 5966
தலைவர்: பழைய மாணவர் சங்கம், (29913)
யா/இளவாலை கன்னியர் மடம் ம.வி. (45.6.3)

**தேவை**
மும்மொழிகளிலும் புலமை வாய்ந்த அலுவலக உதவி முகாமையாளர்கள், Corel Draw, PhotoShop, Page Maker இல் வேலை செய்யக் கூடிய Computer Operators, எழுதுநர்கள், O/L வரை படித்த பயிற்சியாளர்களும் உடனடியாகத் தேவைப்படுகின்றனர்.
**Thampi Holdings(Pvt.)Ltd.**
**90, Kanthappasegaram Road, Jaffna.** (31083) (3.5.6)

Japan இன் தயாரிப்பில் உலகின் முதற்தரம் வாய்ந்த
**Koyo**
Value & Technology MADE IN JAPAN
KOYO என்றால் BEARING
BEARING என்றால் KOYO
எப்பொழுதும் நாம் உங்களுடன்
**ZERENDIB MOTOR ENTERPRISE (PVT) LTD**
60 - B ,SRI SANGARAJA MAWATHA,COLOMBO - 10
TEL:011-4378307 , 011-2341580 - 81 FAX:011-2454608 E-mail:zme@slt.lk

**TV கள் மலிவு விலையில்**
யாழ் நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் உத்தரவாதத்துடன் SONY Wega TV கள் 21"- 11000/= முதல், 29"- 16000/= Panasonic 29" -15000/= DTS amp, Box, DVD என்பன.
தொடர்பு: 077 044 0570
ரோவி ரேற் சென்ரர் (கொமர்சல் வங்கி எதிரில்)
56, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(29915)(45.6.3)

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**
கச்சேரி நல்லூர் நிக்கிளஸ் வீதியில் உள்ள 2 ½ பரப்பு காணியும் வீடும் விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0774125876 (29917)(3.6.11)

**உடற்பயிற்சி ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பம்**
கிரிக்கெற், கால்பந்து, வலைப்பந்து மற்றும் அனைத்து விளையாட்டுக்களையும் பயிற்றுவிக்கக்கூடிய டிப்ளோமாதாரிகள் மற்றும் அனுபவமுள்ள உடற்பயிற்சியாசிரியர்கள் தேவை.
நிறுவனத்தின் விதிமுறைகளுக்கு அமைந்து இல்லத்தில் தங்கியிருந்து சேவைபுரிய விருப்பம் கொண்ட நல்லொழுக்கமும் உடல் ஆரோக்கியமும் உள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
உணவு, தங்குமிடம் என்பன வழங்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுதிகதி:30.07.2013
தொடர்பு: தி.இராசநாயகம், தலைவர், மகாதேவா ஆச்சிரமச் சிறுவர் இல்லம் ஜெயந்தி நகர், கிளிநொச்சி.
தொ.பே.இல: 077 060 4950, 021 492 3118 (C/11013)(3.6.11)

**மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு**
(Discover) டிஸ்கவர் 150cc-WB-XXXX மோட்டார் சைக்கிள் நல்ல நிலையில் உள்ளது. விலை: சைக்கிளைப் பார்த்து பேசித் தீர்க்கலாம்.
தொ.பே: 077 106 3515 (29916)(3.6.11)

**HOLY FAMILY CONVENT JAFFNA PAST PUPILS'ASSOCIATION ANNUAL GENERAL MEETING -2012**
All members of the above association are invited for the Annual General Meeting which will take place on the 27th of **July 2013 at 4.00 p.m.** in the School hall. Members are kindly requested to renew their membership during the meeting. The Past Pupils who wish to join the association may do so at the beginning of the meeting.
Rev.Sr.Bonaventine HF will be the Guest Speaker.
We request the members to contribute generously to the fund raising project of the association.
*Secretary, Past Pupils'Association, Holy Family Convent,Jaffna.* (29919)(3.5.6)
*President, Principal, Holy Family Convent, Jaffna.*

## போதையில் அட்டகாசம் புரிந்தோருக்கு சிரமதானப் பணி

### நீதிமன்று உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூலை 25
மதுபோதையில் பொது இடத்தில் இடையூறு விளைவித்த மூவரை ஊர்காவற்றுறை நீதிமன்றம் மற்றும் ஊர்காவற்றுறை வைத்தியசாலை ஆகியவற்றில் சிரமதானப் பணியில் ஈடுபடுமாறு ஊர்காவற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மூவரும் நீதிமன்றில் தம் மீதான குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவர்களுக்கு இவ்வாறு உத்தரவிடப்பட்டது.
அதனடிப்படையில் ஊர்காவற்றுறை கொத்திக்குளம் பகுதியைச் சேர்ந்த முற்குற்றமுள்ள உதய குமார் சயந்தனுக்கு மூன்று வாரங்களுக்கும், அதே இடத்தைச் சேர்ந்த அ.ஜேசுதாசனுக்கு இரண்டு வாரங்களுக்கும் நீதி மன்றில் சிரமதானப் பணியில் ஈடுபடுமாறும் அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த ப.தேவ குமாரை ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் இரண்டு வாரங்களுக்கும் துப்புர வுப் பணியில் ஈடுபட நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (வ-4)

## சமய சந்நிதிகளில்...

தென்மராட்சி, ஜூலை 25
தணங்களப்பு பெரும்படை கண்ணகை அம்பாள் ஆலய மஹா கும்பாபிஷேகத்தையொட்டி சங்காபிஷேகம் இன்று இடம்பெறும். (வ-9)

★ ★ ★

புலோலி மந்திகை கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த அலங் கார உற்சவம் இன்று வியாழக்கிழமை ஆரம்பமாகின்றது. எதிர்வரும் 9 ஆம் திகதி ஆடிப் பூர தினத்தன்று நடைபெறும் தீர்த்தத் திருவிழாவுடன் அலங்கார உற்சவம் நிறைவுறும். (வ-8)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூலை 25
சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம் எழுதிய தவ முனிவனின் தமிழ் மந்திரம் என்ற நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் பேராசிரியர் மா.வேதநாயகன் தலைமையில் நடைபெறவுள்ளது.
நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் இளைப்பாறிய ஆங்கில விரிவுரையாளர் ச.விநாயகமூர்த்தி தம்பதிகள் கலந்துகொள்ளவுள்ளனர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபராதம்

மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 5 ஆயிரம் ரூபா அபராதம் விதித்த தோடு , வாகன அனுமதிப் பத்திரத்தை 3 மாத காலத்துக்கு பறிமுதல் செய்யவும் ஊர்காவற்றுறை நீதிமன்று உத்தரவிட்டது.
ஊர்காவற்றுறை நீதிமன்றில் நீதிவான் ஆர்.எஸ். மகேந்திரராஜா முன்னிலையில் இந்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டது.
விசாரணையின் போது குற்றம் சாட்டப்பட்டவர் தன் மீதான குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நயினாதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இ.ரதீஸ் என்பவருக்கு இவ்வாறு அபராதம் விதித்தது நீதிமன்று. (வ-4)

## பயனாளிகள் தெரிவு

அச்சுவேலி, ஜூலை 25
வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் ''சுயதொழில் நிவாரணக் கொடுப்பனவு 2013'' என்ற வகையில் இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக தலா 7,500 ரூபா வீதம் மூன்று பயனாளிகளுக்கும் தற்செயல் நிவாரணக் கொடுப்பனவாக தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 4 பயனாளிகளுக்கு கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.
சுயதொழில்நிவாரணக் கொடுப்பனவு 7,500 ரூபா பெறுவோர் விவரம் வருமாறு:
ரூபன் நந்தகுமாரி- சிறுப்பிட்டி தெற்கு (ஆடு வளர்ப்பு), கனகரத்தினம் ஜெயமலர்- உரும்பிராய் கிழக்கு (மாடு வளர்ப்பு), நாகராசா ராசினி - இராதம்பு, கோப்பாய் வடக்கு (கோழி வளர்ப்பு)
தற்செயல் நிவாரணக் கொடுப்பனவாக 10 ஆயிரம் ரூபா பெறுவோர் விவரம் வருமாறு:
தம்பிராசா அமுதா- உரும்பிராய் தெற்கு, கிட்டிணன் யோகதாஸ்- உரும்பிராய் தெற்கு, இரவிச்சந்திரன் சசி- உரும்பிராய் கிழக்கு, வண்டா சின்னக்கிளி- அச்செழு கொலனி.
குறித்த பயனாளிகள் தமது பிரிவு கிராம அலுவலர் ஊடாக பிரதேச செயலக, சமூக சேவை பிரிவுடன் தொடர்பு கொண்டு கொடுப்பனவை பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் எம்.பிரதீபன் அறிவித்துள்ளார். (வ-11)

## சைக்கிள் மீட்பு

தென்மராட்சி, ஜூலை 25
சாவகச்சேரி பொலிஸ் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியில் தேடுவாரற்ற நிலையில் காணப்பட்ட சைக்கிளொன்று பொலிஸாரால் மீட்கப்பட்டு சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
சைக்கிளைத் தவறவிட்டோர் ஆதாரங்களுடன் வருகை தருமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (வ-9)



# இரண்டு வருடங்களில் 145 வீதிகள் புனரமைப்பு

### நல்லூர் பிரதேச சபை முயற்சியால்

யாழ்ப்பாணம், ஜூலை 25
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிரதேச சபையைப் பொறுப்பேற்றுக் கொண்ட கடந்த 2 வருட காலத்தில் சபையின் நிதியில் இருந்து நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட 145 வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.
நல்லாட்சி மன்றத்தின் ஒழுங்கமைப்பில் பிரதேச சபை மற்றும் நகர சபைத் தவிசாளர்களுக்கான 'அனுபவப் பகிர்வு' கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் நல்லூர் பிரதேச சபையில் நடைபெற்றது. இதன்போது சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட வேலைத் திட்டங்கள் தொடர்பாக சபைத் தவிசாளர் விளக்கமளித்தார்.
இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;
கடந்த உள்ளூராட்சித் சபைத் தேர்தலில் யாழ்.மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே அதிக இடங்களைக் கைப்பற்றியது. கடந்த 2 வருடங்களில் சபையின் பொறுப்பை ஏற்றுக் கொண்டதன் பின்னர் வீதிப் புனரமைப்பு, சுகாதாரம், மின் விளக்குப் பொருத்துதல் போன்ற வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.



இதன் அடிப்படையில் சபைக்குக் கிடைக்கக் கூடிய வருமானத்தைக் கொண்டு, அதாவது 57 மில்லியன் ரூபா சபை நிதியைக் கொண்டு 145 வீதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளன.
அத்துடன் மக்களால் பெறப்பட்ட நிதிப் பங்களிப்பு ஊடாக 1055 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் இந்த வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன எனத் தெரிவித்தார். (ஐ-14)

# பாலத்துள் கழிவுகளை வீசும் விஷமிகள்

### நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை



அந்தப் பகுதி மக்கள் தாமே முன்வந்து குப்பைகளை அகற்றி சுத்தமாக்கிய போதும் மீண்டும் மீண்டும் இதே இடத்தில் குப்பையும் துர்நாற்றமும் பெருகிக் கொண்டே வருகின்றது.

யாழ்ப்பாணம், ஜூலை 25
பருத்தித்துறை-தம்பசிட்டி வீதியில் காணப்படும் மீள் நிர்மாணத்துக்குட்பட்ட பாலத்துக்கு அடியில் விஷமிகள் சிலர் குப்பைகள், பழைய போத்தல்கள், இறைச்சிக்காக வெட்டப்படும் கோழிகளின் கழிவுகள் போன்ற கழிவுப் பொருள்களை வீசுகின்றனர். இதனால் அந்தப் பகுதியால் செல்லும் மக்கள் துர்நாற்றத்தால் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
இவ்வாறு குப்பைகளை கொட்டுவதால் கழிவுநீர் பாலத்தின் வழியாக வெளியேற முடியாமல் அந்தப் பகுதிகளில் தேங்கி நின்று நுளம்புகளின் பெருக்கத்துக்கும் வழி ஏற்படுகிறது. இதற்கு தீர்வாக அந்தப் பகுதி மக்கள் தாமே முன்வந்து குப்பைகளை அகற்றி சுத்தமாக்கிய போதும் மீண்டும் மீண்டும் இதே இடத்தில் குப்பையும் துர்நாற்றமும் பெருகிக் கொண்டே வருகின்றது.
இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-34)

# பாரம்பரிய விளையாட்டு விழா நெடுந்தீவில் உற்சாகத்துடன்





நெடுந்தீவில் பாரம்பரிய விளையாட்டு விழா வருடத்தில் இரண்டு தடவைகள் நடத்தப்பட்டு வருகிறது. கடந்த திங்கட்கிழமை இந்த விழா நடைபெற்றது. இந்த வருட இறுதியிலும் விளையாட்டு விழா நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
நெடுந்தீவில் திங்கட்கிழமை பிரமாண்டமான அளவில் நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் விளையாட்டுப் போட்டிகள் இடம்பெற்றன. நீச்சல், மரதன் ஓட்டம், சைக்கிள் ஓட்டம், கபடி, கயிறிழுத்தல், வழுக்குமரம் ஏறுதல், குதிரை ஓட்டம், மாட்டுவண்டிச் சவாரி உட்பட தேங்காய் துருவுதல், முட்டியடித்தல், மின் ஒளியில் கரப்பந்தாட்டம், கொடியெடுத்தல் போன்ற பாரம்பரிய விளையாட்டுக்களில் வீர, வீராங்கனைகள் உற்சாகமாகக் கலந்துகொண்டனர். வெற்றியீட்டிய வீரர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (வ-7)

# உடுப்பிட்டி சங்கத்தால் அரிசி ஆலை திறப்பு





யாழ்ப்பாணம், ஜூலை 25
உடுப்பிட்டிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிதாக அரிசி ஆலை ஒன்றை ஆரம்பித்துள்ளது. முப்பது லட்சம் ரூபா செலவில் இந்த அரிசி ஆலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
அரிசி ஆலையை கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சிவசிறி திறந்து வைத்தார்.
தற்போது அரிசி ஆலை மூலம் நெல் அரிசியாக் கப்பட்டு பின்னர் அதைச் சங்கம் சந்தைப் படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன் தெரிவித்தார். நெல்லைக் கொள்வனவு செய்வதற்காக கடன் வசதிகளும் சங்கத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.
அரிசி ஆலை மூலம் பெறப்படும் அரிசியை சங்கம் நுகர்வோருக்கு நியாய விலையில் விநியோகிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (வ-17)

# வடக்கு மாகாணத் தேர்தலில் கூட்டமைப்பே வெல்லவேண்டும்

### நல்லாட்சி மன்ற குழு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25
நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று மாகாண சபை நிர்வாகத்தைப் பொறுப்பேற்றுக் கொண்டால் தமிழ் பேசும் மக்களுக்கு ஓர் விடிவு காலம் கிடைக்கும். இதனைத் தான் உலகமே ஆவலோடு எதிர் பார்க்கிறது. இவ்வாறு தெரிவித்தனர் நல்லாட்சி மன்றக் குழுவினர்.
பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளது அனுபவங்களைப் பகிர்த்துகொள்ளும் நோக்கில் தென்னிலங்கைப் பகுதியில் இருந்து வருகை தந்த நல்லாட்சி மன்றக் குழுவினர் நேற்று நல்லூர் பிரதேச சபையில் சபைத் தவிசாளர் உறுப்பினர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினர். இதன்போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.
இது குறித்து அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;
உள்ளூராட்சி சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டு பல்வேறு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்து மக்களுக்குச் சேவையாற்றி வருவதைக் காணக் கூடியதாக உள்ளது. மக்களுக்காக அவர்கள் செய்து வரும் பணிகளைப் பாராட்ட வேண்டும்.
இதனைப் போன்று வட மாகாண சபைத் தேர்தலிலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியைப் பொறுப்பேற்றுக் கொண்டால் மேலும், அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க வசதியாக இருக்கும்.
தென்னிலங்கைப் பகுதி தமிழ் பேசும் மக்கள் உட்பட மலையக மக்களும் இதனைத் தான் எதிர்பார்க்கின்றனர்.
உலக மக்களது எதிர்பார்ப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே வட மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்பதாகும் என்று அந்தக் குழு வினர் தெரிவித்தனர். (ஐ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதையல் தோண்டிய 8 பேர் கைது

அம்பாறை,ஜூலை 25
அம்பாறை, இங்கினியா கல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொடகொல்ல பகுதியில் புதையல் தோண்டிக் கொண்டிருந்த எட்டுப் பேரை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கைதுசெய்துள்ளனர்.
சந்தேகநபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்



காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.
கைதுசெய்யப்பட்டவர்கள் திஸ்ஸமாரகம பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் கூறினர்.
இந்தச் [illegible] தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர். (ச)

## தியாகத்தில் இருந்துதான் சாதனைகள் உருவாக்கம்

### உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

எருவில்,ஜூலை 25
ஒவ்வொருவரும் செய்யும் சாதனைக்கு தியாகம் மிகவும் முக்கியமானது. தியாகத்தில் இருந்துதான் சாதனைகள் உருவாகின்றன. எத்தனையோ தலைவர்கள் தங்களுடைய வாழ்க்கையையே சாதனைகளுக்காக தியாகம் செய்திருக்கின்றனர்.
இவ்வாறு கல்முனை வலயத்தின் தமிழ்ப் பிரிவுக்குப் பொறுப்பான உதவிக்கல்விப்பணிப்பாளர் கே.வரதராஜன் தெரிவித்தார்.
தமிழ்த்தினப்போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டி சாதனைகள் படைத்த கல்முனை கார்மேல் பற்றிமாக் கல்லூரி தேசிய பாடசாலை மாணவர்களை பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
சாதனையாளர்கள் என்

> சாதனையாளர்கள் என்றைக்கும் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உடையவர்கள்.

றைக்கும் பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்கும் உரியவர்கள்.
கல்முனை வலயத்தில் 63 பாடசாலைகள் இருந்த போதும் பற்றிமாவில் இருந்துதான் தேசியமட்டத்துக்கு 6 நிகழ்ச்சிகள் கொண்டு செல்லப்பட்டதென்றால் அது இந்தப் பாடசாலையின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டுகின்றது.
சாதனைகளும் தியாகங்களும் என்றும் போற்றப்படவேண்டியவை.- என்றார். (ச-31)

# கிழக்கில் சமாதானத்தை சீர்குலைப்பதற்கு சூழ்ச்சி

### மாகாண ஆளுநர் குற்றச்சாட்டு



இப்தார் நிகழ்வில் கிழக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, எதிர்க்கட்சித்தலைவர் சி.தண்டாயுதபாணி, முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்,ஆளுநர் மொகான் விஜேவிக்கிரம உட்பட பலர் கலந்துகொண்டனர்.

திருகோணமலை,ஜூலை 25
கிழக்கு மாகாணத்தின் சமாதானத்தை சீர்குலைப்பதற்கு சூழ்ச்சித் திட்டம் தீட்டப்பட்டு வருகிறது என்று மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜேவிக்கிரம குற்றஞ்சாட்டியுள்ளார்.
கிழக்கு மாகாணசபையின் விசேட இப்தார் சிறப்பு நிகழ்வு செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு மாகாண சபையின் வீதி அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை தலைமையில் திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.
இந்தநிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு

> கிழக்கு மாகாணத்தில் இனங்களுக்கு இடையில் நிலவிய ஐக்கியத்தை சீர்குலைப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகள் முயற்சிக்கின்றன.

கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
கிழக்கு மாகாணத்தில் இனங்களுக்கு இடையில் நிலவிய ஐக்கியத்தைச் சீர்குலைப்பதற்கு உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகள் முயற்சிக்கின்றன.
கிழக்கின் சமாதானம் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு மிகவும் அவசியமானது.
சில தரப்பினர் நாட்டுக்கும் சமாதானத்துக்கும் எதிராக செயற்பட்டு வருகின்றனர்.
அதனை அனைத்து இன மக்களும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும்.- என்றார். (ச-40)



கிழக்கில் அனைவராலும் சின்னக்கதிர்காமம் என்று அழைக்கப்படுகின்ற தாந்தாமலை முருகன் ஆலயத்தின் தீர்த்தத் திருவிழா புதன்கிழமை நடைபெற்றபோது.... (ச-31)

## ஊருக்குள் புகுந்தன காட்டு யானைகள்

### அக்கரைப்பற்றில் பதற்றம்



அம்பாறை,ஜூலை 25
அக்கரைப்பற்று பிரதேசத்தில் செவ்வாய்க்கிழமை இரவு மூன்று காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்ததில் மக்கள் பெரும் பதற்றமடைந்தனர்.
யானைகளின் பாதிப்பிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையில் பள்ளிவாசல் ஒலி பெருக்கிகள் மூலம் அறிவித்தல் செய்யப்பட்டதுடன், யானைகளை வெளியேற்றும் வகையில் பட்டாசு வெடிகளைக் கொளுத்தினர்.
இதனால் மக்கள் மேலும் அச்சமடைந்து அல்லோல கல்லோலப்பட்டனர்.
முஸ்லிம் மக்களின் புனித நோன்புக் காலமாக இருப்பதனால் இந்தச் சம்பவம் அவர்களது மார்க்கக் கடமைகளை மேற்கொள்வதில் பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியது. பொலிஸார் மற்றும் வன இலாகா அதிகாரிகளுக்கு சம்பவம் பற்றி அறிவிக்கப்பட்டு ஊருக்குள் புகுந்த யானைகளைப் பாதுகாப்பாக வெளியேற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.
அக்கரைப்பற்று, பட்டி மேடு வயல் பிரதேசத்தி லிருந்து ஆலையடிவேம்பு பிரதான வீதியினூடாகவே மூன்று யானைகளும் ஊருக்குள் புகுந்ததாக மக்கள் தெரிவித்தனர்.
விரட்டப்பட்ட யானைகள் புதன்கிழமை அதிகாலை 4.30 மணிக்கு அக்கரைப்பற்று பிரதான வீதியைப் ஊடறுத்து அட்டாளைச்சேனை பாவங்காய் வீதியை கடந்து சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## புதுக்குடியிருப்பில் ஆழிப்பேரலை இடர் முன்னாயத்த ஒத்திகை

மட்டக்களப்பு,புதுக்குடியிருப்பு கிராமத்தில் சுனாமி இடர் முன்னாயத்த ஒத்திகை எதிர் வரும் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது என்று இடர் முகா மைத்துவ மத்திய நிலையத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன் தெரிவித்தார்.
தேசிய மட்டத்தில் 14 மாவட்டங்களில் அன்றைய தினம் நடைபெறவுள்ள சுனாமி இடர் முன்னாயத்த ஒத்திகை வேலைத்திட்டத்தின் கீழ், மட்டக்களப்பு மாவட்டத்துக்கான சுனாமி இடர் முன்னாயத்த ஒத்திகை நிகழ்வு புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது என்று அவர் கூறினார்.
மட்டக்களப்பு மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 7 இடர் முன்னெச்சரிக்கை கோபுரங்களில் 7ஆவதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள இடர் முன்னெச்சரிக்கை கோபுரம் புதுக்குடியிருப்பு கிராமத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
இதனை மையப்படுத்தி புதுக்குடியிருப்பு கிராமத்தில் சுனாமி இடர் முன்னாயத்த ஒத்திகை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

## முஸ்லிம் சமுர்த்தி உத்தியோகத்தருக்கு பெருநாள் முற்பணம்

மட்டக்களப்பு,ஜூலை 25
மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் முஸ்லிம் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு நோன்புப் பெருநாளை முன்னிட்டு ஓகஸ்ட் மாத சம்பளத்தை உரிய வேளைக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று மாவட்ட சமுர்த்தி பிரதிப் பணிப்பாளர் பி.குணரட்னம் தெரிவித்தார்.
பெருநாள் முற்பணத்தை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் கூறினார்.
பெருநாள் முற்பணத்துக்கு விண்ணப்பித்தவர்களுக்கு 5,000 ரூபா முற்பணமாக வழங்கப் படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## ஊடகவியலாளர் பயணிக்க பாஸ் நடைமுறை வேண்டும்

### மாகாணசபை உறுப்பினர் கோரிக்கை

மக்கள் சேவைக்காக தமது நேரம், காலத்தை செலவு செய்யும் ஊடகவியலாளருக்கு கிழக்கு மாகாணம் முழுவதும் பயணித்து தமது கடமைகளை ஆற்றுவதற்கு அரச, தனியார் போக்குவரத்தில் இலவச பாஸ் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.
இவ்வாறு செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிழக்கு





மாகாணசபை அமர்வின் போது தனிநபர் பிரேரணை ஒன்றைக் கொண்டு வந்தார் அகில இலங்கை தேசிய காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுதீன்.
இது குறித்து அவர் உரையாற்றியபோது:
இந்த பாஸ் நடைமுறை ஊவா, வடமேல், வடமத்தி ஆகிய மாகாணங்களில் நடைமுறையில் உள்ளது. அங்கு உள்ளது போல் கிழக்கு மாகாண ஊடகவியலாளருக்கும் இந்த சலுகை வழங்கப்படல் வேண்டும். மாகாண தலைமைச் செயலகம் திருகோணமலையில் அமைந்துள்ளதால் தூர இடங்களில் இருந்து வரும் ஊடகத்தினர்களுக்கு தங்குமிடம், பிர [illegible] வேண்டும்.- என்றார். (ச-10-40)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# முரண்பாட்டை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சி

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

கொழும்பு,ஜூலை 25
இனங்களுக்கு இடையில் முரண்பாடுகளை ஏற்படுத்த சில சக்திகள் முயற்சித்து வருகின்றன என்று தேசிய மொழிகள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார குற்றஞ்சாட்டியுள்ளார்.
கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனங்கள் மற்றும் மத சமூகங்களுக்கு இடையில் தீயை மூட்டும் கும்பல்கள் இந்த உலகம் முழுவதிலும் வியாபித்துள்ளன.
அவ்வாறு இலங்கையிலும் சில தரப்பினர் இனங்களுக்கு இடையில் தீயை மூட்ட முயற்சிக்கின்றனர்.



அவற்றை அணைக்கும் தரப்பாகவே நாம் செயற்பட்டு வருகின்றோம். அனைத்து இன மக்களும் ஒரே விதமாக நடத்தப்படுவதால் எவ்வித பிரச்சினைகளும் ஏற்படா. அரச நிர்வாக சேவைகளில் இன மத பேதம் பாராது அனைவரையும் ஒரே விதமாக கணித்து நியமனங்கள் வழங்கப்பட வேண்டும்.
ஒரு இன சமூகம் மற்றுமொரு இன சமூகத்தை விடத் தாழ்ந்தது அல்லது உயர்ந்தது என்று கருதுவது முரண்பாடுகளையே உருவாக்கும்.-என்றார். (ச)

> ஒரு இன சமூகம் மற்றுமொரு இன சமூகத்தை விடத் தாழ்ந்தது அல்லது உயர்ந்தது என்று கருதுவது முரண்பாடுகளையே உருவாக்கும்.

## பொதுநலவாயத்தின் பிரதிநிதிகள் இலங்கைக்கு

### மாநாட்டு ஏற்பாடுகளை கண்காணிக்க

கொழும்பு,ஜூலை 25
இலங்கையில் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டுக்கான முன் ஏற்பாடுகளைப் பார்வையிடுவதற்காக அதன் உறுப்புரிமை நாடுகளின் பிரதிநிதிகள் அடுத்த மாதம் முதல் இலங்கை வரவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.
ஓகஸ்ட், செப்ரெம்பர் ஆகிய மாதங்களில் சர்வதேச பிரதிநிதிகள் குழு கட்டம் கட்டமாக இலங்கை வந்து, உச்சி மாநாட்டின் முன் ஏற்பாடுகள் குறித்து அறிந்து செல்லவுள்ளனர் என்று அமைச்சின் செயலர் கருணாதிலக்க அமுனுகம கூறினார்.
பொதுநலவாய அமைப்பில் அங்கம் வகிக்கும் 53 நாடுகளும் எதிர்வரும் நவம்பர் மாதம் இலங்கை



யில் நடைபெறவுள்ள பொது நலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொள்ள விருப்பம் தெரிவித்துள்ளன.
இந்தநிலையில் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள விசேட தலைமைகள் சார்பில் அவர்களது பிரதிநிதிகள் குழு இலங்கை வந்து உச்சிமாநாட்டிற்கான ஏற்பாடுகள் குறித்து நேரில் கண்டறிந்து, அவை குறித்து தமது தலைமைகளுக்குவிளக்கமளிக்கும் நோக்கிலேயே இலங்கைக்கு வருகை தரவுள்ளனர் என்று அவர் குறிப்பிட்டார். (ச)



பியகம புதிய பொலிஸ் நிலையத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செவ்வாய்க் கிழமை திறந்துவைத்து விசேட அதிதிகளின் பதிவேட்டில் கையொப்பமிடுகிறார். அருகில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ உட்பட முக்கிய அதிகாரிகள் காணப்படுகின்றனர்.

## உகண்டாவுடன் இலங்கை ராணுவ நுட்பங்கள் பகிர்வு

கொழும்பு,ஜூலை 25
இலங்கை தனது ராணுவ நுட்பங்களை உகண்டாவுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளது. அத்துடன், உகண்டா மக்கள் பாதுகாப்பு படைக்கு விசேட பயிற்சியையும் வழங்கவுள்ளது.
உகண்டாவுக்கு சென்றுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, அந்நாட்டு ஜனாதிபதி யொவரி முஸெவனியுடன் பேச்சு நடத்தினார்.
உகண்டா ஜனாதிபதியும் பாதுகாப்புச் செயலாளரும் ராணுவம் மற்றும் பாதுகாப்பு விடயங்களில் ஒத்துழைப்பு உட்பட இருதரப்பு உறவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளனர். (ச)

## ஹெரோயின் வைத்திருந்த ஒருவர் கைது



கொழும்பு,ஜூலை 25
மோதரை பொலிஸ் பிரிவின் சமித்புர பிரதேசத்தில் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
சந்தேகநபர் வசமிருந்து 5 கிராம் 10 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.
இந்தச் சந்தேகநபர் மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸார் கூறினர்.
சந்தேகநபர் மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## இலங்கை – இந்திய உறவை எவராலும் சிதைக்க முடியாது

### இந்தியத் தூதர் நம்பிக்கை



கொழும்பு,ஜூலை 25
இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் நிலவி வருகின்ற நல்லுறவை எவராலும் சிதைக்க முடியாது என்று இலங்கைக்கான இந்தியாவின் தூதர் யஷ்வர் தன்குமார் சின்ஹா தெரிவித்தார்.
அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலர் மைத்திரிபால சிறிசேனவை அவரது அமைச்சில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு கூறினார்.
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் [illegible] இந்திய [illegible] தலைவர்களுக்குமிடையில் நீண்டகாலமாக நட்புறவு நிலவி வருகிறது என்று அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.
நாட்டின் தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும் அமைச்சர் விவரித்தார்.
இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான நட்புறவுக்கு நீண்ட வரலாறு உள்ளது என்று தூதர் சுட்டிக்காட்டினார்.
எவர் முயற்சி செய்தாலும் இந்த நட்புறவை சிதைக்க முடியாது என்றும் அவர் கூறினார். இலங்கையின் சுகாதாரத்துறை மேம்பாட்டுக்கு இந்தியா தொடர்ந்தும் உதவும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

## கைக்குண்டு கொண்டு சென்ற இருவர் மாட்டினர்

கொழும்பு,ஜூலை 25
மித்தெனிய பொலிஸ் பிரிவின் கல்பொத்தயாய பகுதியில் கைக்குண்டு, துப்பாக்கி மற்றும் ரவைகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
சந்தேகநபர்கள் வசமிருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டு, துப்பாக்கி மற்றும் அதற்கு பயன்படுத்தப்படும் 5 ரவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.
குறித்த பொருள்களுடன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போதே இருவரும் கைதாகியுள்ளனர் என்று பொலிஸார் கூறினர்.

# பொதுநலவாய மாநாட்டால் சிலருக்குப் பெரும் தலைவலி

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

கொழும்பு,ஜூலை 25
பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடைபெறவுள்ளமை சிலருக்குத் தலை வலியாகியுள்ளது.
இந்த மாநாட்டை பொது நலவாய நாடுகள் புறக்கணிக்க வேண்டும் என்று புலம்பெயர் தமிழர்களும், சில இலங்கை அரசியல் கட்சிகளும் கூறுகின்றன.
இங்கு மனித உரிமைகள் இல்லையாம். வெள்ளை வான் வருகிறதாம். சித்திரவதைக்கூடங்கள் இருக்கின்றனவாம்.
இன்று இந்தநிலை எங்குள்ளது? அந்தள வுக்கு தேசத்துக்குத் துரோகமிழைக்க முடியுமா?
இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.
பியகம நீர்த்தேக்கத் திட்டத்தை மக்கள் பாவனைக்காக செவ்வாய்க்கிழமை கையளித்தபோதே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார்.
அங்கு அவர் மேலும் கூறியதாவது:
எதிர்க்கட்சி தேசத்துக்குத் துரோகமிழைக்கக்கூடாது. இன்று நாம் முகங்கொடுக்கும் சவால்களை விடப் பெரிய சவால்களை வெற்றிகொண்டோம். நாட்டுக்கு அழுத்தம் கொடுப்பவர்களுக்கும், துரோகம் இழைப்பவர்களுக்கும் நாம் சொல்ல வேண்டியது இவை மட்டுமே தான்.
2005ஆம் ஆண்டுமுதல் நாம் பல அபிவிருத்தித் திட்டங்களை நாட்டில் முன்னெடுத்து வருகிறோம். நீர்ப்பாசனத் திட்டங்கள், அதிவேகப் பாதை, உலகில் மிகப் பெரிய கப்பலை நங்கூரமிடுவதற்கான துறைமுகம், விமான நிலையம், அனல் மின் நிலையங்கள் முதலானவற்றை நிர்மாணித்துள்ளோம்.
ஆனால் நாம் வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுகின்றோம் என்று எம்மீது பலர் குற்றஞ்சாட்டுகின்றனர். நாம் அபிவிருத்திக்காகவே கடன் பெறுகிறோம். - என்றார். (ச)

> நாம் வெளிநாடுகளிலிருந்து கடன் பெறுகின்றோம் என்று எம்மீது பலர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழகம் வாழ் இலங்கைத் தமிழர் நிலைப்பாட்டின் நியாயப்பாடு.....?

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள இலங்கைத் தமிழர்கள் தமது சொந்த நாட்டுக்குத் திரும்புவது வீழ்ச்சி கண்டுள்ளதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவுற்ற கையோடு, 2010 இல், தமது தாயகத்துக்குத் திரும்பும் தமிழ் மக்களின் எண்ணிக்கை அதிகரித்திருந்தது. ஆனால் அது இப்போது வெகுவாக வீழ்ச்சி கண்டு வருவதாக இந்திய அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இலங்கையின் வடக்கு, கிழக்கில், இறுதிப் போர் நடைபெறுவதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவுக்கு அகதிகளாகச் சென்றவர்களே போர் முடிவுற்ற பின்னர் தமது நாட்டுக்குத் திரும்பினர் என்றும், அதன் பின்னர் மிகக் குறைந்த எண்ணிக்கையினரே சொந்த நாடு சென்றனர் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

1983 இன் கறுப்பு ஜூலையைத் தொடர்ந்து, ஈழத் தமிழ் மக்கள் தமிழகத்துக்கு அகதிகளாக முதல் தடவையாகச் சென்றனர். 1987ஆம் ஆண்டு வரை ஒரு லட்சத்து முப்பத்தினாலாயிரம் ஈழத் தமிழர்கள் அங்கு அகதிகளாகச் சென்றடைந்தனர் என்பது புள்ளிவிவரம். அவர்களில் சுமார் 25 ஆயிரம் மக்கள் தமது சுய விருப்பத்தின் பேரில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் திரும்பினர். அத்தோடு, 1987ஆம் ஆண்டுக்கும் 1989ஆம் ஆண்டுக்கும் இடையில் மேலும் ஒரு லட்சத்து 22ஆயிரம் பேர் வரை அகதிகளாக தமிழகத்துக்குச் சென்றனர்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்திருந்தவர்களில் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலையை அடுத்து சுயவிருப்பத்தின் பேரில் மேலும் 54,188 அகதிகள் இலங்கை திரும்பினர் என்பது புள்ளிவிவரம்.

வடக்கு, கிழக்கில் 1995 ஆம் ஆண்டில் இலங்கை அரச படையினரின் தாக்குதல்கள் அதிகரித்து விஸ்வரூபம் எடுத்ததன் விளைவாக சுமார் 23,000 மக்கள் மீண்டும் தமிழகத்தில் தஞ்சமடைந்தனர்.

இலங்கைத் தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் மட்டுமன்றி, பாண்டிச்சேரி, கேரளா, கர்நாடக, ஒரிஸா ஆகிய மாநிலங்களிலும் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.

இந்தியாவில் பல வருடங்களாக அகதிகள் என்ற நாமத்துடன் வசிக்க விரும்பாது, தமக்கு அந்நாட்டுப் பிரசா உரிமை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்ததும் உண்டு.

இவற்றின் மத்தியில், இலங்கையின் வடக்கு, கிழக்கில் போர் முடிவுற்ற பின்னர் 2011, 2012 ஆம் ஆண்டுகளில் அண்ணளவாக 5,000 பேர்களே இலங்கை திரும்பி உள்ளனர். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதரகத்தின் அனுசரணையுடன் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பினர். அவ்வேளை, அவ்வாறு திரும்பி வந்தவர்களில் மிகப் பலரும், முந்திய வாழ்வனுபவங்களையும், இப்போதைய நம்பிக்கைகளையும் கொண்டு மீண்டும் எமது மண்ணில் வாழ்வதைத் தவிர வேறு மார்க்கம் இல்லை என்று அப்போது கருத்து வெளியிட்டிருந்தமை ஞாபகப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாகும்.

போர் முடிவுற்று நான்கு வருடங்கள் கழிந்த நிலையிலும், இந்தியாவில் தஞ்சம் அடைந்த இலங்கைத் தமிழ் அகதிகளில் மீதமுள்ளோர் மீண்டும் இங்கு திரும்பி வருவதற்குப் பின்நிற்பதற்குப் பல நியாயமான காரணங்கள் உண்டு எனலாம்.

இலங்கையை, தாம் வாழ்ந்த சொந்த இடங்களை (மண்ணை) விட, தமிழகத்தில் வாழ்வதற்கே தாம் விரும்புகிறார்கள் என்று அங்குள்ள அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறியுள்ளனர். இங்கு வருவது பாதுகாப்புக் குறைவானது என்றும் காரணம் தெரிவித்திருக்கிறார்கள்.

மேலும், தமிழக முகாம்களில் வசிக்கும் பெரும்பான்மையான இப்போதைய இளைஞர்கள், அங்குள்ள முகாம்களில் பிறந்தவர்கள். அதனால் தமிழகத்தில் வாழவே அவர்கள் விரும்புகிறார்கள் என்று அதிகாரிகளிடம் கூறியுள்ளனர்.

மொத்தத்தில், இப்போதைக்கு என்றில்லாமல், இலங்கைத் தமிழ் அகதிகள் தமது சொந்த மண்ணுக்குத் திரும்பி வருவது மந்த நிலையையே அடையும் என்று நோக்கர்கள் கருதுகிறார்கள். அதுவும் உண்மையே.

உக்கிரப் போரின் மத்தியிலும், தமது சொந்த மண்ணை விட்டுப் பிரிய மனமின்றி அல்லது மார்க்கமின்றி அகதிகளாகப் பிற நாடுகளுக்குச் செல்ல விரும்பாது அல்லது வாய்ப்பற்று இருந்தவர்கள், இப்போது தமக்குள் தாமே கழிவிரக்கம் கொண்டு கவலைகொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அவர்களில் மிகப்பெரும் பங்கினர், தமது பூர்வீகக் காணிகளை இழந்து போகும் கையறுநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். மற்றும் ஒருசாரார் தமது முந்தைய தொழில்களை ஆற்றி தமது அடிப்படைத் தேவைகளை பெற இயலாது அல்லாடுகிறார்கள்.

மேற்கூறிய பிரதான அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளை பெற இயலாது திக்குமுக்காடும் தரப்பினர் ஒரு புறம் இருக்க–

அச்சமற்ற, இடையூறு இல்லாத, நாளாந்த வாழ்க்கைக்கான செயற்பாடுகளில் எவர் எப்போது மூக்கை நுழைத்து சங்கடம் உண்டாக்குவரோ என்ற சூழலை எவ்வாறு எதிர்கொள்வது அல்லது சமாளிப்பதென தமக்குள் தாமே சஞ்சலமுறும் நிலை சகஜமாகிவிட்டதால்--

வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களின் இன்றைய நிலை அந்தரிக்கும் வகையாகிவிட்டது.

கண்ணுக்குப் புலப்படாத வகையில், மனப்பதற்றம் மேலெழுந்து நிற்கும், பயமுறுத்தும் ஒவ்வாத சூழலில் வாழவேண்டிய நியதியா இது என்று இங்கே உள்ளவர்கள் சங்கடப்படுகிறார்கள்.

ஆகையால், தமிழகத்தில் அகதிகளாக வாழும் இலங்கைத் தமிழர்கள் இங்கே திரும்பி வருவதற்கு பின் நிற்பதனை, தவறான அல்லது ஏற்கமுடியாத ஒன்றாகக் கொள்ளமுடியாது; அல்லவா.....?

# தமிழர்களின் விடிவுக்காக

● க. கோணேஸ்

மாவை சேனாதிராசாவா, விக்னேஸ்வரனா வடமாகாணசபைத் தேர்தலுக்கான முதலமைச்சர் வேட்பாளர் என்ற இழுபறிக்கு முடிவு காணப்பட்டிருக்கிறது. கட்சியின் கட்டுக்கோப்பும் தமிழ் மக்களின் ஒற்றுமையும் கருதி மாவை இப்போட்டியிலிருந்து தானாகவே விலகிக்கொண்டதன் பேரில் விக்னேஸ்வரனே முதலமைச்சருக்கான வேட்பாளர் என கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

மாவை தாமாகவே முன்வந்து விலகியிருக்காவிடின், விளைவுகள் பாரதூரமானவையாக அமைந்திருக்கலாம். சம்பந்தன், சுமந்திரன் போன்றவர்கள் விக்னேஸ்வரனே தகுதியான வேட்பாளர் என்று விடாப்பிடியாக நின்றனர். ஏனையோர் மாவையே அதற்குப் பொருத்தமானவர் என்றனர்.

எனினும், மாவையின் பெருந்தன்மை காரணமாகத் தலைவர் சம்பந்தனின் விருப்பம் இலகுவாகவே நிறைவேறியிருக்கிறது.

மாவை சேனாதிராசா ஒரு நீண்டகால அரசியல் தொண்டர். ஏறத்தாழ அரை நூற்றாண்டுக் காலமாகக் கட்சிப்பணி ஆற்றிவருபவர். 1970களின் தொடக்கத்தில் தமிழரசு வாலிப முன்னணி என்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இளைஞர் பிரிவுக்குத் தலைமைத் தாங்கி அதனை வழிநடத்தி கட்சிக்குப் பலம் சேர்த்தவர். மக்களிடம் நெருங்கிப் பழகும் இயல்பு, மக்கள் தாமாகவே வந்து எந்தவிதத் தயக்கமுமின்றி உரிமையோடு உறவாடும் அழகு, வடக்கு, கிழக்கு மண்ணில் ஒவ்வோர் அங்குல நிலத்திலும் அவரது கால் பதிப்பு, ஆகியவை மாவையின் சிறப்புக்கள்.

விக்னேஸ்வரன் நேர்மையான மனிதர். சிறந்த நீதிபதி என்ற தகைமைகளைக் கொண்டிருந்தாலும் பொதுமக்கள் மத்தியில் அவர் பிரபலமானவராகவோ, அவர்களின் அன்பைப் பெற்றவராகவோ காணப்படாதவர். உயர்தட்டு மக்களிடையே அவரது பெருமைகள் உணரப்பட்டிருக்கின்றன.

சிறந்த தமிழ்மொழி ஆற்றல் உடையவராகவும், சிவநெறிச்சார்பு உடையவராகவும் தம்மை அடையாளப்படுத்தியிருக்கிறார். அவர் ஆற்றலுடைய மனிதரா அல்லரா என்ற கேள்விக்கோ, அவர் நல்லவரா இல்லையா என்ற பேச்சுக்கோ இங்கே இடமில்லை. உண்மையில் அவர் ஆற்றலுடைய சிறந்த மனிதர்.

அவர் சட்டத்துறையில் நீண்டகால அனுபவமும் தெளிவான அறிவும் கொண்டவர். நீதியரசராகப் பதவி வகித்து ஓய்வுபெற்றவர். சம்பந்தன், விக்னேஸ்வரனை உள்வாங்க வேண்டுமென்று விடாப்பிடியாக நின்றதற்கு இவை பொருத்தமான காரணங்களாக இருந்திருக்கலாம்.

நீதித்துறைச் சார்ந்த ஒருவருக்குச் சில கடப்பாடுகள் இருக்கவே செய்யும். இனம்சார்ந்தோ, மதம்சார்ந்தோ, அரசியல்சார்ந்தோ அவர் பொது நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது. வேண்டுமானால், பதவியை உதறித் தள்ளிவிட்டு அத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபட முடியும்.

ஆனால், ஓய்வுபெற்ற பின்னர் நீதித்துறைசார்ந்த எந்நிலை உத்தியோகத்தரும் தன்னிலையை வெளிப்படுத்திச் செயற்படுவதற்குத் தடையேதும் கிடையாது. ஓய்வுபெற்ற நீதியரசர் விக்னேஸ்வரனும் இதற்கு விதிவிலக்கானவர் அல்லர். அவர் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடனோ அல்லது தமிழர் நலன்சார்ந்த அரசியல் அமைப்புகளுடனோ இணைந்து பணியாற்றியிருக்கலாம். அவரது சட்டஅறிவு, சட்டத்துறை அனுபவம், ஆங்கிலப் புலமை என்பவற்றை ஓய்வுபெற்றக் காலம்தொடக்கம் தமிழர்கள் நலன்சார்ந்த செயற்பாடுகளில் பயன்படுத்தியிருந்தால் இன்று அவர் முதலமைச்சர் வேட்பாளராக வருவதற்குத் தமிழரசுக் கட்சிக்குள் எதிர்ப்புகள் எழுவதற்கான நியாயங்கள் இல்லாமல் போயிருக்கும்.

வடமாகாண முதலமைச்சர் பதவியால் மட்டும்தான் தமிழர்களுக்குச் சேவை செய்ய முடியும் என்பது போன்ற அபத்தமான கருதுகோளைத் தூக்கிக்கொண்டு தம்மைப் புத்திசாலிகளாகக் கருதிக்கொள்ளும் சிலரும் செயற்பட்டிருக்கவேண்டிய தேவை நேர்ந்திருக்காது.

பதவி இருந்தால்தான் தமிழினத்துக்குச் சேவைசெய்ய முடியும் என்பதில் எந்தவித உண்மையும் கிடையாது. சில புத்திசாலிகள் தங்களுக்குள் இவ்வாறான ஒருவகைத் தோற்றப்பாட்டை உருவாக்கிக்கொண்டு அதனை மற்றவர்கள் மீதும் திணித்துக்கொண்டிருக்கிறார்கள்.

ஆயிரக்கணக்கான இளைஞர்கள் தம் இன்னுயிர்களை எங்களுக்காக அர்ப்பணித்தார்களே, இந்தத் தியாகங்கள் படிப்பினாலோ பதவியாலோ நிகழ்ந்தவையெனக் கருத முடியுமா? தமிழன் என்ற உணர்வினாலும் எம்மாலும் முடியும் என்ற தற்றுணிவினாலும் நிகழ்ந்தவைதானே அவை.

இன்றும் பல்லாயிரக்கணக்கான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தொண்டர்கள் தமது தேவைகளைச் சுருக்கித் தமிழர்கள் நலன்பெற உழைத்துக்கொண்டிருக்கிறார்களே! இவர்கள் எந்தப் பதவி வழிநின்றும் தமிழர் விடியலுக்கான தொண்டில் ஈடுபடவில்லை. பதவியில்லாமல், புகழ் இல்லாமல், தான்சார்ந்த கட்சித் தலைமையுடன் நெருங்கிய தொடர்புகூட இல்லாமல் இவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

பதவி எதுவும் இல்லாமல் வடமாகாண சபை முதல்வருக்குச் சட்ட ஆலோசனை வழங்கும் ஒரு வழிகாட்டியாக விக்னேஸ்வரன் இயங்க முடியாதா? என்ற கேள்விகள் தமிழரசுத் தொண்டர்களின் மனங்களில் எழுந்து நிற்கின்றன.

விக்னேஸ்வரன் ஆற்றல் மிக்கவர்; அறிவு நிரம்பியவர்; நல்ல அனுபவசாலி என்பதில் கட்சித் தொண்டர்கள் எவரும் கருத்துவேறுபாடு கொள்ளவில்லை. அவர் நேர்மையானவர், செயலூக்கம் மிக்கவர் என்பதைக்கூட எவரும் மறுத்துப் பேசவில்லை. ஆனால், மாவையுடன் அவரை ஒப்பிட்டு ஆங்கிலப் புலமை மிக்கவர், சட்டநுணுக்கம் கைவரப்பெற்றவர் என்று வெளியிலிருந்து சில புத்திசாலிகள் குரல்கொடுத்துக் கொண்டிருப்பதுதான் அபத்தமானது. ஆங்கிலம் ஒரு மொழி. அது அறிவு அல்ல. தொடர்பாடலுக்கும் வெளியுலக இணைப்புகளுக்கும் ஆங்கிலம் சிறந்த ஊடகம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், ஆங்கிலம் தெரிந்தால்தான் இவற்றைச் செய்யலாம் என்ற வாதத்தில் எந்த உண்மையும் கிடையாது. ஆங்கிலம் தெரியாதவர்கள் சாதனை புரிய முடியாது என்ற கருதுகோளிலும் உண்மை கிடையாது. ஆங்கிலப் புலமைமிக்க அப்புக்காத்துமார்களால் – கால்நூற்றாண்டுக் காலமாகத் தமிழகத்துக்கே எங்கள் பிரச்சினையை எடுத்துச்செல்ல முடியாத நிலையில், ஆங்கிலம் தெரியாத இளைஞர்களால்தான் தமிழர் பிரச்சினை சர்வதேசத்துக்கே எடுத்துச் செல்லப்பட்டது என்ற கசப்பான உண்மையை நாங்கள் நிராகரித்துவிட முடியாது.

ஆங்கிலத்தில் நல்ல பரிச்சயமற்ற ஜனாதிபதி பிரேமதாஸ, இலங்கை மக்கள் மனதில் உயர்ந்து நிற்கும் அளவுக்கு ஆங்கிலப் புலமை மிக்க ஏனைய ஜனாதிபதிகளால் உயர்ந்து நிற்க முடியாமற்போனதன் காரணம் என்ன? தமிழ்நாட்டின் மிகச்சிறந்த முதலமைச்சர்களாக இன்றும் மக்கள் மத்தியில் போற்றப்படுகின்ற கர்மவீரர் காமராஜரும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரும் எந்தப் பல்கலைக்கழகத்தில் படித்து ஆங்கிலப் புலமை பெற்று மக்களுக்கு நல்லாட்சி வழங்கினார்கள்?

ஆங்கிலம் இருந்தால்தான் அரசியலில் சாதிக்கலாம் என்று இப்போது கொழும்பிலிருந்து பேசிக்கொண்டிருக்கும் சில தமிழர் பெருமக்கள் நான் காண்டுகளுக்கு முன்னர் வன்னித் தம்பிமார்களுக்கு இந்த அறிவுரையை வழங்காமல் போனது ஏன்?

சட்டம் தெரிந்திருந்தால்தான் தமிழர் அரசியலை முன்னெடுத்துச்செல்லலாம் என்ற பொய்யான பரப்புரைகளும் செய்யப்பட்டு வருகின்றன. சட்டம் தெரிந்த எமது தலைவர்களும் நாடாளுமன்றத்தில் வீற்றிருந்தபோதுதான் தமிழ்மக்களுக்குப் பாதுகாப்பா இருந்த 29ஆவது சரத்து இல்லாமல் செய்யப்பட்டது. குடியுரிமைச் சட்டம், சிங்களம் மட்டும் சட்டம், அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பவையெல்லாம் கொண்டுவரப்பட்ட காலத்தில் எமது சட்ட அறிஞர்களால் என்ன செய்ய முடிந்தது?

சட்ட அறிவும், ஆங்கிலப்புலமையும் கொண்டிருந்த பண்டாரநாயக்காதான் சுதந்திர இலங்கையில் முதலாவது இனக்கலவரத்தைத் தொடக்கி வைத்தார். அதன்பின்னர் ஆங்கில அறிவும், சட்டநுணுக்கமும் தெரிந்திருந்த ஜே.ஆர்.ஜெயவர்தனாதான் 1983இல் கறுப்பு ஜூலையை நிகழ்த்தி தமிழர்களை வதம் செய்தார். இப்போதுகூட ஆங்கிலம் தெரிந்த சட்டதரணியான மஹிந்த ராஜபக்ஷதான் முள்ளிவாய்க்கால் அவலத்தின்மூலம் தமிழர்களின் போராட்டத்தைச் சிதைத்தார்.

இவையெல்லாம் இடம்பெறும்போது ஆங்கிலப் புலமையும் சட்டஅறிவும் நிரம்பிய தமிழர் பக்கத்து அறிஞர்கள் கைகளைப் பிசைந்துகொண்டிருந்ததைத் தவிர வேறு என்ன செய்துகொண்டிருந்தார்கள்? இவைதாம் இலங்கை அரசியல் வரலாற்றில் சட்டத்துறை அறிவும், ஆங்கிலப் புலமையும் நிகழ்த்திய சாதனைகள்.


இப்படிக் கூறுவதால் இவற்றை விக்னேஸ்வரனுக்கு எதிரான கருத்துகளாக எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. சட்ட அறிவும், ஆங்கிலப் புலமையும் இருந்தால் மட்டுமே சாதிக்கலாம் என்று வாதிடுவோருக்கு எதிரான கருத்துக்களே இவை. விக்னேஸ்வரன் என்ற நல்ல மனிதருக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு அரசியல் குளிர்காய ஆசைபடுவோருக்கு எதிரான கருத்துக்களே இவை.

எவ்வாறெனினும், வடமாகாண சபைக்கு தமிழர் தரப்பு வேட்பாளர் விக்னேஸ்வரன் என உறுதிப்படுத்தப்பட்டிருப்பதால் அவர் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைக்கவேண்டியது தமிழ்த் தேசியத்தின் தலையாய கடமை. வடமாகாணத் தமிழர்கள் விரக்தியில் சோர்வடைந்து போனால் விபரீதமான நபர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்து தமிழர் போராட்டத்தையே தடம் தெரியாமல் அழித்துவிடுவார்கள். எனவே, விக்னேஸ்வரன் தமிழர்கள் விடிவுபெற உண்மையுடன் உழைப்பார் என்ற நம்பிக்கையுடன் வடபகுதி வாக்காளர்கள் செயற்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்க்கையில முன்னேறி விடவேணும்..."

தர்ஷன்







குளிருடன் கூடிய மெல்லிய காற்று. அந்தக் காற்றுடன் கூடவே தவழ்ந்து வரும் ஒருவிதமான வாடை. இடையிடையே வாகன இரைச்சல்கள். சாதாழைகள் நிரம்பிய சதுப்பு நிலம். சிறிது தூரத்தில் வரிக் குதிரைபோன்று காணப்படும் ஒரு பரவைக்கடல். அந்தக் கடலிலே கண்ணுக்கெட்டிய தூரத்துக்கு மீனவர்கள் யாருமே இல்லை. தலையிலே மொட்டாக்கு அணிந்த நான்கு பெண்கள் மட்டும் அங்கே நின்று கொண்டிருந்தார்கள். அன்று சனிக்கிழமை அந்த வழியால் போகும்போது பார்த்த அந்தக் காட்சி எனக்குள் ஏதோ ஒருவித உணர்வை ஏற்படுத்தியிருந்தது. அங்கே மறுபடியும் போகவேண்டும் என்ற எண்ணம் என்னுள் ஏற்பட்டது. மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை நேரம் அங்கே சென்றேன்.

முதல் நாளைப்போலவே அன்றும் இருந்தது. நான்கு பெண்கள் கடற்கரையில் முழங்கால் அளவு நீரில் எதையோ தேடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் ஓர் இடத்தில் நிற்கவில்லை. அங்கும் இங்குமாகத் தேடுகின்றனர். கிடைக்கவில்லை என்றில்லை தேடித் தேடி எடுத்து இருவர் உரைப்பைகளிலும் மற்றைய இருவர் பெயின்ற் வரும் வெற்று வாளிகளிலும் போடுகின்றனர்.

நான்கு பேரும் நிமிரவில்லை. குனிந்தபடியே கிட்டத்தட்ட ஒரு மணி நேரமாக அந்தக் கடலுக்குள்ளேயே நின்று கொண்டிருந்தார்கள்.

சிறிது நேரத்தின் பின் மெல்ல மெல்ல கரையை அடையத் தொடங்கிய அவர்கள் என்னைப் பார்த்ததும் பயந்தவர்களாக, பார்த்தும் பார்க்காதவர்களாக வேகமாக நடக்கத் தொடங்கினர். எனக்குப் புரிந்தது. உடனே "அக்கா" என அழைத்தேன். யாரும் பார்க்கவில்லை. மறுபடியும் "அக்கா..அக்கா.." என்றேன். ஒருவர் மட்டும் திரும்பினார். மற்றயவர்கள் நின்றார்கள். எனக்கு இது போதுமானதாக இருந்தது.

அவர்களிடம் கதைப்பதற்காக கிட்டப் போனேன்.

"யாருமே இல்லாத இந்த நேரம் கடலுக்குள் என்ன தேடுகிறீர்கள்?"

இதற்கு அவர்கள் எந்தப் பதிலும் சொல்லவில்லை. மௌனமாக வாளியைக் காட்டினார்கள். ஆவலுடன் "என்ன இது" என்றேன். எனக்கு ஒரே குழப்பம். "இதுமட்டி" அப்போதுதான் புரிந்தது, அவர்கள் பொறுக்கியது மட்டி என்று. ஆனால் இதை ஏன் பொறுக்குகின்றார்கள். "தம்பி என்ன யோசிக்கிறீர்...? நாங்க எங்கட சாப்பாட்டுக்காகதான் இதப் பிடிக்கிறம். எங்கட கணவன்மார் கடல்தொழில் செய்யிறேல்ல. அவையள் கூலி வேலதான் செய்யினம். எந்த வேலை செய்தாலும் எங்களால எங்கட வருமானத்தைக் கூட்ட ஏலாது. அவையள் உழைச்சுக் கொண்டு வாறது எங்கட அன்றாடசெலவுக்கும் பிள்ளையளின்ர படிப்புக்கும் சரியாய்ப் போகும். நாங்களும் பெரிசா படிக்கேல்ல. சும்மா வீட்ட தானே இருக்கிறம். எங்களுக்கு சமைக்கிறதும் வீட்டில குந்துறதும் தானே வேல. அதுதான் சும்மா இருக்காம இந்தக் கடலில வந்து கிடக்கிறதுகள பொறுக்கிக் கொண்டு போய் ஏதாவது மரக்கறியளும் போட்டு சமைச்சாமச்சம் வாங்கிற காசாவது மிஞ்சும். அதுதான் பொறுக்கிறணாங்கள்"

இன்னொருவர், "எங்கட இடம் ஆனைக்கோட்டை. நான் சின்னனில அம்மாவோட வந்து மட்டி பொறுக்கிறனான். இப்ப இஞ்ச மாதா கோயிலுக்கு பின்னால இருக்கிறன். காக்கைதீவு எனக்கு பழகிப் போயிற்று. இதால காச மிச்சப்படுத்தலாம். அதோட கடல் எல்லாருக்கும் சொந்தம். இது கரையில கிடக்கிறது தானே. ஆம்பிளையள் இதத் தேட மாட்டினம். அவையள் றால், நண்டு, மீன், எண்டுதான் போவாங்கள். இதில காலுக்க கிடக்கிறத நாங்க சாப்பிடுவம். என்ன வந்தது? இது எங்களால ஏலாதா? இதைக்கூட செய்யாட்டி பிறகென்ன...?"

முதலில் கதைப்பதற்குப் பின்தங்கிய அவர்கள் மாறி மாறி கனதக்க ஆரம்பித்தாங்கள்.

மட்டி கடலிலே எந்தக் காலத்திலும் இருக்குமாம். இதற்கெண்டு ஒரு பருவ காலம் இல்லை. எப்போது போனாலும் இதைப் பிடித்து கொள்ளலாம். அவர்கள் ஒவ்வொருவரும் ஒரு மணி நேரத்துக்குள் சுமார் இரண்டு கிலோ மட்டியைப் பிடித்திருப்பார்கள். எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறி விட வேண்டும் என்று அந்த முழங்கால் அளவு தண்ணீரில் முத்துக் குளிக்கும் இந்தப் பெண்கள் உண்மையில் பாராட்டப் பட வேண்டியவர்கள். வறுமையின் காரணமாக தன்னையும் அழித்து தன்னுடைய குழந்தைகளையும் அழித்துக்கொள்ளும் தாய்மார்கள் பற்றி நாம் கேள்விப்பட்டதுண்டு.

> எப்படியாவது வாழ்க்கையில் முன்னேறி விட வேண்டும் என்று அந்த முழங்கால் அளவு தண்ணீரில் முத்துக் குளிக்கும் இந்தப் பெண்கள் உண்மையில் பாராட்ட பட வேண்டியவர்கள்.

மாறாக சுய தொழிலுக்காக ஊக்குவிப்பு கொடுப்பனவு வங்கிகள் தற்போது யாழ். மண்ணிலே முளைத்து கிளைகள் விடவும் ஆரம்பித்துள்ளன. ஆனால் அதற்கு முன்னேயே இந்த வங்கிகளில் கடனுதவிகளைப் பெற்று அதைத் திரும்பச் செலுத்த முடியாமல் தற்கொலைகள் செய்து கொண்ட பலரைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்.


இப்படி இருக்கையில் எந்தவித உதவியையும் நாடாமல் தாமே தங்களுடைய உடலையும் கையையும் தங்களுடைய தன்னம்பிக்கையையும் மாத்திரம் நம்பி இன்னமும் பல பெண்கள் இருக்கின்றனர் என்பதற்கு இவர்கள் சிறு உதாரணம்.

இந்த மட்டி தற்போது சந்தைகளிலும் விற்பனைக்காக பொதிசெய்யப்பட்டு வந்துள்ளது. இவர்களில் சிலர் சமையல் தவிர்ந்து மிஞ்சுவதை விற்பனைக்காக தயார் செய்கின்றனர். "ஒரு கிலோ சின்ன றால் 500 ரூபா விக்கினம். இதில ஒரு கிலோ பிடிச்சா அந்தக் காசு மிச்சம். இந்த மட்டி உயிரோட இருக்குது. இப்பிடியே தண்ணியோட வைச்சா இத நாளைக்கும் சமைக்கலாம். மட்டியப் பிடித்து உடைச்சா இதின்ர கோது சிப்பி இப்பிடி நிறைய இருக்கும். மட்டி பிடிச்சா சிப்பியை விக்கலாம். சுண்ணாம்புக்கு எடுப்பாங்கள்" என்று பேசியபடியே அவர்கள் நடக்க ஆரம்பித்தார்கள்.

அவர்களின் தன்னம்பிக்கையை வியந்தபடி நானும் புறப்பட்டேன்.

---

# நடக்கும் அதிசய மீனினம்



நீரிலும் நிலத்திலும் மிக அதிக வேகத்தில் செல்லும் கப்பலை ஹோவர் கிராப்ட் கப்பல் என்கிறார்கள். இந்தக் கப்பலைப் போலவே கடலில் நீந்தியும் நிலப் பரப்பில் நடந்தும் செல்லும் அரியவகையான ஒரு மீன் இனம்தான் நடக்கும் மீன். இவை சுவாசிப்பதும் நடப்பதும் வித்தியாசமானவை.

சகதி அதிகம் நிறைந்த கடற்கரைகளில் நிலப் பரப்பிலும் கடலிலும் இது வாழும். இந்த நடக்கும் மீனுக்கு 'கோபிடே' என்பது விலங்கியல் பெயர். சொல்லப் போனால் நீரைவிட நிலத்தில் அதிக சுறுசுறுப்புடன் வாழக்கூடிய ஜீவன். பொதுவாக சாதாரண மீன் வகைகள் தனது துடுப்புக்களை நீந்துவதற்கு மட்டும் தான் பயன்படுத்தும். ஆனால் இந்த மீன் இனமோ தனது முன் துடுப்புகளை கால்களாக உருமாற்றி நிலத்தில் நடப்பதற்கு ஏற்றவாறு அமைத்துக் கொள்வது இதன் சிறப்பு. சில சமயங்களில் கடலுக்கு அடியில் தண்ணீருக்குள் இருக்கும் போது சந்தோஷம் வந்து விட்டால் சுமார் 2 அடி உயரத்துக்குத் தாவிக் குதிக்கும். கடலுக்கு அடியில் சகதி நிறைந்த இடங்களில் துளைகள் அமைத்து அதை வீடு போலாக்கி அவற்றுக்குள் மறைந்து வாழ்கின்றன. கடல் அலைகள்கூட இவ்வீடுகளைச் சேதப்படுத்த முடியாத வகையிலும் எதிரிகளிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் கடலில் ஏற்படும் வெப்பத்திலிருந்து தப்பிக்கவும் இந்த வீடுகள்தான் இவற்றுக்குப் பேருதவியாக இருக்கின்றன.

இக்குழிகளுக்குள் முட்டையிடும் போது அவை பாதுகாப்பாக இருக்க காற்று நிரப்பிய பை போன்ற ஒன்றையும் உருவாக்கி விடுகின்றன. சுவாசிக்கத் தேவைப்படும் ஒட்சிசனின் அளவு குறையும்போது தேவைப்பட்டால் இக்காற்றுப் பைகளில் உள்ள காற்றையும் இவை சுவாசித்துக் கொள்கின்றன.

மியுகஸ் படலம் சூரிய ஒளியால் இதன் தொண்டைப்பகுதி காய்ந்து விடாமல் பாதுகாக்கிறது. இந்த மீன்களின் செதில் ஏனைய மீன்களைப்போல இல்லாமல் தடித்தும் பெரியதுமாக காணப்படுகின்றது.

அதிலும் காற்றை நிரப்பி வைத்துக் கொண்டு நிலத்தில் நடக்கும் நேரங்களில் அதன் மூலமும் சுவாசித்துக் கொள்வது இந்த மீன்களிடம் உள்ள மேலும் ஒரு சிறப்பு.

பெரியோ தாலமஸ் என்ற வகையைச் சேர்ந்த நடக்கும் மீன்களில் மட்டுமே 18 வகைகள் இருப்பதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்தியாவின் மேற்கு வங்காளத்தில் சுந்தர வனக் காடுகள், குஜராத்தில் கட்ச் வளைகுடா பகுதிகள் மற்றும் மாங்குரோவ் காடுகளிலும் இவை மிக அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த மீன்கள் கடற்கரைகளில் தனக்கென ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டு அந்தப் பகுதிகளில் ஏனைய மீன்களை நுழையக்கூட விடுவதில்லை. கடற்கரைகளில் வாழும் புழுக்கள், பூச்சிகள், சிறு நண்டுகள் இவற்றை உண்டு உயிர் வாழும். கடலுக்கு அடியில் சகதிக்குழிக்குள் இருக்கும் போது கண்கள் பாதிக்கப் படாதவாறு தவளையைப் போன்று உடலின் வெளிப்புறத்தில் பெரிய கண்கள் இருக்கின்றன.

'மட்ஸ்கிப்பர்' என்ற ஆங்கிலப் பெயருடைய இம்மீன்கள் தவளைகளைப்போலவே நீரிலும், நிலத்திலும் வாழ்வதும் தவளைகளைப் போலவே தோலாலும் சுவாசிக்க கூடிய ஒரு அபூர்வ ஜீவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் அரங்கில் ஆதிக்கம் செலுத்துவது ஆண்களே

ஒரு ஆணானவன் தன்னகத்தே, வீரம், வெற்றி, துணிச்சல், ஆளுமை, ஆற்றல், தாங்குதல், பொறுத்துக் கொள்ளல் போன்ற குணாம்சங்களைக் கொண்டவனாகக் காணப்படுகின்றான். பெண்ணுக்குரிய குணாம்சம் அல்லது அடையாளம் என்பது எப்போதும் மென்மை என்றே சொல்லப்படுகின்றது.

அரசியல் என்பது மென்மையுடன் சம்பந்தப்பட்டது அல்ல. சங்க காலத்தில் இருந்து தற்போது வரை பெண்களை எப்போதுமே வீரம், வெற்றிக்கு ஒப்பிடுவது இல்லை. எனவே அரசியலில் பெண்கள் பிரவேசிப்பதை அவர்களே விரும்பினால்கூட அவர்களால் அத்துறையில் முன்னுக்கு வர முடியாது. வெறுமனே தூண்டலாக மட்டும் செயற்படமுடியுமே தவிர ஒருபோதும் துலங்க இயலாது. அதனால் அரசியல் துறையில் அதிகம் பிரவேசிப்பது ஆண்களாகவே உள்ளனர். பெண்ணானவள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்புக்களுடன் சமூகத்தில் நடமாடும் உயிருள்ள பொம்மை. இந்தப் பொம்மையை இயக்கத்தான் முடியும். அது தானாக இயங்காது. அப்படித் தானாக இயங்கினால் அது பொம்மை (பெண்மை)யாக இருக்க முடியாது. அதைச் சமூகம் ஏற்றுக் கொள்ளாது.

ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்பார்கள். அதேபோன்றுதான் அரசியலிலும் பெண்கள் ஆண்களின் பின்னால்தான் இருப்பார்கள். அவர்கள் அரசியலில் ஜொலிப்பது என்பது சாத்தியமற்ற ஒன்று.

ஆண்கள் எதையும் செய்வார்கள் மனம் தளரமாட்டார்கள். ஆனால் பெண்ணோ இதற்கு மாறுபட்டவள். இன்றைய அரசியல் காரசாரமானது. ஒருவரைக் கவிழ்ப்பதற்கு பல வகையில் சிந்திப்பார்கள்; முயல்வார்கள்.

ஒரு ஆண் அரசியலிலே கவிழ்க்கப்பட்டால் அவன் குதிரை போன்று உடனே எழுந்துவிட முடியும். ஆனால் பெண் யானை போன்று தவழ்ந்து தான் எழுவதற்கு பல காலம் தேவைப்படும். சில வேளை எழுவே முடியாமலும் போகும். இப்படிப்பட்ட பெண்களை சமூகம் ஒரு போதும் ஏற்றுக் கொள்ள மாட்டாது.

பாரதியார் எத்தனை புதுமைப் பெண்களை கண்டிருந்தாலும் அத்தனை பெண்களும் ஒரு போதும் தங்களுடைய இயல்பில் இருந்து மாறுவது இல்லை. ஆகவே அரசியலில் அதிகம் பிரவேசிப்பது ஆண்களே. அவர்களால் தான் சேறு கண்ட இடத்திலே உழக்கி தண்ணீர் கண்ட இடத்திலே கழுவவும் முடியும். இது தான் இன்றைய அரசியல்.

சந்திரகுமார், தொல்புரம்.

> ஒரு ஆண்
> அரசியலிலே
> கவிழ்க்கப்பட்டால்
> அவன் குதிரை
> போன்றவன்.
> உடனே எழுந்துவிட
> முடியும். ஆனால்
> பெண் யானை
> போன்று தவழ்ந்து
> தான் எழுவதற்கு
> பல காலம்
> தேவைப்படும்.


## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

அரசியல் பிரவேசத்தில் ஆதிக்கம் செலுத்துவது

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.



தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ......................................................

..........................................................

.......................... ..........................
திகதி கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## கணக்கில் சேராதவன்

ஊரின் கோடியில் ஒருவன் தூக்கில் தொங்கினான். சென்று பார்த்தவர்கள் எல்லோரும் தற்கொலை எனத் தீர்மானித்தார்கள். காவலர்கள் வந்து கவனித்துவிட்டு சாவில் ஏதோ சந்தேகம் என்றார்கள். நீதிவான் வந்தார், விசாரணை நடந்தது. சாட்சியங்கள், தடையங்கள் என்று சகலமும் ஆராயப்பட்டன. பகிரங்கத் தீர்ப்பு வழங்கி கடமையை முடித்தார் நீதிபதி. காலம் செல்லச் செல்ல கதைகள் வளர்ந்தன. செத்தவன் தேடப்படுகின்ற தீவிரவாதி, பக்கத்து ஊரில் பலகாலம் திருடிய பக்கா பேர்வழி. தூரத்து நாட்டில் தொழில் புரிந்துவிட்டு நாட்டுக்குத் திரும்பிய ஒரு நல்ல குடிமகன். இப்படித்தான், அவனைப் பற்றிய கதைகள் கனக்கவும் பரவின மக்கள் மத்தியில் சடலம் சவக்கிடங்கில் பலநாள் கிடந்த பின் அரசு செலவில் அடக்கமாயிற்று. யாரவன், பெயர் என்ன, ஊர்தான் யாதோ? காலம் சென்றது, அவனைப் பற்றிய கதையே மறைந்துபோயிற்று. காணாமற் போனவர்கள் கணக்கில் அவனும் ஒருவனோ? இருக்காது; ஏனென்றால் இறந்தவன் யார் என்றுதான் எவருக்கும் தெரியாதே!




## தாய் மடியே.....



தத்தித் தவழ்வதும் தாய் மடியில்
தலை சாய்ப்பதும் தாய் மடியில்
தாங்கி நிற்பதும் தாய்மடியே
தாலாட்டுவதும் தாய் மடியே

தாய் மடியே உனைத் தேடுகிறேன்
தனயன் இங்கு மனம் வாடுகிறேன்
சுற்றித் திரிந்தேன் உம் வலையில்
சுத்தமாய் மறந்தேன் என் உணர்வை

என் தாயே உனைத் தொலைத்து
எனை வளர்த்தாய் உள்ளந்தான்
மறந்திடுமா உன் அன்பை
எப்படி தீர்ப்பதம்மா உனதன்பு கடன்தனை

தாயே உன் மடிக்கு ஈடேதம்மா
உன் மடிபோல் உலகில் மகிழ்வேதம்மா
ஏழேழு ஜென்மங்கள் எடுத்தாலும்
உன் மகனாக என்றும் பிறந்திட வேண்டுமம்மா

எஸ்.சிவறஜன், முள்ளியவளை.

## தோழியே...

சின்னச் சின்ன
மழலை
போல தித்திக்கும்
உந்தன்
அன்புதனில்...
பட்டாம்
பூச்சிபோல- எம்
மனதில் தினம் தினம்
சிறகடிக்கும் என்
அன்புத்
தோழியே....!

ச.புவித்ரா, சாவகச்சேரி.



## சிந்தியுங்கள்... செயற்படுங்கள்....

★இலக்கியப் படைப்பாளிகளை அவர்களின் இறப்பின் பின்னரும் அவர்களின் படைப்புகள் வாழ வைக்கின்றன.
★அமைதியாக இருப்பவர்கள் எளிதில் வெற்றி காண்கிறார்கள்.
★சோம்பலினால் கெடுவது உடல் மட்டுமல்ல மனமும் தான்.
★நல்லது கெட்டது என்று எதுவும் இல்லை. உனது சிந்தனையே அவ்வாறு உன்னை ஆக்குகிறது.
★கூட்டத்தின் பின்னே செல்பவன் தனக்கு பின்னே கூட்டம் வரும் என எதிர்பார்ப்பது தவறு.
★நாம் மற்றவருக்குக் கொடுக்காததை மற்றவரிடம் இருந்து நாம் எதிர்பார்க்கக் கூடாது.
★ஒருமுறை பேச முன்னர் இருமுறை யோசித்து பேச துயில்லை.
★உலகத்தில் எதுவும் நிச்சயமல்ல. மரணம் ஒன்றே நிச்சயமானது.
★மனிதர்க்கு மன அமைதியைத் தருவதே மதத்தின் இலட்சியம்.
★நேர்மையான முறையில் வெற்றிக்கு முயற்சித்தால் நிச்சயம் அது நமக்குக் கிடைக்கும்.

சிந்து, சிவதாஸ்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒட்டுசுட்டானில் திறந்து வைக்கப்பட்டது தொழிற்சந்தை



முல்லைத்தீவு, ஜூலை 25
ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் தொழிற்சந்தையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சால் ஜேர்மனிய அபிவிருத்திக் கூட்டுறவு அமைப்பின் உதவியுடன் இளைஞர்களின் தொழில் வாய்ப்புக்களை இலகுபடுத்தும் பொருட்டு இந்தத் தொழிற் சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது.
கடந்த 20 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் நாடாவை வெட்டித் தொழிற் சந்தையை திறந்து வைத்தார். இங்கு மாவட்டம் சார்ந்த அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலிருந்தும் சிறு கைத்தொழில் பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டன.
இங்கு முக்கியமாக பிராந்திய மட்டத்திலான தொழில்களுக்கான பயிற்சிகள் தொடர்பான தகவல்கள் கிடைப்பதுடன் வேறு தொழில்களுடன் தொடர்புடைய வாய்ப்புக்களைக் கண்டறியும் சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றன.
சிறுதொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர் அல்லது அவற்றை ஆரம்பிக்கவுள்ளோர் இதற்கான வழிகாட்டல் ஆலோசனைகளையும் இங்கு பெற்றுக்கொள்ள முடியும். இந்தத் தொழிற்சந்தையின் ஒரு பகுதியாக புத்தாக்கத் தன்மை கொண்ட தெரிவு செய்யப்பட்ட உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதுடன் தமக்கான வாய்ப்புக்களை விரிவாக்க முயல்வதும் இன்னுமொரு சிறப்பு அம்சமாகும்.
ஆர்வமுள்ள இளைஞர்கள் இந்தத்தொழிற் சந்தையில் பங்குபற்றுவதுடன் தமக்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.
இந்த ஆரம்ப நிகழ்வில் அரச அதிபர், பிரதேச செயலர்கள், இராணுவ, பொலிஸ் உயர் அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-500)

# மன்னார் ஆயருடன் இரு அமைச்சர்கள் சந்திப்பு



மன்னார், ஜூலை 25
ஜனாதிபதியின் பணிப்புரையை அடுத்து மன்னாருக்கு வருகை தந்த இரண்டு அமைச்சர்கள் மன்னார் ஆயரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.
மன்னார் மறை மாவட்டத்தைச் சேர்ந்த கத்தோலிக்க குருக்களுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் கடந்த 18 ஆம் திகதி கொழும்பில் இடம் பெற்ற சந்திப்பைத் தொடர்ந்து மன்னாரின் தற்போதைய நிலையை நேரில் சென்று பார்வையிடுவதற்காக ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக இரண்டு அமைச்சர்கள் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை மன்னாருக்கு வருகை தந்தனர்.
அமைச்சர்களான திஸ்ஸ கரலியத்த மற்றும் சுசில் பிரேமஜயந்த ஆகியோரே மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசேப்பு ஆண்டகை மற்றும் குருக்கள் மாரைச் சந்தித்து உரையாடியுள்ளனர்.
மன்னார் மறைமாவட்ட ஆயரின் பணிப்புரைக்கு அமைவாக கடந்த 18 ஆம் திகதி 6 கத்தோலிக்க குருக்கள்மார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து மன்னாரில் இடம்பெறும் சட்டவிரோத குடியேற்றம், பாகுபாடான வேலைவாய்ப்பு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன் வைத்தமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# காணி ஆவணங்களை பெற காத்திருக்கும் மக்கள்

## மாந்தையில் இந்திய வீட்டுத்திட்டத்தையும் பெற முடியாத நிலை

முல்லைத்தீவு, ஜூலை 25
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தைப் பிரதேசத்தில் காணி ஆவணங்கள் இல்லாததால் இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைந்து கொள்ளப்படாத பல குடும்பங்கள் தமக்கு காணிகளுக்கான ஆவணங்களை வழங்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.
போர் காரணமாக இடம் பெயர்ந்த மாந்தை கிழக்கு மக்கள் தற்போது அவை சொந்த இடங்களில் மீள் குடியமர்ந்துள்ளனர். அம்பாள்புரத்தில் 1970 ஆம் ஆண்டுக்கு முன்னர் மத்திய தர வகுப்பினருக்கு காணிகள் வழங்கப்பட்டன.
ஆனால் இந்தக் காணிகளின் உரிமையாளர்கள் இங்கு இல்லாததால் காணியில்லாத வேறு குடும்பங்கள் அந்தக் காணிகளில் வீடுகள் அமைத்து, கிணறு வெட்டி தென்னை போன்ற பயன்தரும் மரங்களைப் பயிரிட்டு வாழ்ந்து வந்தன.
நாற்பது வருடங்களுக்கும் மேலாகச் சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்த இந்தக் குடும்பங்களின் வீடுகள் போர் காரணமாக அழிந்து விட்டன. இவர்கள் தற்பொழுது இதே காணிகளில் தற்காலிக குடிசைகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர்.
இந்தக் கிராமத்தில் வசிக்கும் அநேகமான குடும்பங்கள் இந்திய வீட்டுத் திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்ட போதிலும் இவர்களுக்கான காணி அனுமதிப் பத்திரம் இல்லாததால் அதனைப் பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது.
மேலும் இவர்கள் தற்போது வசிக்கின்ற காணிகள் ஏற்கனவே வேறு ஆள்களுக்கு வழங்கப்பட்டுள்ளதால் தம்மால் உடனடியாக இதற்கு ஒன்றுமே செய்ய முடியாதிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் செய்வதறியாத நிலையில் இந்தக் குடும்பங்கள் உள்ளதைக் காணமுடிகின்றது. (க-115)

# விதிமுறைகளை மீறும் சிற்றுண்டிச்சாலைகள்

கிளிநொச்சி, ஜூலை 25
கிளிநொச்சியில் இயங்கி வரும் சில சிற்றுண்டிச்சாலைகளில் சுகாதார விதிமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.
சில சிற்றுண்டிச்சாலைகளில் வழங்கப்படும் சிற்றுண்டி வகைகள் பழுதடைந்த நிலையில் காணப்படுவதாகவும், சில கடைகளில் முதல் நாள் எஞ்சியவற்றை மீண்டும் எண்ணெயில் பொரித்து விட்டு வழங்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. சில கடைகளில் காலாவதியான குளிர் பானங்கள் விற்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.
மேலும் சில சிற்றுண்டிச்சாலைகளில் உணவு தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் இடங்கள் சுகாதார விதிகள் பின்பற்றப்படாததால் கிருமித் தொற்று ஏற்படக் கூடிய வகையில் அமைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.
மேலும் மலசலகூடங்கள் அசுத்தமான நிலையில் உணவு தயாரிக்கும் பகுதிக்கு மிகவும் அருகில் இருப்பதால் இலையான்கள் பெருகிக் காணப்படுவதையும் காணமுடிகின்றது.
சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் இயங்கி வந்த சில சிற்றுண்டிச்சாலைகள் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் திடீர்ப் பரிசோதனைகள் மூலமாகக் கண்டுபிடிக்கப்பட்டு பூட்டி வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும்.
கிளிநொச்சி மாவட்ட சுகாதாரப் பகுதியினர் சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கி வருகின்ற போதிலும் ஒரு சிலர் இவற்றைப் பின்பற்றுவதாகத் தெரியவில்லையென நுகர்வோர் கவலை தெரிவிக்கின்றனர். (க-426)

# நகர சபை செயலருக்கு கூட்டத்தில் பாராட்டு



மன்னார், ஜூலை 25
மன்னார் நகரசபையின் தற்போதைய செயலருக்கு சபைக் கூட்டத்தில் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.
மன்னார் நகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம் பெற்றது.
இதன் போது மன்னார் நகர சபையின் புதிய செயலாளராக பதவியேற்றுள்ள எஸ்.எல்.றொனால்ட் பிரிட்டோவின் சேவை திருப்திகரமாக உள்ளதாகவும், அவரைத் தாங்கள் பாராட்டுவதாகவும் மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.
இதனைத் தொடர்ந்து மன்னார் நகர சபை உறுப்பினர்களினால் பல்வேறு விடயங்கள் சபையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.
இந்தக் கூட்டத்தில் மன்னார் நகர சபையின் செயலாளர் எஸ்.எல்.றொனால்ட் பிரிட்டோ, நகர சபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நகரசபை உறுப்பினர்களான இரத்தினசிங்கம் குமரேஸ், எஸ்.மெரினஸ் பெரேரா, எஸ்.பிரிந்தாவனநாதன், என்.நகுசீன், எஸ்.செல்வக்குமரன் (டிலான்) ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# கரைதுறைப்பற்றில் நடமாடும் சேவை

முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் நடமாடும் சேவை ஒன்று இடம்பெற்றுள்ளது.
கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள மக்களுக்கான அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், திருமணப்பதிவுச் சான்றிதழ் போன்றவற்றை இலகுவாக வழங்கும் நோக்குடன் கடந்த 20 ஆம் திகதி உதவிச் செயலர் குருபரன் தலைமையில் இந்த நடமாடும் சேவை இடம் பெற்றுள்ளது. (க-435)

# தேசிய வீரர்கள் தினம் மன்னாரில்

தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு மன்னார் நகர சபை மண்டபத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம் தெரிவித்தார்.
1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25,27 ஆகிய தினங்களில் வெலிக்கடை வெஞ்சிறையில் படுகொலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) ஸ்தாபகத் தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி உட்பட போராளிகள், பொது மக்கள் 53 பேரின் 30 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு குறித்த அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.
இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்வார்கள். (க-12)

## ரெலோவின் பொதுக் குழு மன்னாரில்

தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) வின் பொதுக்குழு கூட்டம் மன்னார் வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம் பெறவுள்ளதாக அதன் செயலாளர் நாயகம் ஹென்றி மகேந்திரன் தெரிவித்தார்.
இக்கூட்டத்தில் வடமாகாண சபைத் தேர்தல் தொடர்பாகவும், தற்போதைய அரசியல் நிலவரம் தொடர்பாகவும், கட்சி நடவடிக்கை தொடர்பாகவும் விரிவாக ஆராயப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (க-12)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும். வெளிவட்டாரத்தில் மதிக் கப்படுவீர்கள். உத்தியோகத்தில் பணி களை விரைந்து முடிப்பீர்கள்.

**இடபம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலை களை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். பயணங்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்:** சிக்கனமாக இருக்க வேண்டுமென்று நினைத்தாலும் அத் தியாவசியச் செலவுகள் அதிகரிக்கும். முக்கிய கோப்புகளை கையாளும்போது அலட்சியம் வேண்டாம். உத்தியோகத்தில் சில சூட்சுமங்களைக் கற்றுக் கொள்வீர்கள்.

**கடகம்:** உத்தியோகத்தில் மேலதி காரி ஆதரிப்பார். எதையும் போராடி வெல்வீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும். மாணவர்களுக்கு நினைவுத் திறன் அதிகரிக்கும். சிக்கனத்தைக் கடைப்பிடிப்பீர்கள்.

**சிங்கம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயல்படுவீர்கள். மனதுக்குப்பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.

**கன்னி:** நட்பு வட்டாரம் விரி வடையும். பணவரவு திருப்தி தரும். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தி யோகத்தில் மகிழ்ச்சியுண்டு.

**நாளை**

ஆடி-10 வெள்ளிக்கிழமை 26.07.2013
திதி: சதுர்த்தி பி.ப. 05.22 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி பி.இ.04.03 வரை
சுபநேரம்: 06.02 - 07.32 வரை
இராகுகாலம்: 10.32 - 12.02 வரை

**துலாம்:** சில தினங்களாக தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.

**விருச்சிகம்:** வீண்செலவுகளைத் தவிர்ப் பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவைப் பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்களைச் சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதர வகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**மகரம்:** எந்தக் காரியத்தைத் தொட்டாலும் இரண்டு, மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்வார்கள். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** அநாவசியச் செலவுகளைக் குறைக்கப்பாருங்கள். திடீர்ப் பயணங்கள் இருக்கும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகரிக்கும். எதிலும் முன்யோசனையுடன் செயற்படுங்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | | 2 | | 8 | | | |
| | 5 | | | 6 | | 4 | | |
| | | 6 | 7 | 5 | | | 8 | |
| | 9 | | | 2 | | | 6 | 4 |
| | 8 | 5 | 4 | | 7 | 2 | 3 | |
| 1 | 4 | | | 8 | | | 5 | |
| | 6 | | | 3 | 5 | 9 | | |
| | | 9 | | 4 | | | 7 | |
| | | | 9 | | 2 | | 1 | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 7 | 9 | 6 | 4 | 3 | 5 | 1 |
| 1 | 6 | 5 | 8 | 7 | 3 | 2 | 9 | 4 |
| 3 | 9 | 4 | 1 | 2 | 5 | 6 | 8 | 7 |
| 5 | 3 | 1 | 4 | 9 | 2 | 7 | 6 | 8 |
| 9 | 8 | 2 | 6 | 5 | 7 | 4 | 1 | 3 |
| 4 | 7 | 6 | 3 | 1 | 8 | 5 | 2 | 9 |
| 7 | 5 | 9 | 2 | 4 | 1 | 8 | 3 | 6 |
| 2 | 1 | 3 | 7 | 8 | 6 | 9 | 4 | 5 |
| 6 | 4 | 8 | 5 | 3 | 9 | 1 | 7 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண் களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலி லும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள் ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவ லாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

## வாலாம்பிகை தியாகராஜா

**வையத்துள் அறிமுகம்**
**01.02.1938**

**தெய்வத்துள் சங்கமம்**
**25.06.2013**

எம் தாய் என்னும் தெய்வத்தை
நோய்கொண்டு போனதுவோ!
அழைப்பது போல நினைவுகள்
அருகில் இருப்பது போல கனவுகள்
நாம் பார்க்கும் திசைகள் எல்லாம்
உமது விம்பங்கள்!

தினம் பரிதவித்து நிற்கின்ற
எமது நிலை பாராயோ அம்மா!
விதிவசத்தால் எமை இங்கு விட்டு
விண்ணுக்குச் சென்றாய் அம்மா!
உம் இழப்பால் எம் வீட்டின்
ஒளி இழந்து போனதம்மா!

கடந்த 25.06.2013 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் தந்தி, தபால் மூலமாகவும் ஆறுதல் மொழிகள் கூறிய அனைத்து உள்ளங்களுக்கும் யாழ் போதனா வைத்தியசாலை விடுதி இல.03 இல் கடமையாற்றிய வைத்தி யர்கள்,தாதிய உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள் அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகள்.

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு திருமதி வாலாம்பிகை தியாகராஜா அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வீட்டுக்கிருத்திய நிகழ்வும் இன்று (25.07.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

283/12, புகையிரத வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(31100) (3.5.6)

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிர்ஷ்ட இலாப சீட்டு திகதி மாற்றம் தொடர்பானது

யாழ். மாவட்ட பெண்கள் சமாச வளர்ச்சி நிதிக்காக ஆரம்பிக்கப்பட்ட அதிஷ்ட இலாப சீட்டு கடந்த 19.07.2013 அன்று அதிஷ்டம் பார்ப்பதாக தீர்மானிக்கப் பட்டது. எனினும் தவிர்க்க முடியாத காரணத்தினால் திகதி மாற்றப்பட்டுள்ளது என்பதையும் அதிஷ்டம் பார்க்கும் திகதி பின்னர் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும் என்பதையும் சீட்டுக்களைப் பெற்றுக் கொண்ட அனைவருக்கும் தெரிவிக்கின்றோம்.

திருமதி ஈஸ்வரி ஸ்ரீதரன்
தலைவர்,
யாழ்.மாவட்ட பெண்கள் சமாசம்.

(29561)(5.6)

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ். மாநகரசபை, திருநெல்வேலி பிரதேசங்களில் சகல வசதிகளையும் கொண்ட வீடு தேவை.

தொடர்புகளுக்கு:
077 779 2713

(29866)(10,14)

## உயிரியல் செயலமர்வு

2013 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கான இலவச உயிரியல் செயலமர்வு சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் 26.07.2013 வெள்ளிக்கிழமை 9a.m.-2p.m. வரை உயிரியில் ஆசிரியர், அதிபர் R.ஈஸ்வரதாஸனினால் நடத்தப்படும். இதில் கொழும்பு விசாகா, கொழும்பு றோயல், மாதிரி வினாத்தாள், எதிர்பார்க்கை வினாக்கள் என்பவை விளக்கப்படும்.

(29865)(5.6) 021 224 0230,077 729 1877

## JAFFNA SOCIAL ACTION CENTER

JSAC

### Vacancy announcement for Project Officers, Programme Assistants & Community Mobilizer

Jaffna Social Action Center is a Sri Lankan Non-Governmental organization providing services throughout the Northern Province. JSAC will shortly be starting a rebuilding and revitalizing project for resettlers. Therefore JSAC is asking for CVs from very dynamic and committed persons for the above posts.

**Requirements**

- Completed higher education level (Diploma/Bachelors), preferably in fields related to agriculture / construction/community development.
- At least 1 year project-based experience in NGOs/organizations
- Strong inter-personal and analytical skills, including good capability in MS Office
- Excellent in written and spoken English.
- Ability and willingness to travel to all parts of the country is essential.
- The ability and a clean/current license to ride a motorcycle would be a distinct advantage.

**Applicants:**

Interested candidates are invited to submit their CV with a covering letter and two non-related referees to reach us no later than the 31st of July 2013 to the following address: Co-ordinator, Jaffna Social Action Center, 18/1, Kailasapillaiyarkovil Road, Nallur, Jaffna.

Only the short listed candidates will be contacted. The recruitment process will consist of interviews, a written assessment. After which a final shortlist will be given 5 days of further assessment through workshops and practical exercises.

Individuals of all ethnic backgrounds are encouraged to apply. As an equal opportunity employer, JSAC also strongly encourages the application of women.

(C/11032)(10.6)

## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி



தோற்றம்
06 – 08 – 1949

மறைவு
26 – 06 – 2013

### அமரர் சதாசிவம் பரமேஸ்வரன்

(இளைப்பாறிய பொறுப்பதிகாரி, வட.தெ.மே. பிரதேச சபை -கரவெட்டி)

அப்பா என்றழைத்த தெய்வமே!
அன்புதனைப் பொழிந்து அரவணைத்த அப்பா!
ஆறாத துயரில் தவிக்கின்றோம்
ஆறிடுமோ எங்கள் துயரம் அப்பா!
நாங்கள் கைகூப்பி நின்றவனும்
எம்மை கைவிட்டானப்பா!
ஊர் போற்ற உத்தமனாய் வாழ்ந்தீர்
எம்மையும் அதுபோல் வளர்த்தீர்
பாசம்தனில் பிணைந்த அப்பா!
பாடைதனில் போகும் நிலை ஏது அப்பா!
மாதம் ஒன்று ஆனாலும் உங்களை
எம் இதயம் அதில் ஏற்றி பூஜிப்போம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

கடந்த 26.06.2013 கனடா, ரொரன்ரோவில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் சதாசிவம் பரமேஸ்வரன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(25.07.2013) கனடா, ரொரன்ரோவில் நடைபெறும். நாளை (26.07.2013) வெள்ளிக்கிழமை ந.ப.12.00 மணியளவில் இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும். மதியபோசன நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

'தெய்வபதி'
இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி.
தொ.பே.021 226 3429

(37659)(3.5.6) குடும்பத்தினர்.

## நடராஜா திருஞானபவன், நடராஜா சதானந்தபவன்

சகோதரர்கள் படைப்பில் உருவான

### 'பூநகரியின் புகழ் மாலை'

### இறுவட்டு வெளியீட்டு விழா

**காலம்:**
01.08.2013 (வியாழக்கிழமை)

**நேரம்:**
காலை 9.00மணி

**இடம்:**
கிளி/பூநகரி மகாவித்தியாலயம்

**வெளியீடு:**
கலை கலாசாரப் பேரவை
கிளி/பூநகரி மகாவித்தியாலயம்.

**இசையமைப்பு(பாடல்கள்):**
பிரபல தென்னிந்திய இசையமைப்பாளர், பாடகர்கள்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

கலை கலாசாரப் பேரவை,
கிளி/பூநகரி மகாவித்தியாலயம்

தொடர்புகளுக்கு: S.Rபாலச்சந்திரன், அதிபர்
கிளி/பூநகரி மகா வித்தியாலயம்.

(29929)(5.6) 077 339 7209

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மண்ணில் 15.09.1935 — விண்ணில் 25.06.2013

திருமதி

### செல்லத்துரை இராசம்மா

இனியதொரு துணையாக எமக்கிருந்து பலவழிகளில் ஆறுதலளித்த அன்புயர் தாயாரின் பிரிவு தாங்கிக்கொள்ள முடியாத பெருந்துயரினை எமக்குத் தந்துள்ளது.

25.06.2013 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள் மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் எமது மன நிறைவான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்று (25.07.2013) வியாழக்கிழமை மு.ப. 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

71/1, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(29863) (10.6) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சிற்றம்பலம் தம்பிராஜா



(முன்னாள் ஆசிரியர்-யாழ் மத்திய கல்லூரி, இளைப்பாறிய உபஅதிபர்- காரைநகர் இந்துக்கல்லூரி)

காரைநகர், களபூமி, பொன்னாவளையைப் பிறப்பிடமாகவும், காரைநகர், களபூமி, விளானையை வதிவிடமாகவும் தற்போது கனடா-ரொரன்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் தம்பிராஜா அவர் கள் 22-07-2013 திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சிற்றம்பலம்-அபிராமிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற Dr. திருநாவுக்கரசு-செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், மனோன்மணி (இளைப்பாறிய ஆசிரியர் - காரைநகர்) அவர்களின் ஆருயிர்க் கணவரும், மகேந்திரன், Dr.ரவிச்சந்திரன், வாசுகி, ஜெயச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திராதேவி, பிரபா, கனகசுந்தரம், சிவரூபி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற பாலசிங்கம் (இளைப்பாறிய முன்னாள் நிர்வாக அலுவலர் - நீர்ப்பாசனத் திணைக்களம்), புவனேஸ்வரி, சங்கரப்பிள்ளை, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை (VRT-கிளிநொச்சி), பத்மாசனி, சிவபாக்கியம், காலஞ்சென்ற விஸ்வலிங்கம், தவமணி(ஆஸ்திரேலியா), சிவாமகேசன் (இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர்-UK) ஆகியோரின் அன்பு மைத் துனரும், கணபதிப்பிள்ளை (இளைப்பாறிய பொறியியலாளர் - ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற கமலாசினி (UK) ஆகியோரின் சகலனும், பிருந்தா, சரண்யா, சங்கவி, வித்யா, சங்கர், சுவேதன் ஆகியோரின் தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 28.07.2013 ஞாயிற்றுக்கிழமை 4164-Sheppard Ave.East இல் அமைந்துள்ள Ogden Funeral Home இல் இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் தகனக்கிரியைக்காக 256, Kingston Road இல் அமைந் துள்ள St. John's Norway Cemetery இக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பொன்னாவளை,
களபூமி,
காரைநகர்

குடும்பத்தினர் (கனடா)
தகவல்:
சி.சங்கரப்பிள்ளை (அன்புச் சகோதரன்)
021 3200 201


(29928)(10,6,3)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வாழ்விலும், சாவிலும் இணைபிரியா நண்பர்கள்"

## விண்ணவர்க்காய் அர்ப்பணிக்கப்பட்டு

# மூன்றாண்டு நிறைவில்......





## அன்ரன் யோகராஜா
## கலிஸ்ரஸ் கஜேந்திரன்

(பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்)

மண்ணவர்க்கு:- 1986.09.15

விண்ணவர்க்கு:- 2010.07.25

ஆடி என்றாலே கூடிவிடும்
எங்களுக்கு உம் நினைவு
நீ வேறு நாம் வேறு என்று பாராது
தேடி வந்து பழகும் நீ ஆடியிலே
உயிர் பிரிவாய் என்று ஒரு கணமும்
நினைத்ததில்லை

எழுத்தறிவில்லாத
எத்தனையோ பேர்களில் காலனும்
ஒருவன் போல் - ஆதலால் தான்
பல எதிர்கால அழகிய
கட்டடங்களையும், கலையின்
கவித்துவம் கொண்ட
சந்துருவையும் உன் உயிரோடு
சிதைத்து விட்டான் உன் உயிர்
இல்லை என்றதும் உயிர்த்திருந்த
எம் நரம்புகள் உறக்கத்திற்குச்
சென்றுவிட்டன மூன்றாண்டு
கடந்தாலும் உன் முகம் தேடும்
நினைவலைகளுடன்.....

விழி நீரால் அர்ச்சிக்கும்

பெற்றோர், சகோதரிகள், உறவினர்கள், நண்பர்கள்.
115,கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.



## அமரர்
## சாந்தகுமார் சந்துரு

(சமூகவியல் சிறப்புக்கலை மாணவன்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

அன்னை மடியில் :- 25.07.1986

இறைவன் அடியில் :- 25.07.2010

மூன்று ஆண்டுகள் ஆனதையா சந்துரு
முப்பது வருடங்கள் ஆனாலும் உன் நினைவு
மறக்கவே முடியாதடா
உன் குரலோசை கேட்ட வண்ணம் உள்ளது
சல சலவென ஓடும் தண்ணீரைப் போல்
கல கலவென இருந்தவனே
சந்துரு உன் நண்பன் கலீஸ்
இருவரும் எங்களை விட்டுச் சென்றீர்களே
தாங்கமுடியவில்லை.
உங்கள் இருவரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனை வேண்டுகின்றோம்.


உங்கள் பிரிவால் துயருறும்:

குடும்பத்தினர், நண்பர்கள், உறவினர்கள்.
186/20A, குருநாதர் லேன், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.



(29904)(2.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பில் செவ்வாய்க்கிழமை காலை வீசிய கடும் காற்றினால் பல வீடுகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்துள்ளன. அத்தோடு மின்சாரத் தடையும் ஏற்பட்டது. (ச)

# முதலமைச்சர் வேட்பாளர்கள் திங்கட்கிழமை அறிவிப்பு

## ஐக்கிய தேசியக் கட்சி தகவல்

கொழும்பு,ஜூலை 25
தேர்தல் நடைபெறவுள்ள வடக்கு, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களுக்கான முதலமைச்சர் வேட்பாளர்களையும், ஏனைய வேட்பாளர் பட்டியலையும் ஐக்கிய தேசியக் கட்சி எதிர்வரும் திங்கட்கிழமை வெளியிடும் என்று கட்சியின் பொதுச் செயலர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

ராஜகிரியவில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் வேட்பாளர் மற்றும் ஏனைய வேட்பாளர் பட்டியலையும் நாம் திங்கட்கிழமை வெளியிடவுள்ளோம்.

மூன்று மாகாணங்களிலும் தனித்து யானைச் சின்னத்தில் போட்டியிடவும் வடமேல் மற்றும் மத்திய மாகாணங்களில் உள்ள 40 ஆசனங்களைப் பாதுகாக்கவும் விசேட பொறி முறைகளை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம்.

ஐக்கிய தேசிய கட்சி ஆதரவாளர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கையாகும்.

இந்தத் தேர்தல் ஆட்சியை மாற்றுவதற்கான ஒன்றல்ல. ஆட்சி மாற்றத்தின் ஆரம்பமாகவே கருத முடியும். வாக்களிப்பு எவ்வளவு முக்கியமோ அதே போன்றே வாய்மூலப் பிரசாரமும் முக்கியமாகும்.

ஆளும் கட்சியில் போட்டியிட்ட பலர் இந்த முறை ஐக் கிய தேசியக் கட்சியில் இணைந்துள்ளனர். வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் பிரசார நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன- என்றார்.(ச-10)

# கொழும்பு மாநகரில் சுகாதாரப் பரிசோதகர் ஒருவரே



கொழும்பு, ஜூலை 25
கொழும்பு மாநகர சபைக்கென ஒரேயொரு உணவுப் பரிசோதகர் மாத்திரமே உள்ளார் என சுகாதாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது குறித்து திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கடமையில் இருந்த உணவுப் பரிசோதகர்கள் மூவர் இந்த வருடத்தின் முற்பகுதியில் ஓய்வு பெற்றுச் சென்றுவிட்டனர். தற்போது ஒருவர் மட்டுமே கடமையில் உள்ளார்.

கொழும்பு மாநகரில் ஹோட்டல்கள், உணவுச் சாலைகள், வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட உணவுப்பொருள் சேமிப்புக் களஞ்சியங்கள் என்றவாறு இரண்டாயிரம் வரையிலானவற்றில் பரிசோதனைகள் மேற்கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து கொழும்பு மாநகர சபையின் பிரதம சுகாதார வைத்திய அதிகாரி பிரதீப் காரியவசத்திடம் கேட்டபோது கடந்த 10 ஆண்டுகளாக கொழும்பு மாநகர சபைக்கு உணவுப்பரிசோதகர் என எவரும் சேர்த்துக் கொள்ளப்படவில்லை. தற்போது உணவுப் பரிசோதகர் ஒருவர் மாத்திரமே சேவையில் உள்ளார்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பதவியின் - 2 (ஏ) சரத்தின் படி சுகாதாரப் பரிசோதகர் ஒருவர் 10 வருட சேவையைப் பூர்த்தி செய்திருப்பது உணவுப் பரிசோதகர் ஒருவராகப் பயிற்சி பெறுவதற்கான அடிப்படைத் தகுதியாகும்.

இவ்வாறு தகுதி கொண்டிருப்போர் போட்டிப் பரீட்சையொன்றில் மூலமாகத் தெரிவு செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-22)

# பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் இரும்புக் கதவுகள்

கொழும்பு,ஜூலை 25
பாதுகாப்பற்ற ரயில்வே கடவைகளில் விபத்துக்கள் அதிகரித்து வருவதால் தற்காலிக தீர்வாக சகல பாது காப்பற்ற ரயில்வே கடவைகளிலும் இரும்புக் கதவுளை அமைக்கும் திட்டமொன்றை ரயில்வே திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

ஒவ்வொரு ரயில் கடவையிலும் சிவில் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள் மூவர் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர். பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் நிரந்தர மணி ஒலிக்கும் கதவுகள் அமைக்க 2 வருடங்கள் எடுக்கும் என்பதால் ஜனாதிபதியின் ஆலோசனைப்படி இரும்பு கதவுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

பாதுகாப்பற்ற ரயில்வே கடவைகள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட விசேட திட்டத்தின் கீழ் பொலிஸாரின் உதவியுடன் தற்காலிக இரும்புக் கதவுகள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸாரின் கண்காணிப்புடன் பாதுகாப்பற்ற ரயில் கடவைகளில் தலா மூவர் வீதம் சேவையில் ஈடுபடுத்தப்படுவர்.

24 மணி நேரமும் இவர்கள் மாறிமாறி சேவையில் ஈடுபடுவர் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05 . 05 . 1937
உதிர்வு 04 . 08 . 2012

திருமதி
செல்வமாணிக்கம் சிவசுப்பிரமணியம்

இன்று (25.07.2013) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திக் கிரியைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வல்லிபுரப்பரியாரியார் ஒழுங்கை,
பருத்தித்துறை.
077 652 9017


சிவா (மகன்),
தயாளன் (மருமகன்).

(C/11026)(10,6,3)

## ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04.05.1929

மறைவு
01.08.2007



திதி: 25.07.2013

அமரர் கலாநிதி
அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை B.A., FCA.
(பட்டயக் கணக்காளர்)
(முன்னாள் பேரவை உறுப்பினர், யாழ். பல்கலைக்கழகம், முன்னாள் போஷகர், ஞானசம்பந்தர் கலைமன்றம், புலோலி கிழக்கு, பருத்தித்துறை)

எமது மன்றத்தின் போஷகராக இருந்து எம்மை வழிநடத்திய அமரர் அருணாசலம் சோமசுந்தரம்பிள்ளை அவர்களின் தன்னலம் கருதாச் சேவையினை நன்றியுடன் நினைவு கூருகிறோம்.

திருமதி நளாயினி மூர்த்தி
(மகள்-கனடா)

நிர்வாகம்,
ஞானசம்பந்தர் கலைமன்றம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை.

(C/11025)(10,6,3)

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
ஆறுமுகம் சங்கரப்பிள்ளை
(ஓய்வுபெற்ற மின்சார சபை உத்தியோகத்தர்)



திதி: 25.07.2013

அன்னை மடியில்
05.06.1933

ஆண்டவன் அடியில்
10.07.2009

ஆண்டுகள் நான்கு சென்றாலும் - அப்பா!
ஆறாது எமது துயரம்
நாள்கள் பல நகர்ந்தாலும் - தினமும்
நீங்காது உங்கள் நினைவுகள்

ஆயிரம் உறவுகள் எமைச் சூழ்ந்திருந்தாலும் - அப்பா!
உங்கள் அன்புக்கு ஈடாகுமா?

கோடான கோடி செல்வம்
கொட்டிக் கொடுத்தாலும் - அப்பா!
உங்கள் ஆறுதல் வார்த்தைகளுக்கு சமமாகுமா?

பண்பாய் பாசமாய் பார்போற்ற
பலவழிகள் காட்டி நின்ற - அப்பாவே!
வழி தெரியாது விழி இன்றித் தவிப்பவர் போல
வாடி நாம் நிற்கின்றோம்.

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்தனை செய்துகொண்டு
உங்கள் ஆசியை வேண்டி நிற்கும்.

பிள்ளையார் கோயிலடி,
அச்சுவேலி தெற்கு.

குடும்பத்தினர்.

(சி/11024) (45.6.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/07/2013

# அமோக விளைச்சலை கொடுத்த மிளகாய் செய்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25
யாழ். குடாநாட்டில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட மிளகாய்ச் செய்கை இந்த முறை விவசாயிகளுக்கு அமோக விளைச்சலைப் பெற்றுக்கொடுத்துள்ளது. தீவுப் பகுதி மற்றும் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகளில் அதிகமாக விவசாயிகள் மிளகாய்ச் செய்கையில் ஈடுபட்டுள்ளனர்.



தற்போதைய காலை நிலைக்கு ஏற்றவாறு மிளகாய்ச் செடிகள் எந்தவித நோய்த் தாக்கமும் இன்றி வளர்ச்சி கண்டன. அத்துடன் இந்த பயிர்ச் செய்கை மூலம் விவசாயிகள் அதிக பயனைப் பெற்றுள்ளனர் என்று விவசாய திணைக்களத் தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
அறுவடை செய்யப்படும் மிளகாய்கள் பெருமளவில் சந்தைக்கு வந்து சேர்வதால் அவற்றின் விலை திடீரென சரிவடைந்துள்ளது. (வ-17)



ஆஸ்திரேலிய அரசின் சமுதாய புனரமைப்புத் திட்டத்தின் கீழ் திட்டக் கிராமங்களான பொன்னகர், ஊற்றுப்புலம் மற்றும் நாவல்நகர் கிராமங்களைச் சேர்ந்த சுய உதவிக் குழுக்கள் தங்களுடைய அலுவலகப் பகிர்வை எள்ளுக்காடு கிராமத்துக்கு தரிசிப்பை மேற்கொண்டு கிராம மக்களுடன் கலந்துரையாடினர். (வ-14)

## கசிப்பு வைத்திருந்த பெண்ணுக்கு அபராதம்

தென்மராட்சி, ஜூலை 25
கசிப்பு வைத்திருந்த கொடிகாமம் பகுதி பெண்ணுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் நேற்றுமுன்தினம் 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சம்பந்தப்பட்ட பெண் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
இதேவேளை, மது போதையில் ஆவணங்கள் எதுவுமின்றி வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.
கொடிகாமம் பொலிஸாரால் சாரதிய அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம், வாகன வரி பற்றுச்சீட்டு ஆகியவை இல்லாமல் மதுபோதையில் வாகனம் செலுத்தியதாக குற்றஞ்சாட்டி சாவகச்சேரி நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நான்கு குற்றங்களையும் குற்றவாளி ஒப்புக் கொண்டதையடுத்து 16 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (வ-9)

## விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், ஜூலை 25
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தால் எந்திரவியல் தொழில் நுட்பக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப்படிவங்களை பிறவுண் வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள யாழ். பிராந்திய நிலையத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம் என பிராந்திய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (வ-400)

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வடமராட்சி, ஜூலை 25
பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வீதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.
வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்கள், பார்வையாளர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஆஸ் பத்திரி வீதி ஊடாக வைத்தியசாலைக்கு நடந்து செல்வோர் மீதும், சைக்கிளில் பயணிப்போர் மீதும் இவை திடீரெனப் பாய்ந்து கடிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. எனவே கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்த சம்பந்தப்பட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரியுள்ளனர். (ஐ-8)

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25
திருக்குடும்ப கன்னியர் மடப் பாடசாலையின் பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை மறுதினம் சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (வ-14)


## மரண அறிவித்தல்

### இன்னாசிமுத்து பொன்னையா



நயினாதீவை வசிப்பிடமாகக் கொண்ட இன்னாசிமுத்து பொன்னையா 23.07.2013 அன்று காலமானார்.
அன்னார் செல்லம்மாவின் அன்புக் கணவரும் திரேசம்மா மற்றும் காலஞ்சென்றவர்களான மனுவேல்பிள்ளை, சவரிமுத்து, பேதுருப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, சின்னம்மா, கண்மணி, நல்லையா, நாகேசு (SPN & CO - கொழும்பு), சிவக்கொழுந்து, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், சதாரூபன் (ஆசிரியர் - கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி), விஜயலட்சுமி, நகுலேஸ்வரன் (ஜேர்மனி), சந்திரமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கீதா, மங்களேஸ்வரன், மோகனாதேவி, அசோகன் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2013) வியாழக்கிழமை ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நயினாதீவு சல்லி பரவை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு
8ஆம் வட்டாரம்,
021 320 6665, 077 761 7571

தகவல்:
குடும்பத்தினர்
(29914) (45.6.3)



## கண்ணீர் அஞ்சலி

மாதகல் மண்ணின் புதல்வன்
### விஸ்வலிங்கம் பொன்னுத்துரை



எமது மண்ணில் பிறந்து வளர்ந்து பிரான்சில் வாழ்ந்து வந்த வேளை எமது ஊரின் பல இன்னல்களுக்கு முகம் கொடுத்து துன்புற்றிருந்த எமது மக்களுக்கு பல உதவிகள் செய்து ஆறுதல் அளித்தவரே. குறிப்பாக சுனாமி அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் போரில் துன்புற்று ஊர் வந்த மக்களுக்கும் பேருதவி புரிந்திட வழியமைத்த உத்தமரை இன்று நாம் இழந்து தவிக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். இவரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
மாதகல் கிராமிய கடற்றொழில் அமைப்பு.
(c/11027) (6.3.11)



## மரண அறிவித்தல்

### திருமதி ஆனந்தமலர் பாலகிருஷ்ணன்



கரவெட்டி கிழக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஆனந்தமலர் பாலகிருஷ்ணன் அவர்கள்நேற்று (24.07.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-வள்ளிப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற வல்லிபுரம்-தெய்வானை தம்பதியரின் மருமகளும், பாலகிருஷ்ணனின் (மாயவன்) மனைவியும், யுவநீதன், பிரபாலினி, தாஸ்மோகன், நிஷாந்தன் ஆகியோரின் தாயாரும் லக்ஷ்மி, மணிராஜ், பாலகௌரி, தர்சினி ஆகியோரின் மாமியாரும், கிருகா, பிருட்டிகா, கிஷானி, லிமிசன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் இன்று (25.07.2013) வியாழக்கிழமை மு.ப 10 மணியளவில் சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நெடுங்கேணி,
கரவெட்டி.
T.P- 021 205 6481 (29920)(3.6.11)

தகவல்:
பாலகிருஷ்ணன்
(மாயவன்-கணவர்)



## மரண அறிவித்தல்

### செல்லையா சண்முகம்



மாத்தளையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும், தற்போது கொழும்பில் வசித்து வந்தவருமான செல்லையா சண்முகம் (22.07.2013) திங்கட்கிழமை காலமானார்.
அன்னார் றெஜினாவின் அன்புக் கணவரும், ஸ்ரீஸ்ரெனா (லண்டன்), ஸ்ரெனிஸ்ரா, றெக்னோ (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஜீவன் (லண்டன்), அவர்களின் அன்பு மாமனும், மானு, ரீனு (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2013) வியாழக்கிழமை காலை 8 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4 மணிக்கு பூதவுடல் கல்கிசை பொதுமயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
(29918) (45.6.3)
42, 4/4, [illegible]
வெள்ளவத்தை கொழும்பு-06
011 236 5556, 077 919 4086



## மரண அறிவித்தல்

### திருமதி விஜெயலக்ஷ்மி சோதிலிங்கம்



அவர்கள் 22.07.2013 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.
அன்னார் ஆறுமுகம் சோதிலிங்கம் (Ex - MMC- Jaffna & Managing Director, Old Park Restaurant (Pvt) Ltd . Jaffna) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற முருகேசு சின்னத்தம்பி (Rtd. Village Headman) - நல்லம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குணசிங்கம் (Vice Principal St.John`s College Dematagoda), துரைசிங்கம் (Air Force), ரட்ணசிங்கம், ராஜலக்ஷ்மி மற்றும் புவனலக்ஷ்மி (UK) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற வினாசித்தம்பி ஆறுமுகம் (Postal Dept.), யோகாம்பிகை (UK) ஆகியோரின் அன்பு மருமகளும், நிர்மலா பரணிதரன் (UK), உமாகாந்தன் (UK), ரஜனிகாந்தன் (UK), விஜேகாந்தன் (Colombo), காயத்ரி சன்ஜீவன் (Australia) ஆகியோரின் அன்புத் தாயும், பரணிதரன், இந்திரகலா, சன்ஜீவன் ஆகியோரின அன்பு மாமியும், ரங்கநாதன் (UK), கிருபாகரன் (Franch), கேசவநாதன் (UK), யோகநாதன் (Rcigu - UK), கமலநாதன் (Norway), உமாரஜனி (UK), ஸ்ரீரஜனி (UK) ஆகியோரின அன்பு மச்சாளும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2013) வியாழக்கிழமை A.F Raymond`s மலர்ச்சாலையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து மாலை 4 மணிவரை நடைபெற்று, 4.30 மணியளவில் பொரளை இந்து பொதுமயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

3/1, Government Flats,
Colombo -04. (சி/1027) (45.6.3)

தகவல்:
A.சோதிலிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடு உற்சவத்துக்கு விசேட ரயில் சேவை

## 25 வருடங்களின் பின் நேரடிப் பயணம்

கொழும்பு,ஜூலை 25
அடுத்த மாதம் நடைபெற உள்ள மடுமாதா உற்சவத்தையொட்டி விசேட ரயில் மற்றும் பஸ் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று போக்குவரத்து அமைச்சர் குமார வெல்கம தெரிவித்தார்.

மடுமாதா உற்சவத்தையொட்டி மேற்கொள்ளப்படவுள்ள விசேட போக்குவரத்து சேவைகள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்று புதன்கிழமை போக்குவரத்து அமைச்சில் நடைபெற்றது.

இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை 8 விசேட ரயில் சேவைகள் நடத்தப்பட உள்ளன. அத்தோடு பிரதான நகரங்களில் இருந்து மடு வரை இலங்கை போக்குவரத்துச் சபை பஸ்களும் ஈடுபடுத்தப்படும்.

25 வருடங்களின் பின்னர் இம்முறை முதல் தடவையாக மடுமாதா உற்சவத்துக்கு ரயிலில் சென்று வர பக்தர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவுள்ளது.

மடு உற்சவத்தையொட்டி அளுத்கமையில் இருந்து இரு விசேட ரயில்கள், புறக்கோட்டையில் இருந்து இரு ரயில்கள், நீர் கொழும்பில் இருந்து 3 ரயில்கள், மொரட்டுவையில் இருந்து ஒரு ரயில் ஆகியன சேவையில் ஈடுபடுத்தப்படும்.

மடு ரயில் நிலையத்தில் இருந்து மடுமாதா தேவாலயம் வரை 10 பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்படும். இது தவிர மத வாச்சியில் இருந்து மடு வரையும் பவர்செட் ரயில்கள் தினமும் சேவையில் ஈடுபடும்-என்றார். (து-ச)


## தொழிற் சந்தை நாளை வலி. வடக்கில்

யாழ்ப்பாணம், ஜூலை 25
வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த தொழில் தேடும் இளைஞர், யுவதிகளுக்கான பிரதேச தொழிற் சந்தை நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தொழில் வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிறுவனங்கள் தொழிற் சந்தையில் பங்குபற்றவுள்ளதால் தொழில் தேடும் இளைஞர் யுவதிகளை தவறாது கலந்து கொண்டு தொழில் வாய்ப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு வலி. வடக்குப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

(ஜ-400)

## மரண விசாரணைக்குச் சென்ற குழு திரும்ப முடியாமல் தத்தளிப்பு



யாழ்ப்பாணம்,ஜூலை 25
நெடுந்தீவுக் கடற்கரையில் கரையொதுங்கிய சடலம் தொடர்பான மரண விசாரணைக்காக அங்கு சென்ற பதில் நீதிவான் தலைமையிலான குழுவினர் கடற்கொந்தளிப்புக் காரணமாக ஊர்காவற்றுறைக்குத் திரும்ப முடியாது சிக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நெடுந்தீவுக் கடற்பரப்பில் நேற்றையதினம் உடற்சதைகள் அற்றநிலையில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. இது தொடர்பான மரண விசாரணைகளை மேற்கொள்வதெற் கென ஊர்காவற்றுறை நீதிமன்ற பதில் நீதிவான் இ.சபேசன் தலைமையிலான குழுவினர் நெடுந்தீவுக்குச் சென்றனர்.

சடலத்தை மீட்டு விசாரணைகளை மேற்கொண்ட இந்தக் குழுவினர் கடலில் ஏற்பட்ட கொந்தளிப்புக் காரணமாக மீண்டும் ஊர்காவற்றுறைக்கு திரும்ப முடியாது சிக்கியுள்ளனர்என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கரையொதுங்கிய சடலம் சுமார் 40 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவருடையது எனவும், இது இந்திய மீனவருடையதாக இருக்கலாம் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது. (ங-400-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பிரி. பிரதமர் இல்லத்தின் முன்கறுப்பு ஜூலை நினைவு நிகழ்வு

வாய்க்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 7 மணி வரையில் உணர்வு எழுச்சியோடு இந்த அஞ்சலி நிகழ்வும் கவனவீர்ப்புப் போராட்டமும் நடத்தப்பட்டுள்ளன.

'பிரதமரே இலங்கைக்கு செல்லாதீர்கள்' எனவும், 'ராஜபக்ஷவைப் பொதுநலவாய நாடுகளின் தலைமையை ஏற்க விடவேண்டாம்' என்றும், தமிழர்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிப்பதைத் தடுத்து நிறுத்தக் கோரியும் அங்கு குடியிருந்த தமிழ் மக்கள் கோஷம் எழுப்பினர்.

பிரிட்டன் தமிழர் பேரவையின் தொண்டர் களால் அங்கு வந்திருந்த மக்களிடம் தத்தம் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பிரிட்டன் பிரதமரிடம் அழுத்தம் கொடுக்கக் கோரும் மனுக்களில் கையெழுத்தும் பெறப்பட்டது.

தமிழரின் பூர்வீக நிலங்கள் பறிமுதல் செய் யப்படுவதை நிறுத்தவேண்டுமென்றபரப்புரை போராட்டமும் பிரிட்டன் தமிழர் பேரவையால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (த-5)

### ஆஸி.படகு விபத்தில்...

ளது. எஞ்சிய குழந்தைகளின் நிலைமை என்ன என்று தெரியவில்லை.

காணாமற்போன 51 பேரில் 28 குழந்தைகள் தவிர ஏனைய 23 பேரில் இருவர் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர். காணாமற்போனவர்களைத் தேடும் பணியில் இந்தோனேஷியக் கடற்படையினர் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் உயிருடன் மீட்கப்பட்ட திருகோணமலையைச் சேர்ந்த சுதன் என்பவர் பி.பி.ஸிக்கு தகவல்தெரிவிக்கையில், ''கடந்த 15 நாள்களுக்கு முன்னர் முஸ்லிம் முகவர் ஒருவரின் மூலம் நாங்கள் 150 பேர் இலங்கையில் இருந்து இந்தோனேஷியாவுக்குவந்து சேர்ந்தோம். இலங்கையில் எமக்கு உயிராபத்து இருப்பதாலேயே ஆஸ்திரேலியாவுக்கு படகு மூலம் அகதியாகப் புறப்பட்டோம்''- என்றார்.

ஆஸ்திரேலியாவில் தஞ்சம் கோருவதற்கு ஆபத்தான கடல் பயணத்தை மேற்கொள்ளும் மக்கள் அந்த முயற்சியைக் கைவிட வேண்டிய அவசியத்தைப் இந்தச் சம்பவம் வலியுறுத்துகின்றது என்று ஆஸ்திரேலியப் பிரதமர் கெவின் ருத் தெரிவித்துள்ளார். (த-5)

### பண்டாரவன்னியன் நினைவிடத்தில் மக்களைக் குடியேற்ற முயற்சிகள்

இடமாகக் கற்பூரப் புல்வெளி பிரதேசம் காணப்படுகின்றனது. இந்த 10 ஏக்கர் காணி யாருக்கும் வழங்கப்படாமல் அரசுடைமையாக இருந்தது.

இந்தக் காணிக்குப் பின்னால், தமிழ் மக்களுக்கு 1973 ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 'பெமிற்' காணிகளையும் முஸ்லிம் மக்களைக் குடியேற்றுவதற்காக அமைச்சர் ஒருவரின் ஆதரவுடன் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் இடம்பெறுவதாகத் தெரியவருகிறது.

தற்போது வீதியின் அருகிலுள்ள 10 ஏக்கர் காணியையும் கைப்பற்றி அங்கு முஸ்லிம் மக்களை குடியேற்ற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காகக் குறித்த காணியிலுள்ள பயன்தருமரங்கள் அனைத்தும் 'பைக்கோ' இயந்திரத்தின் உதவியுடன் அழிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-5)

### இலங்கையில் இறுதிப்போரின் போது சர்வதேச நாடுகள் பொறுப்பற்ற போக்கு

போது கொல்லப்பட்டதாக அந்தக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போரின் மூலம் புலிகளை இல்லாதொழிக்க அரசு நடவடிக்கை எடுத்த காலப்பகுதியில் பொதுமக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

'' சர்வதேச சமூகம் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதைத் தவிர வேறு காத்திரமான முனைப்புக்கள் எதனையும் மேற்கொள்ளவில்லை. மனிதாபிமானச் சட்டங்கள் மீறப்பட்ட தருணத்தில் சர்வதேச சமூகம் நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளது. இறுதிக் கட்டப் போர் இடம்பெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபை, மனித உரிமைகள் சபை மற்றும் பாதுகாப்புச் சபை போன்றன இலங்கை விவகாரம் தொடர்பில் உத்தியோபூர்வமாக ஆராயத் தவறியுள்ளன" என்று அந்த அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(த-5)

## உயிரியல் செயலமர்வு நாளை ஸ்கந்தாவில்

யாழ்ப்பாணம், ஜூலை 25
ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் உயிரியல் பிரிவு மாணவர்களுக்கான இலவச செயலமர்வு ஒன்று நாளை வெள்ளிக் கிழமை முற்பகல் 9 மணி முதல் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

வித்தியாலய அதிபரும், உயிரியல் பாட ஆசிரியருமான ஆர்.ஈஸ் வரதாஸன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் கொழும்பு விசாகா றோயல் கல்லூரிகளின் வினாத்தாள்கள் மாதிரி வினாத்தாள் மற்றும் எதிர்பார்க்கை வினாக்கள் என்பன பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளதுடன் வினாத்தாள்களும் இலவசமாக வழங்கப்படவுள்ளன.

செயலமர்வில் இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள உயிரியல் பிரிவு மாணவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

(ஜ-400)

## சடலம் மீட்பு

வடமராட்சி, ஜூலை 25
பருத்தித்துறை ஓடக்கரை பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, ஓடக்கரை, ஆழ் வார் ஒழுங்கையைச் சேர்ந்த தேவராசா சுதாகரன் (வயது-33) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

இவரது இறப்புக் குறித்து பருத்தித்துறை இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா, பருத்தித்துறைப் பொலிஸாரின் நெறிப்படுத்தலில் விசாரணை நடத்தினார். மகளுக்கு வீட்டு முன்புறத்தில் கட்டப்பட்ட ஊஞ்சல் கயிற்றில் குறித்த நபர் தூக்கிட்டுக் கொண்டதாக தெரிவிக்கப்பட்டது.

(ஜ-8)

## நூல் கையளிப்பு இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 25
உலக சுகாதார நிறுவனத்தினால் யாழ். பொது நூலகத்திற்கு ஒரு தொகுதி நூல்களும் நூலக உபகரணங்களும் வழங்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் ஜி. ஏ. சந்திரசிறி பிரதம விருந்தினராக கலந்து கொள்ளவுள்ளார். உலக சுகாதார நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதிநி கலாநிதி பிர்டோசி ருஸ் றொம்மோற்றா நூலகத்திற்கான நூல்களையும் உபகரணங்களையும் கையளிக்கவுள்ளார்.

(ஜ-400)

## மரண அறிவித்தல்

### பூட்டப்பா தங்கவேல்



மஸ்கெலியாவைப் பிறப்பிடமாகவும் தில்லைகட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பூட்டப்பா தங்கவேல் நேற்று (24.07.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூட்டப்பா-கெங்காதேவி தம்பதியரின் அன்பு மகனும், கந்தையா-பாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகனும், உருத்திராதேவியின் அன்புக் கணவரும், கண்ணன், பரணிதரன், ரவீந்திரன், வாணி, திவாகரன், பிறேமன், கமலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலோஜினி, நவிந்தா, கௌசலா, கிருஷ்ணவீணன், சுஜி, சர்மினி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2013) வியாழக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வரியப்புலம்,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 077 258 2319

(29864) (10,14)

## கணினி திருத்தம்

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள்.

0779086737 GUNAA BEST PC
52,Hospital Road,Jaffna.

## மூன்றாவது பிறந்தநாள் வாழ்த்து



### செல்வன் முரளிதாசன் ஜகிதன்



திரு.திருமதி.முரளிதாசன் – அரசி தம்பதியரின் செல்வப் புதல்வன் முரளிதாசன் ஜகிதன் தனது மூன்றாவது பிறந்தநாளை இன்று (25.07.2013) வியாழக்கிழமை லண்டனில் உள்ள தனது இல்லத்தில் சிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அண்ணா, தங்கை, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமன்மார், அத்தைமார், மைத்துனர்கள், மைத்துனிகள், உடன்பிறவாச் சகோதர சகோதரிகள் அனைவரும் மண்டைதீவு வேப்பந்திடல் அம்மன் அருளால் சகல செல்வங்களும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

சோ.தனபாலசிங்கம் (அப்பப்பா)
352, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25/07/2013

## பயிற்சி வகுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25 யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து மத்தியஸ்தர்களுக்கான வகுப்புகள் எதிர்வரும் சனிக்கிழமை அரியாலையில் அமைத்துள்ள உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் மு.ப. 10 மணிக்கு இடம் பெறவுள்ளது என்று உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார்.(ற-23)

# அரியாலை ஐக்கியத்திடம் சிக்கியது குருநகர் பாடும்மீன்

யாழ்ப்பாணம், ஜூலை 25 யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழகம், மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற் றது. அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணிக்கும் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம் பெற்ற ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ற-23)



## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 25 யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக் கழகம் மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 48 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம் பெறவுள்ள அரையிறுதியாட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம்:

பி.ப 3.45 மணி
இளவாலை ஹென்றிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்.

பி.ப 4.45 மணி
பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் எதிர் நாவந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம். (ற-23)

## காந்திஜி 'ஏ' அணி சம்பியனாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 23 ஊர்காவற்றுறை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் தீவக ரீதியாக பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையே நடத்திய 11 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி 'ஏ' அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஊர்காவற்றுறை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் தம்பாட்டி காந்திஜி 'ஏ' அணியை எதிர்த்தது தம்பாட்டி காந்திஜி 'பி' அணி மோதியது.

இதில் தம்பாட்டி காந்திஜி 'ஏ' அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

(ற-23)

## போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 28 தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகம் நடந்தும் 7 பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில்வெற்றிபெற்ற அணிகளின் விவரம்:

தாவடி களியாம்பாள் விளையாட்டுக் கழக அணிக்கும் செனிஸ்ரார் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் தாவடி களியாம்பாள் விளையாட்டுக் கழக அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணிக்கும் ஆனைக்கோட்டை கலையொளி விளையாட்டுக் கழக அணிக்கும் இடையே இடம் பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில்வெற்றிபெற்றது.(ற-23)




அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 64 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்ட ஆண்களுக்கான சறுக்கு மரம் ஏறும் போட்டியில் ஒரு காட்சி. (ற-23)

## மன்னிப்பு கேட்கத் தயார்

கிரிக்கெட் உறவு பாதிக்கப்படாமல் இருக்க பி.சி.சி.ஐயிடம் மன்னிப்பு கேட்கத் தயாராக உள்ளேன் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் தலைமை அதிகாரி ஹாருண் லார்கட் தெரிவித்துள்ளார்

சர்வதேச கிரிக்கெட் சபை தலைமை அதிகாரியாக ஹாருண் லார்கட் இருந்தபோது, எதிர்கால கிரிக்கெட் அட்டவணை மற்றும் நடுவர் தீர்ப்பு மறுபரிசீலனை (டி.ஆர்.எஸ்.,) போன்ற விடயங்களில், இந்திய கிரிக்கெட் சபையிடம் மோதல் போக்குடன் நடந்து கொண்டார். இவரை, தென்னாபிரிக்க கிரிக்கெட் நிர்வாகத்தில் நியமிக்கக் கூடாது என்று பி.சி.சி.ஐ. எதிர்ப்பு தெரிவித்தது. அதையும் மீறி ஹாருண்லார்கட் தலைமை அதிகாரியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். அதனால் இரு நாட்டு கிரிக்கெட் உறவுகள் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டது.

இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள லார்கட், ''சூழ்நிலையைப் புரிந்து கொண்டு சிறப்பாக செயற்பட முயற்சிப்பேன். பி.சி.சி.ஐயுடன் மோசமான உறவு அமையும் என்று எதிர்பார்க்கவில்லை. எனக்கு தென்னாபிரிக்காவின் நலன் தான் முக்கியம். எப்போது இந்த பிரச்சினை வந்து விட்டதோ, அதைப் பொறுமையாக பேசித் தீர்க்க வேண்டும். என்னால் யாராவது புண்பட்டிருந்தால், அவர்களிடம் மன்னிப்பு கேட்கத் தயாராக உள்ளேன். '' என்று தெரிவித்தார்.(ற)



வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான உயரம் பாய்தலில் 1.71 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாமிடத்தைப் பெற்ற கோண்டாவில் இந்து மகா வித்தியாலய மாணவன் க. டிலக்ஷனுடன் பாடசாலை அதிபர் மற்றும் விளையாட்டுத்துறை பொறுப்பாசியர். (ற)

# சம்பியன் லீக் '20/20'

## போட்டி அட்டவணை வெளிவந்தது

CHAMPIONS LEAGUE TWENTY 20

சம்பியன்ஸ் லீக் '20/20' தொடருக்கான ஆட்ட அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த ஆட்டங்கள் இந்தியாவில் இடம் பெறவுள்ளன.

செப்ரெம்பர் 21ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஆட்டங்கள், ஒக்ரோபர் 6ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ளதன் படி, குழு 'ஏ'யில் மும்பை இந்தியன்ஸ், ராஜஸ்தான் ரோயல்ஸ், ஹைவெல்ட் லயன்ஸ், பேர்ஸ் ஸ்கோர்ச்சர்ஸ் அணிகள் இடம் பெற்றுள்ளன.

குழு 'பி' இல் சென்னை சுப்பர் கிங்ஸ், பறிஸ்பேர்ண் ஹீற், ரைற்றன்ஸ், ட்ரினிடாட் அன்ட் ரொபாக்கோ அணிகள் இடம்பெற்றுள்ளன.


இவைகளைத் தவிர, தகுதிகாண் ஆட்டங்களின் மூலமாக 2 அணிகள் தெரிவாக, ஒரு குழுவில் தலா ஓர் அணி இடம் பெறவுள்ளது.

தகுதிகாண் ஆட்டங்களுக்காக ஒட்டாகோ வோல்ட்ஸ், சண் றைசர்ஸ் ஹைதராபாத், பைசலாபாத் வோல்வ்ஸ் ஆகிய அணிகளோடு, இலங்கையின் '20/20' தொடரின் சம்பியன்களும் தகுதிபெற்றுள்ளன.

இந்த அணிகள் செப்ரெம்பர் 17ஆம் திகதி முதல் தகுதிகாண் போட்டிகளில் பங்குபெறவுள்ளன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோஹ்லி அபார சதம் வீழ்ந்தது சிம்பாப்வே



விராட் கோஹ்லியின் அபார சதத்தின் உதவியுடன் சிம்பாப்வே அணியை இலகுவாக வீழ்த்தியது இந்திய அணி.

சிம்பாப்வேக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணிக்கும், சிம்பாப்வே அணிக்கும் இடையிலான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. இதனால் துடுப்பெடுத்தாடக் களமிறங்கியசிம்பாப்வே அணிக்கு சிபண்டாவும், சிகந்தர் ரஸாவும் சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.இருவரும்இணைப்பாட்டமாக 72 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது மிஸ்ராவின் பந்தில் 34 ஓட்டங்களோடு வெளியேறினார் சிபண்டா.

ஒருபுறத்தில் சிகந்தர் ரஸா போராடியபோதும் மறுமுனையில் தொடர்ச்சியாக இலக்குகள் சரிந்ததால் சிம்பாப்வே அணி நிதானமான ஆட்டத்தையே வெளிப்படுத்தியது. இறுதி நேரத்தில் எல்ற்றன் சிக்கும்புரா அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.சிம்பாப்வே அணி, 50 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சிம்பாப்வே அணி சார்பாக ஷீகன்டர் ராஸா 112 பந்துகளில் 82 ஓட்டங்களையும், எல்ற்றன் சிக்கும்புரா 34 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 43 ஓட்டங்களையும், வியூசி சிபன்டா 72 பந்துகளில் 34 ஓட்டங்களையும் பெற்றனர்.


பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக அமித் மிஷ்ரா 43 ஓட்டங்களுக்கு 3இலக்குகளையும், வினய் குமார், மொஹமட் ஷமி, ஜெய்தேவ் உனத்கட், சுரேஷ் ரெய்னா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

229 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 44.5 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை இலகுவாக அடைந்தது.

2 இலக்குகளை இழந்து 57 ஓட்டங்களுடன் ஒரு கட்டத்தில் தடுமாறிய இந்திய அணிக்கு 3ஆவது இலக்குக்காக இணைந்த விராட் கோஹ்லியும், அம்பத்தி ராயுடுவும் 159 ஓட்டங்களைப் பகிர்ந்து பலமூட்டினர்.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக அணித் தலைவர் விராட் கோஹ்லி 108 பந்துகளில் 115 ஓட்டங்களையும், அம்பத்தி ராயுடு 84 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 63 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் சிம்பாப்வே அணி சார்பாக புரொஸ்பர் உற்செயா 34 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும், கைல் ஜார்விஸ் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்ட நாயகனாக இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி தெரிவானார். (ங)



## சூதாட்ட மனுத் தள்ளுபடி

ஐ.பி.எல் கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக சி.பி.ஐ., விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்ற மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

ஆறாவது ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரில் சூதாட்டம் நடைபெற்றது. இது குறித்து டெல்லி, மும்பை, சென்னை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் பொலிசார் தனித்தனியாக விசாரித்து வருகின்றனர்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட ராஜஸ்தான் அணி வீரர்கள் ஸ்ரீசாந்த், சண்டிலா, அங்கீட் சவான் உள்ளிட்ட 29 பேர் மீது மொகோகா எனும் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதியப்பட்டது.

இதனிடையே, ஐ.பி.எல் சூதாட்டம் குறித்து, சி.பி.ஐ., விசாரிக்க வேண்டும் என்று பொதுநல வழக்கு உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. இது குறித்து விசாரித்த நீதிமன்றம், மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது. (ங)

## டும்....டும்....டும்...டிண்டா



இந்திய கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான அசோக் டிண்டா, தனது காதலியான ஸ்ரேயாசியாவை கரம் பிடித்தார். இந்திய அணியின் வேகப்பந்து வீரர் அசோக் டிண்டா(வயது 29). இவர், 13 ஒருநாள் போட்டிகளில் விளையாடி உள்ளார். கடந்த ஐ.பி.எல் தொடரில் புனே வாரியர்ஸ் அணிக்காக விளையாடினார். இந்த நிலையில் தனது நீண்ட நாள் காதலியான ஸ்ரேயாசி ருத்ராவை இவர் திருமணம் முடித்துள்ளார்.

இது குறித்து டிண்டா கூறுகையில், "சில ஆண்டுகளுக்கு முன் நிகழ்ச்சி ஒன்றில் ஸ்ரேயாசியை பார்த்தேன். அதன் பின் நண்பர் மூலம் அவரின் தொலைபேசி எண் கிடைத்தது.

இதன் மூலம் எங்களின் காதல் வளர்ந்தது. இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தோம். தற்போது இது நல்லபடியாக நடந்தேறியுள்ளது'' என்று தெரிவித்துள்ளார்.இவர்களது திருமண வரவேற்பு நிகழ்ச்சி நேற்று கொல்கத்தாவில் நடைபெற்றது. (ங)

## அம்லாவும், திரிமன்னேயும் 'அவுட்'?



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் ஹசிம் அம்லாவும், இலங்கை அணி வீரரான லஹிரு திரிமன்னேயும் பங்குபற்றுவது சந்தேகத்திற்குரியதாக மாறியுள்ளது.

இரண்டாவது போட்டியில் களத்தடுப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது ஹசிம் அம்லா கால் பகுதியில் காயத்துக்குள்ளானார். இதனால் அவர் கைத்தாங்கலாகவே அழைத்துச் செல்லப்பட்டார். தற்போது அவருக்கு சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. எனினும் அவர் முழுமையாக குணமடைய இன்னும் சில நாள்கள் தேவைப்படும். இதனால் அவர் மூன்றாவது போட்டியில் பங்குபற்ற மாட்டார் என்றே தெரிய வருகிறது. எனினும் நான்காவது போட்டியில் அம்லா பங்குபற்றுவதற்கான சாத்தியங்கள் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இலங்கை அணி மத்திய வரிசை துடுப்பாட்ட வீரரான லஹிரு திரிமன்னேயும் அடுத்துவரும் போட்டிகளில் பங்குபற்ற மாட்டார் என்று தெரிவிக்கப் படுகிறது.



தென்னாபிரிக்காவுக்கு எதி [illegible] கைக் கிரிக்கெட் சபையால் அறிவிக்கப்பட்டுள்ள 16 பேர் கொண்ட குழாமில் லஹிரு திரிமன்ன இடம் பெற்றுள்ள போதிலும், அவர் அந்தப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான உடற் தகுதியை அடைந்தால் மாத்திரமே அணியில் இணைத்துக் கொள்ளப்படுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

முதலிரண்டு போட்டிகளிலும் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் போட்டித்தடை காரணமாகப் பங்குபற்றியிருக்காத இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ்,மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். எனவே அடுத்து வரும் போட்டிகளில் திரிமன்னேக் [illegible] அஞ்சலோ மத்தியூஸ் களம் இறங்குவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

இரு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நாளையும், நான்காவது போட்டி 28ஆம் திகதியும் கண்டி பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இந்த இரு போட்டிகளிலும் பங்குபற்றவுள்ள இலங்கை அணி வீரர்களின் விவரம் வருமாறு:

அஞ்சலோ மத்தியூஸ், டினேஷ் சந்திமால், லஹிரு திரிமன்ன, திலகரட்ண டில்ஷான், உபுல் தரங்க, குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்தன, அஞ்சலோ பெரேரா, ஜெஹான் முபாரக், ரங்கன ஹேரத், சச்சித்திர சேனநாயக்க, அஜந்த மெண்டிஸ், லசித் மலிங்க, ஷமின்ட எரங்க, திஸர பெரேரா, சுரங்க லக்மால். (ங)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு
## A/L 2013

கிறிஸ்தவநாகரிகம்
ஆசிரியர் S.I. கினனி (தேவா)
ஜூலை 27, 28(சனி, ஞாயிறு) 10.00-5.00
இடம்: - அக்கடமி ஒவ் லொஜிக்
(பலாலி வீதி, இலுப்பையடிச் சந்தி)

## கடைகள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு

நீர்வேலி, பருத்தித்துறை யாழ்ப்பாணம் பிரதான வீதியில் கந்தசாமி கோயிலுக்கு அருகில் அமைந்துள்ள 10 விசாலமான கடைகள் வாடகைக்கும் விற்பனைக்கும் உண்டு.
தொடர்பு: 0774348488,
021 300 7502

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0213671111

## வெளிவந்து விற்பனையாகிறது

### அசேதன இரசாயன வினாத்தொகுப்பு- I

(பண்பறி அசேதன இரசாயனவியல்)
வினாக்களுக்கு விரிவான விடையும் சுருக்கக் குறிப்புகளும்.
550/= ஆசிரியர் றிஸ்வான் M. சலாஹீதீன்

### பூபாலசிங்கம் புத்தகசாலை

| | | |
|---|---|---|
| 202, Sea street, Colombo- 11, T.P:2422321 | 309A,-2/3,Galle Rood, Wellawatta-06 T.P- 4515775 | 4,Hospital Road, Jaffna T.P- 0212226693 |


## எங்களுக்கு அவமானம்



" சாய்னா நேவால் பெருந்தொகைப் பணத்துக்கு ஏலம் எடுக்கப்பட்டார்.

இந்தியாவில் நடைபெறவுள்ள இந்தியன் பட்மின்ரன் லீக் தொடரில் தாங்கள் திட்டமிட்ட வகையில் அவமானப்படுத்தப்பட்டு விட்டதாக வீர, வீராங்கனைகள் பலர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

ஐ.பி.எல். தொடர் வெற்றியளித்ததைத் தொடர்ந்து ஏனைய விளையாட்டுத் துறைகளிலும் இது போன்ற லீக் போட்டிகளை நடத்தும் முயற்சிகள் இந்தியாவில் நடைபெற்று வருகின்றன. அதில் பட்மின்ரன் லீக் விரைவில் நடைபெற உள்ளது. இதற்கான ஏலம் அண்மையில் நடைபெற்ற போது, சாய்னா நேவால் பெருந்தொகைப் பணத்துக்கு ஏலம் எடுக்கப்பட்டார். ஆனால் ஏனைய வீராங்கனைகள் மிகக் குறைந்த விலையிலேயே வாங்கப்பட்டனர். இதனால் தமது திறனை குறைத்து மதிப்பிட்டு அவமானப்படுத்தி விட்டதாக அஸ்வினி பொன்னப்பா, ஜுவாலா கட்டா ஆகியோர் உள்ளிட்ட பலர் போர்க்கொடி தூக்கி உள்ளனர். இவர்களை சமரசப்படுத்தும் முயற்சியில் பட்மின்ரன் லீக் நிர்வாகிகள் இறங்கி உள்ளனர். (ங)


## இதுவல்லவோ புதுமை

பிரான்ஸ், சுவிஸ், ஜேர்மனி, ஹொலன்ட், இத்தாலி



10 நாள்களில் சட்டரீதியாகச் செல்ல சட்ட ஆலோசனை

### திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்

175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி:021 221 9016 - 021 568 9090

இது உண்மை, யதார்த்தம், நடைமுறைச்சாத்தியம்...

### ஐரோப்பிய நாடான சைப்பிரசில் படிக்க- ஒரு இலட்சம் வரை உழைக்க நேர்முகத் தேர்வும் - வழிகாட்டலும்

4 வருட விசா,
O/L தேவையில்லை
40 வயதுக்குட்பட்டவர்கள்

இடம் : திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
காலம் : 28.07.2013 (ஞாயிறு)

நேரம் தொலைபேசி மூலம் முற்பதிவின் போது தெரிவிக்கப்படும்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 5689090



(29926)(10,13)

## தற்போது யாழ் நகரில்...




இலங்கையில் BCAS CAMPUS மாத்திரமே வழங்கும்

## CAD & BS With MEP

Computer Aided Design & Building Studies
Mechanical Electrical & plumbing

மிக வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய கட்டட நிர்மாணத்துறையில் கணனி பட வரைஞர்களுக்கும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்குமான வேலை வாய்ப்புக்கள் நிறைந்து காணப்படுகின்றன. கணணி முறைப் படம் வரைதலில் சிறப்புத் தேர்ச்சியும் (Expert knowledge in CAD) கட்டட நிர்மாணத் தொழில் நுட்பங்கள் தொடர்பான அடிப்படை அறிவும் கொண்டோர்களுக்கான ஏராளமான தொழில் வாய்ப்புக்கள் மத்திய கிழக்கிலும் ஏனைய நாடுகளிலும் காணப்படுகின்றன. அதேவேளை கூடுதல் வருமானமும் உறுதிப்படுத்தப்படுகின்றது.

இலங்கையில் கடந்த 14 வருடங்களுக்கும் மேலாக உயர்கல்வி வாய்ப்புக்களையும் தொழிற் பயிற்சிப் பாடநெறிகளையும் வழங்கிவரும் முன்னணி நிறுவனமான BCAS CAMPUS மாத்திரமே வழங்கும் CAD & BS பாடநெறி உடனடித் தொழில் வாய்ப்பை உத்தரவாதப்படுத்தும் மேற்குறிக்கப்பட் திறன்களைப் பெற்றுத் தருவதோடு சர்வதேச அங்கீகாரம் கொண்ட இரட்டைத் தகைமைகளையும் பெற்றுத் தருகிறது. CAD & BS பாடநெறியினைப் பூர்த்தி செய்யும் மாணவர்கள் அனைவரும் உடனடித் தொழில் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ள அதே வேளை பெரும்பான்மையானவர்கள் BCAS CAMPUS இன் உதவியுடன் மத்திய கிழக்கில் CAD Draughtsman, Construction Supervisor, Junior Quantity Surveyors, Land Surveying Assistant ஆகிய தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர்...

**Duration : 6 Month**
பாடநெறி முடிவில் இரட்டைத் தகைமைகள்
- Professional Diploma in CAD
- Certificate in Building Studies.

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

## ANANDA HOMES AND CONSTRUCTIONS - சாவகச்சேரி

உங்கள் இல்லத்தைத் தரமாக அமைத்துத் தர



1. சாதாரண வீடு-16 லட்சத்திலிருந்து
   (3அறை, ஹோல், குசினி உட்பட)
2. மாடி வீடு- 35 லட்சத்திலிருந்து
   (4அறை, ஹோல், குசினி உட்பட)
3. நவீன இணைந்த குளியலறை - 2 லட்சத்திலிருந்து
4. நவீன குசினி அமைப்பு Morden Kitchen (Pantry System)
5. பழைய வீடு புனரமைப்பு செய்தல்

குறிப்பு: 1. உயர்தர தொழில்நுட்ப முறைகள் மூலம் அமைக்கப்படும்
(38421)(10,6,7) 2. வங்கிக்கடன் ஒழுங்கு செய்து தரப்படும்

அழையுங்கள்: ஆனந்தன் 021 320 5939, 0786155929

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கிகரிக்கப்பட்ட வடமாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Française de Jaffna *மட்டுமே.* இது ஓர் அரிய சந்தர்ப்பம்.மேலும் தரமான CERTIFICATEஐ பெறுங்கள்.
புதிய வகுப்புகள் மிக விரைவில்...T.P.021.222.8093
61, Kachchery-Nallur Road, Jaffna
(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

## வெளிவாரி பட்டப்படிப்பு-கொழும்பு பல்கலைக்கழகம்

வேலைவாய்ப்பு அதிகளவிலுள்ள தகவல்தொழில்நுட்ப டிகிறி. G.C.E.(O.L) சித்தியடைந்த எவரும் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்ப முடிவுதிகதி 27July.
மேலதிக விபரங்கள்: MCS, (யாழ்.பல்கலைக்கழகத்திற்கு அண்மையில்)
புலமைப்பரிசிலிற்கு:Type <BIT><your name> & send to 772395895

## BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

**Spoken English with Grammar** 1 1/2 Months
ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

**Diploma in English** 2 1/2 Months

- ✳ எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
- ✳ O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
- ✳ Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpuliyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Batch1 : 27.7.2013
Batch2 : 29.7.2013
Batch3 : 03.8.2013
Batch4 : 05.8.2013

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074
Evening & Weekend Classes for Employees also available

## கருத்தரங்கு
## A/L 2013

க.பொ.த உயர்தர சகல துறையினருக்குமான
பொதுச் சாதாரண பரீட்சைக்கானது
த. தவசேகர்
சனி, ஞாயிறு காலை 11.00-3.00
D.M.I
சுண்டிக்குளம் சந்தி.

சரவணை நாகபூசணி அம்மன் விளையாட்டுக்கழகம் நடத்தும்
## எட்டாவது மாபெரும் விளையாட்டுப் போட்டி

காலம்:- 27, 28.07.2013 (சனி, ஞாயிறு) காலை 6.00மணி முதல் இருநாள்களும்.
இடம்:- நாகபூசணி அம்மன் விளையாட்டுக்கழக மைதானம் (நாய்க் குட்டியான் திடல்)
சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், துடுப்பாட்டம், கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் தீவக அணிகளுக்கிடையில் நடைபெறும்.
28.05.2013 ஞாயிறு மதியம் 1.00 மணியளவில்
மாபெரும் மாட்டுவண்டிச் சவாரி
திறந்த போட்டியாக நடைபெறும்.
வெற்றி வீரர்களுக்கு மிகுந்த பெறுமதியான பரிசில்களும் சவாரியில் வெல்லும் காளைகளுக்கு தங்கப்பதக்கங்களும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படும்.
பதிவு இறுதித்திகதி:- 26.07.2013 மாலை 6.00 மணி
தொடர்பு:- 0779759522, 0771193777, 0779597044, 0779407445
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
சரவணை நாகபூசணி அம்மன் விளையாட்டுக் கழகம், சரவணை


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org